Registered as a News Paper

பொழிவு - 15
குவிப்பு - 02
பக்கங்கள்- 16
விலை ரூபா 40.00
பெப்ரவரி 2012

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.


Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

இலங்கையில் ஒரு நாளைக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன!

## ஒரு குழந்தை தாயின் வயிற்றில் பாதுகாக்கப்படவில்லையெனில் மனித சமுதாயம் பாதுகாப்பானதாக இருக்காது

### கத்தோலிக்க ஆயர்கள் கருக்கலைப்புச் சட்டத்திற்கு எதிராகக் கருத்து

இலங்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கருக்கலைப்புச் சட்டத்திற்கு தங்களது கடுமையான எதிர்ப்பை இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் தெரிவித்துள்ளனர். 'நியாயப்படுத்தப்படாத கர்ப்பங்களுக்கு" மட்டுமே கருக்கலைப்பு செய்ய அனுமதியளிக்க பரிந்துரைசெய்துள்ள இலங்கை அரசின் மசோதா குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள இலங்கை ஆயர்கள் ஒரு குழந்தை தாயின் வயிற்றில் பாதுகாக்கப்படவில்லையெனில் மனித சமுதாயம் பாதுகாப்பானதாக இருக்காது எனக் கூறியுள்ளனர். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



## மன்னார் மண்ணின் மகன் இலண்டனில் விமான ஓட்டியானார்



மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள நானாட்டானை பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி செபஸ்தியாம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகன் திரு. கிளெனி செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் விமான ஓட்டுனர் (Planc Pilot ) பயிற்சியை முடித்து இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் இருந்து விமான ஓட்டுனராக தன் பணியை ஆரம்பித்துள்ளார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## தவக்காலச் சிறப்பிதழ்

சிறப்புக் கட்டுரைகள் உள்ளே

## கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய துணை ஆயர்கள் திருப்பொழிவு



கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கென இரண்டு புதிய துணை ஆயர்கள் கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி கொழும்பு புனித லூசியா பேராலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டனர். மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை, மேதகு மக்ஸ்வெல் ஆண்டகை ஆகியோரே புதிய துணை ஆயர்களாகத் திருப்பொழிவு செய்யப்பட்டனர்.

கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் இந்த ஆயர் திருப்பொழிவு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தினார். இலங்கையின் அனைத்து ஆயர்களும் இன்னும் குருக்கள், துறவியர், இறைமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தவக்காலம்

"இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பிவாருங்கள்" (யோவேல் 2:12)



## தலைநகர் தந்த தமிழ்ப்பெருமகனே வாழி!

புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட கொழும்பு துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கு மன்னார் திருச்சபையின் மகிழ்வான வாழ்த்துக்களும் செபங்களும்!




## மடுத்திருப்பதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தியான இல்லத்தின் வெளிப்புறத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## நம்மையே நாம் உற்றுப்பார்க்க அழைக்கும்
# தவக்காலம்

*அது ஒரு தவக்காலம். மறைக்கல்வி ஆசிரியர் தவக்காலத்தைப் பற்றி மாணவர்களுக்கு விளங்கப்படுத்த விரும்பினார். எனவே அவர் மாணவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே நாம் இப்போது எந்தக் காலத்தில் இருக்கின்றோம்?" என்று கேட்டார். அதற்கு ஒரு மாணவன் எழுந்து, "நாம் இப்போது பாலப்பழக் காலத்தில் இருக்கின்றோம்" என்று கூறினான். அவன் பதிலைக் கேட்ட ஆசிரியர் சற்று அதிர்ச்சியடைந்தார். இருந்தாலும் தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு தவக்காலத்தைப்பற்றி விளக்கம் கொடுத்தார். தவக்காலத்தில் பாவசங்கீர்த்தனம் செய்வதன் அவசியத்தைப்பற்றி அறிவுறுத்திய மறைக்கல்வி ஆசிரியர், "பிள்ளைகளே, நம் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு இன்னுமொரு மாணவன் எழுந்து "நம் பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமானால் முதலில் நாம் பாவம் செய்ய வேண்டும்!" என்று கூறினான். மறைக்கல்வி ஆசிரியர் அதிர்ச்சியில் உறைந்துபோனார்.*

*தவக்காலம் நாற்பது நாட்கள் நீடிக்கின்றன. நாற்பது என்பது விவிலிய எண். அகமாற்றத்தையும், புற மாற்றத்தையும், புதிய சிந்தனைகளையும், புதிய உறவுகளையும் புதிய வாழ்வையும் சுட்டிக்காட்டும் எண்தான் நாற்பது.*

*வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டை அடைய இஸ்ராயேல் மக்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்த ஆண்டுகள் நாற்பது. இறைவனின் பத்துக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன்தயாரிப்பாக மோசே உண்ணா நோன்பிருந்த நாட்கள் நாற்து. ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைவதற்கு இறைவாக்கினர் எலியா நடந்த நாட்கள் நாற்பது. இலட்சிய வாழ்வை ஆரம்பிப்பதற்கு முன்பதாக ஆண்டவர் இயேசு பாலைநிலத்தில் நோன்பிருந்த நாட்கள் நாற்பது. உயிர்த்த இயேசு விண்ணேற்றம் அடைவதற்கு முன்பு இவ்வுலகில் தங்கியிருந்த நாட்களும் நாற்பது. எனவே நாற்பது என்பது ஒரு நிலையிலிருந்து இன்னுமொரு நிலைக்கு கடந்துவரும் பயண நாட்கள். இப்பயண நாட்கள் பலன் கொடுக்கும் நாட்களாக இருக்க வேண்டும்.*

*நாற்பது நாட்களைக்கொண்ட தவக்காலத்தில் நாம் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றோம். இந்நாட்களில் நாம் கடைப்பிடிக்கும் நோன்பு, செய்கின்ற இறைவேண்டல்கள், புரிகின்ற பக்தி முயற்சிகள், அறச்செயல்கள் அனைத்தும் நமது அகவாழ்விலும், புறவாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.*

*தவக்காலம் தொடங்கிவிட்டது! கொல்கொத்தா கொலைக்களத்தில் இயேசு கொடூரமாகக் கொலையுண்ட காட்சியை அடிக்கடி நினைவுகூர்கின்றோம். கொல்கொத்தா 'கொலைக்களம்' நம் மண்ணிலும் அரங்கேறியதை நாம் அறிவோம்.*

*யோவேல் இறைவாக்கினர், "உங்கள் உடைகளை அல்ல, உங்கள் உள்ளங்களை கிழித்துக்கொள்ளுங்கள்" (யோவேல் 2: 13) என்கின்றார். "முழு இதயத்தோடு வாருங்கள்" என்கிறார். இதையே திருப்பாடலின் ஆசிரியரும், "தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை இறைவன் புறக்கணிக்கமாட்டார்' என்று உறுதிப்படுத்துகின்றார்.*

*இறைவனுக்கு ஏற்புடைய இதயம் பெற மூன்று வழிகளை நற்செய்தி நவில்கின்றது. அவை தவம், செபம், தர்மம். தவம் உடலை ஒழுங்குபடுத்தவும், செபம் உள்ளத்தை ஒருமுகப்படுத்தவும், தர்மம் ஆன்மாவை ஆண்டவரிடம் திருப்பவும் உதவுகின்றன. எனவேதான் பவுலடியார், "இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பு நாள்!" (2 கொரி 6: 2) என்கிறார்.*

*ஒரு ஊரில் ஒரு இலட்சாதிபதி இருந்தார். அவரிடம் ஒரு ஞானி சென்று, "உம்மிடம் எவ்வளவு பணம் இருக்கின்றது?" என்று கேட்டார். அதற்கு அவர், "பத்தாயிரம் இருக்கும்" என்றார். இலட்சாதிபதியான அவர் வெறும் பத்தாயிரம் மட்டுமே தன்னிடம் இருப்பதாக பொய் சொல்கிறாரே என்று நினைத்த ஞானி மீண்டும் அவரிடம் "உம் வயது என்ன?" என்று கேட்டார். 'இரண்டு' எனப் பதில் வந்தது. ஞானி அவரிடம், "ஏன் இப்படிப் பொய் சொல்கிறீர்" என்று வாய்விட்டே கேட்டுவிட்டார். அதற்குப் பதிலாக அந்த இலட்சாதிபதி சொன்னார், "என்னிடம் எவ்வளவு சொத்துக்கள் இருந்தாலும் என்னுடன் வரப்போவது நான் செய்த தர்மம் மட்டுமே. அதனால்தான் நான் செய்த தர்மத்தை மட்டும் எனது சொத்தாகச் சொன்னேன். எத்தனை ஆண்டுகள் நான் வாழ்ந்தாலும், எனக்குப் பலன் அளிப்பது நான் செபத்தில் செலவிடும் நேரம் மட்டுமே. அதனால்தான் என் வயது இரண்டு என்று சொன்னேன்" என்றார்.*

*நம்மேல் நாம் கொள்ளவேண்டிய சுய உறவையும், மனித உறவையும், இறை உறவையும் புதுப்பிக்கும் காலம் தவக்காலம். நம்மையே நாம் உற்றுப் பார்ப்போம். நமது செப வாழ்வை, தவ வாழ்வை, அறவாழ்வை ஆய்வுக்கு உட்படுத்துவோம்.*

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,**
**பதிப்பாசிரியர் - மன்னா**



# வாசகர் எண்ணங்கள்

## மொட்டைப்போல் மலரும் மன்னாவே!

- மொட்டு எப்படி பூவாய் மலர்கின்றதோ அதேபோல் உன் செய்தி இப்பூவுலகில் விரிகின்றது.
- மாதம் ஒருமுறை ஒரு புனிதரை அறிய இப்பூவுலகில் பூவைப்போல் நீ மலர்கின்றாய்.
- மலரும் மொட்டுக்கள் சிறுவர் எனலாம். ஆனால் இப்போ மலரும் மொட்டாய் நீ தவளுகின்றாய்.
- மன்னாவை உண்டு மடிந்தனர் இஸ்ராயேலர். ஆனால் இன்று மன்னாவைப் படித்து மகிழ்கின்றனர் நம்மவர்.
- ஆண்டவரின் வழியில் சென்றிட ஒரு வழிகாட்டியாய் எம்மத்தியில் நீ மலர்ந்திருக்கின்றாய்.
- அம்மா என்று சொல்லி அழைத்த உள்ளமெல்லாம் இப்போ மன்னா என்று சொல்லி அழைக்கின்றது.

*வின்சன்*

## என் இனிய மன்னாவே!

மாதத்தில் ஒருமுறை மலர்ந்திடும் மன்னாவே!
உம் அடுத்த இதழ் வருகைக்காக காத்திருக்கிறோம்
நீ சுமந்துவரும் அத்தனை ஆக்கங்களும்
இனிமையிலும் இனிமை.
எம்முடைய ஆக்கங்களும் இவ்விதழில் வருமா?
ஆவலுடன் காத்திருக்கிறோம்!

*அ. நிரோஜினி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல்.*

## ஆன்மீக வாழ்வின் அறிவொளி மன்னா!

சிந்தனையின் செதுக்கலாய் செப்பனிட்ட உன் படைப்புக்கள்
பாரெங்கும் தளைத்திடுதே.

ஆன்மீக வாழ்வது அகிலத்தில் பரவிட
அறிவொளியைத் தந்தவனே ஆற்றல்மிகு போதகனே

கரைகாணாக் கல்விதனைக் கற்றுவரும் மாணவர்க்கு
எழுதுகோல் கரம்பிடித்து ஏற்றமது நீ தந்தாய்.

குன்றின்மேல் தீபமாய் குவலயத்து ஆதவனாய்
வலம் வருவாய் வாசற்படி - ஏந்தலனே
உன் பணிக்கு என்னதவம் நான் செய்வேன்?

*எ. கெவின் துவாரகா, புதிய காத்தாங்குளம் பங்கு*

## இன்பம் தரும் மன்னாவே....

வேதசாட்சிகளின் மண்ணாகத் திகழும் மன்னார் மண்ணிலே உதித்து
என் தேடலுக்கு விடிவுதர என் கரங்களில்
மாதந்தோறும் தவழும் மன்னாவே
நீ சுமந்துவரும் அனைத்து ஆக்கங்களும்
எனக்கும் என்னைச் சூழ்ந்த உறவுகளுக்கும்
பெரிதும் இன்பம் தருகின்றன.
உனது பணி மென்மேலும் சிறந்து விளங்க
என் இதயபூர்வமான நல்லாசிகள்.

*எஸ். கொண்சிலா, வண்ணாகுளம், ஆண்டாங்குளம்.*

## இறைவனுடைய வார்த்தை ஒரு மருந்து

இறைவார்த்தை நம் பாவ நோய்க்கான சிறந்த மருந்து. இதை நாம் தினமும் உண்டால் அகமும் புறமும் நலம் பெறுவோம்.

இன்றைய காலகட்டத்தில் இறைவனைப்பற்றி புரிந்துகொள்ள முடியாத கத்தோலிக்கர்களாக நாம் வாழ்கின்றோம். ஞாயிறு திருப்பலிகளில் கலந்துகொள்கின்றோம், தினமும் செபமாலை சொல்கின்றோம். ஆனால் எம்முடைய வாழ்க்கையில் பெரும்பாலும் அமைதி இல்லை, மகிழ்ச்சி இல்லை.

இன்றைய இளைஞர்கள் ஊதாரித்தனமாக குடிபோதை, கெட்ட படங்கள், சின்னவயதில் திருமணம் என்று மனம் போன போக்கில் வாழ்கிறார்கள். ஏன் இந்த நிலமை என்று நாம் யாருமே சிந்திப்பதில்லை. வாழ்க்கை பலருக்கு பலவிதமாக உள்ளது. சிலருக்கு சிரிப்பு, சிலருக்கு அழுகை, சிலருக்கு வெற்றி, சிலருக்கு தோல்வி, சிலருக்கு துன்பம், சிலருக்கு இன்பம். இதுதான் வாழ்க்கை! நமக்குத் துன்பம் வந்தவுடன் கடவுளை மறந்து துவண்டுபோகின்றோம். முதலில் அயலில் இருப்பவனை நாம் நேசிக்க வேண்டும். பகிர்ந்து வாழ வேண்டும். இறைவார்த்தையை தினமும் படிக்க வேண்டும். படித்தால் மட்டும் போதாது அவ்வார்த்தையின் வழியில் நாம் நடக்க வேண்டும். நாம் அனைவரும் இறைவனின் சாட்சிகளாக மாற வேண்டும். இது மனமாற்றத்தின் காலம், நம் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டும் காலம். நம்மை நாம் சீர்தூக்கிப் பார்த்து நம் வாழ்வை இறைவார்த்தைக்குள் கட்டி எழுப்புவோம். இந்த இறைவார்த்தைதான் நம் வாழ்வை மாற்றக்கூடிய அருமருந்து.

*தே. நிதர்ஷினி, குழந்தை யேசு வீதி, கீரி, மன்னார்.*

## காசாக்கப்படும் கல்வி

*- அருட்தந்தை*
**ஜோண்சன் (அமதி)**

இன்று சாதாரண, வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புகின்றார்கள். ஆனால் பெரும்பாலான மாணவர்களின் படிப்பில் முன்னேற்றங்கள் இல்லை. பெறுபேறுகளும் குறைவாகவே இருக்கின்றன.

அதேவேளை இப்பாடசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்கள் ரியூசன் சென்ரர்களில் தெளிவான விளக்கங்களுடன் படிப்பிக்கின்றார்கள். இந்த சாதாரண பெற்றோர் பெருந்தொகைப் பணம் செலுத்தி தங்களது பிள்ளைகளை ரியூசன் சென்ரர்களுக்கு அனுப்பி படிப்பிக்கின்றார்கள்.

ஒரு நேர சாப்பாட்டிற்கே வழியில்லாமல் இருக்கின்ற பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை ரியூசன் சென்ரர்களுக்கு அனுப்பி படிப்பிப்பதற்கு பணம் செலுத்த வழியில்லாமல் துன்பப்படுகின்றார்கள்.

ரியூசன் சென்ரர் நடத்துபவர்களும், அங்கு படிப்பிக்கின்ற ஆசிரியர்களும் தங்களுடைய வருமானத்திற்காக சாதாரண மக்களைச் சுரண்டி வாழ்கின்றார்கள்.

இதே ஆசிரியர்கள் பாடசாலையில் தெளிவாகவும், விளக்கமாகவும் இதய சுத்தியுடனும், படிப்பிப்பார்கள் என்றால் ரியூசன் சென்ரர்களுக்கு மாணவர்கள் போக மாட்டார்கள். எல்லா மாணவர்களும் முன்னேறக்கூடிய வாய்ப்புக்கள் 100% பாடசாலைகளில் உள்ளன.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

### பங்குனி

16 - கோமரசன்குளம் கல்வாரி திருத்தல விழா
19 - தூய சூசையப்பர் திருவிழா - தாழ்வுபாடு, காத்தான்குளம், இலுப்பைக்கடவை
மன்னார் ஆயரின் பெயர் கொண்டதினம்
திருமலை, மட்டுநகர் ஆயரின் பெயர் கொண்ட தினம்
மன்னார் மறைமாவட்ட மறைவாழ்வுக் கல்விப் பணியாளர் தினம்.
23 - ஓலைத்தொடுவாய் கர்த்தர் கோயில் திருவிழா
30 - பரப்புக்கடந்தான் கர்த்தர் கோயில் திருவிழா - கல்வாரிப் பங்கு பொது ஆராதனை

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி. மெசஞ்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலத்தில் பிறரன்புச் சேவை, நற்பணி ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் தூண்டுதலாய் இருக்க வேண்டும்

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் பாதுகாவலர்களாக இருக்கவேண்டுமெனத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அழைப்புவிடுத்துள்ளார். இம்மாதம் 22ஆம் திகதி திருநீற்றுப் புதனன்று ஆரம்பமாகிய தவக்காலம் தொடர்பாக அவர் வழங்கிய செய்தியிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அன்புக்கும், விசுவாச வாழ்விற்கும் நற்சான்றுகளாய் இருப்பதற்கு சவால் விடுக்கப்படும் இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒரே உடலின் உறுப்பினர்கள் என்ற உணர்வில் பிறரன்புச் சேவை, நற்பணி ஆகியவற்றில் ஒருவர் ஒருவருக்கு தூண்டுதலாய் இருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.



சகோதரத்துவம் சமூகத்தன்மை கொண்டது என்பதால் இது பிறரின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதிலும், சகோதரத்துவ திருத்தத்திற்கு இட்டுச்செல்லும் ஆன்மீக வாழ்க்கைமீது கருத்தாய் இருப்பதிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமடலில் உள்ள அன்பு செலுத்தவும், நற்செயல்கள் புரியவும், ஒருவரை ஒருவர் தூண்டி எழுப்ப கருத்தாய் இருப்போமாக (எபி 10:24) என்ற பகுதியை தலைப்பாக வைத்து இந்தத் தவக்காலச் செய்தியை திருத்தந்தை வழங்கினார்.

பிறர்மீது கருத்தாய் இருப்பது என்பது பிறரின் உடல், நன்னெறி மற்றும் ஆன்மீக வாழ்க்கைக்கு நன்மையானதனைத்தையும் செய்வதாகும். இக்காலத்தின் கலாச்சாரம் நன்மை தீமை பற்றிய உணர்வை இழந்துவிட்டதுபோல் தெரிகிறது. எனினும் நன்மை உலகில் இருக்கின்றது. அது தீமையை மேற்கொண்டுவிடும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

பிறரிடம் பொறுப்புடன் நடந்துகொள்வது என்பது பிறரின் நன்மையை விரும்பி அதற்காக உழைப்பதாகும். தீமையின் முன்னர் நாம் மௌனம் காக்கக்கூடாது. கிறிஸ்தவ சகோதரத்துவம் எப்பொழுதும் அன்பையும், இரக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் திருத்தந்தை மேலும் தெரிவித்தார்.

## அருளாளர் ஜோசவ்வாஸ் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக்கப்பட்டுள்ளது



அருளாளர் ஜோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக்கப்பட்டுள்ளது. கோவா மறைமாவட்டத்தைச் சேர்ந்த எ. பெர்னாண்டஸ் என்ற இளைஞன் 'பான் விலன்' என்ற இத்திரைப்படத்தை கொங்கணி மொழியில் உருவாக்கியுள்ளார். அடிகளாருடைய விண்ணகப் பிறப்பின் 300 ஆவது ஜுபிலி ஆண்டுக் கொண்டாட்டங்கள் 2012 ஜனவரி 16 அன்று நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2011ம் ஆண்டில் 103 பத்திரிகையாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர்

உலக அளவில் 2011ம் ஆண்டில் மட்டும் 103 பத்திரிகையாளர் கொலைசெய்யப்பட்டுள்ளனர் எனவும், இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மெக்சிகோ நாட்டில் அதிகம் எனவும் வியன்னாவை மையமாகக் கொண்ட அனைத்துலக பத்திரிகை அமைப்பு (International Press Institute) அறிவித்துள்ளது..

2009ம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக இவ்வெண்ணிக்கை அதிகரித்துள்ளது எனக் கூறும் இந்த அமைப்பு, 2009ம் ஆண்டில் 103 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டனர் என அறிவித்தது. இத்தனைபேர் கொல்லப்பட்டிருந்தாலும் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் எனப் பார்த்தால் அவை அபூர்வமாகவே உள்ளது என்றும் IPI அமைப்பு கூறியது.

## மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் மாபெரும் நட்புறவுக் கலைவிழா – 2012

பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான நட்புறவை பிறந்திருக்கும் புத்தாண்டில் மேம்படுத்தும் நோக்குடன் மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் நட்புறவுக் கலைவிழா ஒன்று இடம்பெற்றது.

கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## தேசிய விருதுபெற்ற மன்னார் மகன்



தேசிய மொழிகள் அமைச்சினால், நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட அரச சேவையாளர்களுக்கான திறந்த கட்டுரைப் போட்டியில் மன்னார் மாவட்டக் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரான திரு. எஸ். ஏ. ராஜன் குரூஸ் வெற்றிபெற்றுள்ளார்.

தேசிய ரீதியில் மும்மொழிகளிலும் நடாத்தப்பட்ட இப்போட்டியில் தெரிவாகிய ஒன்பது வெற்றியாளர்களுள் ஆங்கில மொழிமூலத்தில் இவர் மூன்றாமிடத்தை வென்றார். வடமாகாணத்திலிருந்து இப்பிரிவில் தெரிவாகிய ஒரே ஒருவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மூழ்கிக்கொண்டிருந்த கப்பலில் ஆன்மீகக் குருவின் செயல்பாடு

கப்பல் மூழ்கப்போகிறது என்பதை உணர்ந்ததும், கப்பலின் கோவிலில் இருந்த திருநற்கருணையைத் தான் அருந்தியதாகவும், பின்னர் மக்களுக்குத் தேவையான உதவிகள் செய்ததாகவும் ஓர் இத்தாலியக் குரு கூறினார்.

ஜனவரி 13ஆம் திகதி அன்று இத்தாலியின் ஒரு தீவுக்கருகே 4000க்கும் அதிகமான உல்லாசப் பயணிகளைச் சுமந்து சென்ற கொஸ்ரா கொன்கோடியா (Costa Concordia) என்ற கப்பல் மூழ்கியதில் 11 பேர் இறந்துள்ளனர். மற்றும் 21 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தக் கப்பலில் ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டிருந்த 70 வயதான அருள்தந்தை றவீலி மலனா (Rafaeli Mallena) கப்பல் மூழ்கப்போகிறது என்பதை அறிந்ததும் தான் மேற்கொண்ட முயற்சிகள் குறித்து கடல் பயணிகளின் ஆன்மீகப்பணி ஒருங்கிணைப்பாளரான அருள்தந்தைக்கு விளக்கிக் கூறினார். அப்போதே அவர் இத்தகவல்களைத் தெரிவித்திருந்தார்.



அண்மையில் கொழும்பு துணை ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்ட தமிழ்க் குருவான இம்மானுவேல் அடிகளாரை அவரது திருப்பொழிவின் பின்னர் மன்னார் ஆயர் மேதகு யோசேப்பு ஆண்டகை கட்டி அணைத்து முத்தம் கொடுத்து தமது வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவிப்பதைக் காணலாம்.

## முருங்கன் மறைக்கோட்டத்தில் சேவியர் குரூஸ் அடிகளாரின் பொன்விழா

கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு முருங்கன் மறைக்கோட்ட ரீதியில் பொன்விழா நாயகன் சேவியர் குரூஸ் அடிகளாருக்கு பொன்விழா வாழ்த்து நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய தினம் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலியும் அதைத்தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வும் இராவுணவும் இடம்பெற்றது.

## துயர் பகிர்கின்றோம்!

மன்னார் மறைமாவாட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஞானாதிக்கம் அவர்களின் அன்புச் சகோதரர் அமரர் லோறன்ஸ் ஞானசேகரம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.


அன்னாரின் குடும்பத்தினருக்கும் குறிப்பாக எமது அருட்தந்தை ஞானாதிக்கம் அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது. சிறந்த சமூக சேவையாளராக விளங்கிய அவரது ஆன்மா அமைதியில் இளைப்பாறச் செபிக்கின்றோம்.

## முருங்கனில் புனித டொண் பொஸ்கோ திருவிழா

முருங்கனில் அமைந்துள்ள டொண்பொஸ்கோ நிறுவனத்தினரால் புனித டொண் பொஸ்கோ திருவிழா கடந்த ஜனவரி 31ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களினால் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாவுக்கு முதல் நாள் மாலை 7.30 மணிக்கு அழைக்கப்பட்ட சிறப்பு விருந்தினர்களுக்கான செபவழிபாடும் இராவுணவும் இடம்பெற்றது.

## மாந்தை லூர்து அன்னை திருவிழா



மாந்தையில் அமைந்திருக்கும் புனித லூர்து அன்னை கெபித் திருவிழா கடந்த பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி காலை 7.00 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. விழாத்திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுருப ஆசீர்வாதம் இடம்பெற்றது.

## குருத்துவப் பொன்விழா

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாரின் குருத்தவப் பொன்விழா நிகழ்வுகள் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் ஏற்பாட்டில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி மன்னார் சிறிய குருமடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சேவியர் குரூஸ் அடிகளாரின் வகுப்புத் தோழரான திருமலை - மட்டுநகர் ஆயர் கிங்சிலி ஆண்டகையும் கலந்துகொண்டார். அன்றைய தினம் அடிகளாரின் வாழ்வையும் பணிகளையும் வெளிக்கொணரும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் ஏராளமான குருக்கள் துறவியர் பல்வேறு இடங்களில் இருந்து வந்து கலந்துகொண்டு அருட்தந்தையை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

## பீற்றர் துரைரெட்னம் அடிகளார் இறைபதம்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை பீற்றர் துரைரெட்னம் அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி இறைபதமடைந்தார்.

வசாவிளானை பிறப்பிடமாகக்கொண்ட அடிகளார் யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் பங்குத்தந்தையாக பணியாற்றியவர். இவர் மன்னார் மறைமாவட்டத்தில் உயிலங்குளம் பங்கிலும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கின்றோம்.


இவர் அருள்திரு ஜேம்ஸ் சிங்கராயர் (அதிபர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) அருள்திரு எட்விநாதன் (பகுதித் தலைவர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) அருள்திரு. அன்ரு தவராஜசிங்கம் (கனடா - மொன்றியல்) அருட்சகோதரி வேர்ஜி (H.C) ஆகியோரின் மாமனாரும், காலம் சென்ற அருட்சகோதரி மரிய புருடென்சியா (A.C) அருட்சகோதரி மரிய பரமேஸ் (A.C) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிறப்பிதழ்

# சிலுவைப்பாதை! வரலாறும் போதனையும்

*அருள்பணி. இம்மானுவேல்*
*நல்லாயன் குருத்துவக் கல்லூரி, கோவை.*



### முன்னுரை

இயேசுவின் பாடுகளைச் சிந்தித்துத் தியானிக்க திருச்சபை நமக்குத் தந்துள்ள நாட்களே இந்தத் தவக்கால நாட்கள். இந்த நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கொள்ளும் மிகச்சிறந்த பக்தி முயற்சிகளுள் ஒன்றுதான் சிலுவைப் பாதை. இந்தப் பக்தி முயற்சியில் பங்குபெறும்போது இயேசுவின் துன்பத்தில் நாமும் பங்குகொண்டு நமது வாழ்வை முறைப்படுத்தி வாழ நமக்கு வாய்ப்புக்கள் தரப்படுகின்றன. திருச்சபை இந்தத் தவக்கால நாட்களில் சிலுவைப் பாதை பக்தி முயற்சியைக் கடைப்பிடித்து தனி, பொது வாழ்வில் மாற்றம் காண நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது. இந்த சிலுவைப்பாதைப் பக்தி முயற்சி எப்படி உருவானது. வளர்ச்சி கண்டுள்ளது என்பதனை அதன் வரலாற்றுப் பின்னணியுடன் அறிந்துகொள்ள முயல்வோம்.

### வரலாற்றுப் பார்வை

திருச்சபையின் ஆரம்பக் காலகட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான நகரங்களாக இருந்தவை உரோமை மற்றும் எருசலேம். இயேசு பாடுகள்பட்டு சிலுவையில் மரித்த இடம் எருசலேம். அதேபோல் இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு இயேசுவின் சீடர் பேதுரு உரோமை நகருக்குச் சென்று போதித்து மக்களைக் கிறிஸ்தவர்களாக மாற வழிகாட்டுகிறார்.

ஏறக்குறைய திருச்சபையின் ஆரம்பக் காலக்கட்டத்தில் 4-5 நூற்றாண்டுகளில்தான் கிறிஸ்தவ மதம் கொன்ஸ்டன்டைன் என்ற மன்னரால் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பின் பல்வேறு நாடுகளிலிருந்தும் இயேசு பிறந்து, வாழ்ந்து, சிலுவையில் அறையப்பட்ட இடங்களைக் காண மக்கள் திருப்பயணம் மேற்கொண்டனர். மிக முக்கியமாக எருசலேம் நகர வீதிகளில் இயேசு சிலுவை சுமந்து சென்ற சாலைகளில் மக்கள் சேர்ந்து செபித்து, பாடல்கள் பாடி இயேசுவின் பாடுகளைச் சிந்தித்து வந்துள்ளதை திருச்சபையின் தொடக்க கால முதலே அறியமுடிகிறது.

இதே காலகட்டத்தில் கிறிஸ்தவ விசுவாச நிலையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு வகையான ஓவியங்கள் சித்தரிக்கப்பட்டு மக்களது பார்வைக்கு வைக்கப்பட்டன. காலம் செல்லச் செல்ல இத்தகைய அழகிய ஓவியங்களைக் கண்டு மக்கள் செபிக்கக்கூடிய நிலைகள் திருச்சபையில் உருவாயின. ஏறக்குறைய 6ஆம் நூற்றாண்டில் இத்தாலிய நாட்டிலுள்ள பொலோனா என்ற இடத்தில் வாழ்ந்த புனித ஸ்டீபன் மடாதிபதிகள் எருசலேமைச் சித்தரிக்கக்கூடிய காட்சிகளையும் இடங்களையும் வரைந்து அதிலும் சிறப்பாக இயேசுவின் பாடுகளை சித்தரிக்கக்கூடிய ஓவியங்களைத் தங்களது இல்லத்திலே வரைந்து வைத்து இயேசுவின் பாடுகளை தங்களது மடத்திலே சிந்திக்கலாயினர்.

அதேபோன்று திருச்சபையின் தொடக்கக் காலத்திலேயே ஓவியம், கலை, சிற்பம் மூலம் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவை மையப்படுத்தபட்டு கிறிஸ்தவ ஆலயங்கள் அதன் சுற்றுப்புறங்களில் அமைக்கப்பட்டன. திருப்பயணிகள் பக்தியுடன் புனித இடங்களைச் சந்தித்துச் செபிக்க வாய்ப்புக்கள் உருவாக்கித் தரப்பட்டன. இத்தகைய நிலைகள் உரோமை மற்றும் எருசலேம் பகுதிகளில் அதிகமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது. இந்த நிலையில்தான் சிலுவைப் பாதைப் பக்தி முயற்சியும் திருச்சபையில் உருவானது.

சிலுவைப்பாதைப் பக்தி முயற்சி உருவாகக் காரணமாக இருந்த இடம் புண்ணிய பூமியான எருசலேம்தான். ஏறக்குறைய 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் எருசலேம் நகரில் நல்ல சாலைகள் அமைத்து, பக்தர்கள் பக்தியாக பாடல்கள் பாடி, செபித்துச்செல்லக் கூடிய நிலை உருவாக்கப்பட்டது.

ஏறக்குறைய 1342 ஆம் ஆண்டில் புனித பூமியானது பிரான்சிஸ்கன் சபைத்துறவிகளிடம் ஒப்படைக்கப்பட்டுத் திருப்பயணிகளைக் கவரக்கூடிய வகையில் பக்தி முயற்சிகள் உருவாக்கப்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலே குறிப்பிடப்பட்ட சாலைகளில் ஒருசில காட்சிகளைச் சித்தரித்து குறிப்பாக அன்னை மரியா இயேசுவைக் காணுதல், எருசலேம் நகர்ப் பெண்களிடம் இயேசு உரையாடுதல், சிமியோனை சந்தித்தல், படைவீரர்கள் இயேசுவின் உடைகளைக் களைதல், சிலுவையில் அறைதல் போன்ற இயேசுவின் பாடுகளை ஓவியங்களாகவும் வடிவமைத்து உள்ளனர்.

14, 15ஆம் நூற்றாண்டுகள் வரை 20 - 30க்கும் மேற்பட்ட ஓவியங்களை உள்ளடக்கியதாக சிலுவைப்பாதைப் பக்தி முயற்சி அமைந்திருந்தது. இதை 1462இல் புண்ணிய பூமிக்குத் திருப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து நாட்டு "வில்லியம் லே" என்பவர் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அத்தோடு சித்தரிக்கப்பட்டுள்ள ஓவியங்கள் இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதற்கு உதவியாக இருந்தது என்றும் குறிப்பிடுகிறார். 16ம் நூற்றாண்டில்தான் சிலுவைப்பாதை '14' நிலைகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டு தற்போது உள்ளதைப்போன்று நிர்ணயிக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டது. 1686இல் திருத்தந்தை பதினொன்றாம் இன்ன சென்ற் முக்கியமான மடாதிபதிகள் வாழும் இடங்களில் சிலுவைப்பாதைப் பக்தியைக் கடைப்பிடிக்க ஆணையிட்டார்.

திருத்தந்தை பதின்மூன்றாம் பெனடிக்ட் (1726) ஒவ்வொரு கிறிஸ்தவரும் இந்தப் பக்தி முயற்சியை மேற்கொள்ளவும் அதன் மூலம் பரிபூரணப் பலனைப் பெற்றுக்கொள்ளவும் முடியும் என்று ஆணை பிறப்பித்தார். அதன்பின் திருத்தந்தை பன்னிரெண்டாம் கிளமெண்ட் (1731) எல்லாக் கோவில்கள், பேராலயங்கள், திருத்தல வளாகங்கள், சிற்றாலயங்கள், கல்லறைத் தோட்டங்களிலும் இந்தப் பக்தி முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என கிறிஸ்தவ மக்களைப் பணித்தார். அதன் அடிப்படையில் 17ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தப் பக்தி முயற்சி திருச்சபையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதை உணரலாம்.

### சிலுவைப்பாதையின் போதனை

"என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்" (மத் 16:24) என்பது இயேசு ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் அழைப்பு.

- சிலுவைப்பாதை வெறும் வெளிச்சடங்கல்ல:
- இயேசுவின்மீது பரிதாபப்பட்டு கண்ணீர் வடிப்பதற்குமல்ல:
- மாறாக, சிலுவைப்பாதை நம் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்கக் கிடைக்கும் வாய்ப்பு.
- கடவுளுடன் நம் உறவைப் புதுப்பித்துக்கொள்ளும் அரிய வாய்ப்பு.

சிலுவைப்பாதை நம் வாழ்க்கைப் பாதையாக மாறும்போது நாம் ஒவ்வொருவரும் மறுகிறிஸ்துவாக மாற முடியும். இதற்காகத்தான் கடவுள் தம் மகன் இயேசுவின் மூலம் இத்தனை துன்பங்களை நாம் உணர்ந்து பங்கேற்க வாய்ப்பு தருகிறார்.

யூத மக்கள் சிலுவையை அவமானத்தின் சின்னமாகக் கருதி கொலை பாதகர்களையும் நாட்டுத் துரோகிகளையும் தண்டிக்கப் பயன்படுத்தினர். இத்தகைய சிலுவை மரணம் ஒரு மனிதனுக்கு வாய்க்கின்ற அவலத் தீர்ப்பாகத்தான் அமைந்திருந்தது.

ஆனால் இத்தகைய அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை இயேசு சுமந்து அதிலே தமது உயிரைக் கையளித்ததன் மூலம் அது மகிமை பெறுகிறது (1கொரி 1:18). இயேசுவின் சிலுவை வெற்றியின் சின்னம், மனுக்குலம் அனைத்திற்கும் பலியான மாசற்ற செம்மறி அதில் தொங்கி, இறந்து, நமக்கு மீட்பைப் பெற்றுத்தந்தார். இடறலாகக் கருதப்பட்ட சிலுவை மனித குலம் முழுமைக்கும் வாழ்வுப் பாதையாகவும் இயேசுவின் காயங்களாலே நாம் குணம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பாகவும் உள்ளது (காண். 1 பேதுரு 2:24).

எனவேதான் மனிதர்களால் மடமையாக எண்ணப்பட்ட சிலுவைச் சின்னம், இயேசுவின் இறப்பினால் வாழ்வின் ஊற்றாக உருவெடுக்கிறது. இஸ்ரயேல் மக்களுள் பாலைநிலத்தில் கொள்ளிவாய்ப் பாம்புகளால் கடியுண்டவர்கள் நலமடைய மோசே வெண்கலப் பாம்பைக் கம்பத்தில் ஏற்றினார். அதை உற்று நோக்கிய அனைவரும் உயிர்பெற்றார்கள் (எண் 21:9). அதே போன்றுதான் இயேசுவின் சிலுவைச் சாவு மனித இனம் முழுவதற்கும் அருள் வாழ்வைப் பெற்றுத் தருகிறது.

அத்தோடு சிலுவையில் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே தொங்குகிறது. இயேசு கடவுளையும் மனிதரையும் இணைக்கும் பாலமாக இருக்கிறார். படைப்பின் தொடக்கத்தில் இருந்த உறவு நிலையில் ஏற்பட்ட விரிசலை இயேசு போக்கினார். இயேசு தமது உயிரைச் சிலுவையில் அர்ப்பணித்ததன் மூலம் கடவுளையும் மனிதரையும் இணைக்கின்ற உறவுப் பாலமாகத் திகழ்கின்றார். பலியும் பலிப்பொருளுமாகிய இயேசு பலியாகப் போகும் கழுமரத்தைத் தாமே சுமந்து சென்று தம் உயிரைக் கொடுத்ததன் மூலம் கடவுளையும் மனிதரையும் இணைக்கிறார்.

அத்தோடு சிலுவையிலே இயேசு மனிதரையும் மனிதரையும் இணைக்கிறார். இயேசு அறையப்பட்ட சிலுவையின் இரு பக்கமும் இரு மனிதர்கள் அறையப்பட்டிருந்தனர். இதன் மூலம் மனிதரை மனிதருடன் இணைக்கும் உறவின் பாலமாக இருந்து தம்மையே மனிதருடன் ஒண்றிணைக்கிறார். இயேசுவின் இறப்பால் மனிதர் மனிதருடன் இணைக்கப்படுகின்றனர். ஏனெனில் சிலுவையின் மகத்துவமே இறையன்பிலும் பிறரன்பிலும் இணைவதில்தான் அடங்கி உள்ளது. அதுதான் சிலுவையின் சிறப்பு. இந்த இரண்டையும் பிரிக்க முடியாது. ஒன்றில்லாமல் மற்றது இல்லை. ஏனென்றால் சிலுவைக்கு எப்படி குறுக்குச் சட்டமும் நெடுஞ்சட்டமும் அவசியமோ அதேபோன்றதுதான் நமது கிறிஸ்தவ வாழ்வும்.

சிலுவைப்பாதைப் பயணம் நமது தேவைகளுக்காக நாம் மேற்கொள்ளும் திருப்பயணம் அல்ல. மாறாக இயேசுவின் மனநிலை, மதிப்பீடுகள், நெஞ்சுரம் நமது அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வுக்கு தேவை என்பதற்காகத்தான். இயேசுவின் பாதையில் நடப்போம்: புதிய மனிதர்களாக, உறவை ஏற்படுத்தும் உத்தமர்களாக வாழ உறுதி எடுப்போம். ஏதோ கடமைக்காகக் கலந்துகொள்ளாமல் இயேசுவின் சிலுவைப்பாதை நம் வாழ்க்கைப் பாதையாக அமைய வேண்டும் என்ற சிந்தனையோடும் இறை மனித உறவை வளர்க்கும் ஆர்வத்துடனும் பங்கேற்றால் நமது தனிவாழ்வும் பொதுவாழ்வும் நிச்சயம் மாற்றம் பெறும். ■

# தவக்காலம் அருளின் காலம்

அருட்சகோதரி யோகா *scjm.*




தவக்காலம்! இது ஒரு அருளின் காலம். இறையன்பை உணரவும் அதை அனுபவிக்கவும் கிடைத்த உன்னத காலம். கிறிஸ்தவர்கள் நம்மைப் புடம்போட மீண்டும் ஒரு தவக்காலம். கிறிஸ்துவில் வாழவும் அவரில் வளரவும் அன்னையாம் திருச்சபை எமக்குத் தரும் வரப்பிரசாதம்தான் இந்தத் தவக்காலம். மண்ணால் உருவான மனிதன் மண்ணுக்கே திரும்புவான். ஆகவே செபம் தபம் இரக்கச் செயல்களினூடாக மனந்திரும்பி நற்செய்தியை நம்பும்படி அழைப்பு விடுக்கும் விபூதிப் புதனுடன் ஆரம்பமாகும் இத்தவக்காலமானது நாற்பது நாட்கள் பயணித்து இயேசுவின் பாஸ்காவில் நிறைவடைகின்றது.

இத்தவக்காலமானது இயேசுவின் மீட்புத்திட்டத்தை அறியவும் விசுவசிக்கவும் இப்புதிய திருவழிபாட்டுக்காலமானது துணைபுரிகின்றது. இறைவனின் மீட்புத் திட்டத்தை ஏனைய அருட்சாதனங்களினூடாக நாம் அறியக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பினும் இத்தவக்காலமானது மிகவும் சிறப்பானது. இது ஒரு வெறும் சிந்தனையாகவோ அல்லது வெறும் விழாவாகவோ அல்லாமல் இது ஆட்தன்மையுடையதாகக் காணப்படுகின்றது: அது இயேசுவில் பிரதிபலித்தது. மனுக்குலத்தின் மீட்பிற்கான இறையன்பு இன்று அருட்சாதனங்களினூடாக திருச்சபையில் அடையாளங்களாகக் காணப்படுகின்றது. வருடம் முழுவதுமான திருவழிப்பாட்டில் இயேசுவின் பாஸ்கா மறைபொருளான பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு என்பவற்றை தியானிக்க அழைக்கப்படுகின்றோம்.

குறோசிமா எனப்படும் இத்தவக்காலமானது திருவழிபாட்டில் எப்போது உள்வாங்கப்பட்டது என்பது அறியப்படாத ஒன்று. ஆனால் ஞாயிறு திருவழிபாட்டை கருத்தாகக் கடைபிடித்த ஆரம்பகால கிறிஸ்தவர்களிடையே இயேசுவின் உயிர்ப்பை நினைவுகூர முக்கிய ஆன்மீகப் பயணமாக மனந்திரும்புதலும் [illegible] காணப்பட்டன. கி. பி. 2ம் நூற்றாண்டில் இத்தவக்கால முறைமை திருவழிபாட்டில் உள்வாங்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. கிறிஸ்தவர்கள் தம்மை பாஸ்காவிற்கு ஆயத்தம் செய்யும்விதமாக இத்தவக்கால முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

வெள்ளிகிழமை உபவாசமிருந்து செபம், தபம், தானதருமங்கள் மூலம் தம்மை ஆயத்தப்படுத்தி உயிர்ப்பு விழாவினை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட இத்தவக்காலமானது பெரும் துணையானது.

எது எப்படி இருப்பினும் ஆரம்பகால கிறிஸ்தவர்களின் விசுவாசமும் அர்ப்பணிப்பும் எமக்கு கிடைத்த பெரும் கொடைகளே. கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை தியானித்து வாழ அழைக்கப்படும் நாம் மறு கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம் என்பதை மறக்கலாகாது.

செபிக்கவும், ஒறுத்தல்கள் செய்து ஏழைகளுடன் பகிர்ந்துகொள்ளவும் கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவரையும் இப்புண்ணிய காலம் அழைக்கின்றது. எம்மனைவரையும் கிறிஸ்துவின் பாதையில் வழிநடத்தி அவரில் வாழ்ந்து எல்லோருடனும் மகிழ்ந்திருக்க இக்காலம் வழிசமைப்பதாக. இத்தவக்காலம் எல்லோருக்கும் அருளின்காலமாக விளங்குவதாக. ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

வாழ்வது ஒருமுறை
வாழ்த்தட்டும் தலைமுறை

# தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையானது தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்த வேண்டும்

## மன்னார் ஆயர் மேதகு யோசேப்பு ஆண்டகை



தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமை தமிழ் தேசிய அரசியலைப் பலப்படுத்துவதாக அமைய வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். தமிழ் சிவில் சமூகத்தின் சார்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தனுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே யோசேப்பு ஆண்டகை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ்ச் சமூகத்தினரால் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அனுப்பப்பட்ட அறிக்கைக்கு பலவிதமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சிவில் சமூகத்தின் சார்பில் எழுதியுள்ள கடிதத்தில் யோசேப்பு ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் சிவில் சமுகத்தின் அறிக்கை தமிழ் அரசியல் சமுகத்தினுள் தமிழரது அரசியல் எதிர்காலம் தொடர்பில் முக்கிய விவாதம் ஒன்றிற்கு வழிவகுத்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதற்கான ஒன்றல்ல என்றும் தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்துவதும் அதனூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை திடப்படுத்துவதுமே அதன் நோக்கம் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## எமது வாழ்வுக்கு புதுப்பொலிவும் ஊக்கமும் கிடைத்த

# இந்த நாட்களை மறக்க முடியாது

### பேசாலை மலரும் மண உறவுப் பயிற்சியில் பங்கேற்ற தம்பதியர் கருத்து



அண்மையில் மன்னார் குடும்பப் பணி, பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மலரும் மண உறவுப்பயிற்சி நெறியானது பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தின் கேட்போர்கூடத்தில் 2012 தை மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு இதில் பங்குபற்றிய தம்பதியினர் கூறினர்.

இப்பயிற்சியை மன்னார் மறைமாவட்டத்தில் முதல் தடவையாக அறிமுகம் செய்துவைத்து பெரும் சிரமங்கள் மத்தியில் ஒழுங்குபடுத்திய மன்னார் மறைமாவட்ட குடும்பப் பணி பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி எஸ். தேவறாஜா கொடுதோர் அவர்களுக்கு உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்தனர்.

இப்பயிற்சியை முன்னின்று நடாத்திய யாழ் மறைமாவட்ட அகவொளி குடும்பப் பணி நிலைய இயக்குனர் அருட்பணி எஸ். இராஜநாயகம் அடிகளார் மற்றும் அவர்களுடன் இணைந்து வந்து இப்பயிற்சியை நடாத்திய குடும்பங்களுக்கும் நன்றிகளை தெரிவித்தனர்.

இப்பயிற்சி நெறியானது 13 விதமான அமர்வுகளாக நடைபெற்றது. இதில் அடங்கிய விடயங்கள்:

- அறிமுகமும் நோக்கமும்.
- நம் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளுதல்.
- தன்னை அறிதல், மதிப்பிடுதல் • இன்றைய உலகின் திருமணம் (திருமணத்திற்கான ஆயத்தம்). • இதயத்தில் இருந்து செவிமடுத்தல்.
- ஒருவருக்கொருவர் நெருக்கமடைவதற்கான வழிமுறைகள். • கடவுளின் விருப்பத்தின்படி திருமணம்.
- தன்னம்பிக்கை கொள்வதற்கான துணிச்சல்.
- நம் தினசரி வாழ்வின் உரையாடலின் தாக்கம்.
- திருமணம் ஓர் அரும் அடையாளம். • திருமண உறவுக்கு முதலிடம் கொடுத்தல். • கனவுகளின் மூலம் திருமண அடையாளத்தை பகிர்ந்துகொள்ளல்.
- நம் பயணத்தை தொடருதல், ஆய்வு அனுபவப்பகிர்வு.

இவ்வாறான மிகமுக்கியமான வாழ்க்கைக் கருத்தியல்புகள் அடங்கிய பல ஆழமான விடயங்கள் அனைத்தும் பகிரப்பட்டதன் விளைவாகவே இதில் பங்குபற்றிய தம்பதியினரின் குடும்ப வாழ்வில் மாற்றங்களை காணமுடிந்தது.

இப்பயிற்சிநெறியானது படிப்படியாக மன்னார் குடும்பப் பணி பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் மன்னார் மறைமாவட்டத்தின் ஏனைய குடும்பங்களுக்கும் கொண்டுசெல்லப்படவுள்ளது.

இத்திட்டம் உலகளாவிய ரீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக எமது நாட்டில் இந்தியாவிலிருந்து வருகை தந்த குருக்கள் பணியாளர்கள் மூலமாகவே இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

இப்பயிற்சியை தொடர்ச்சியாக ஏனைய குடும்பங்களுக்கும் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றி பயனடைந்த குடும்பங்களிலிருந்து நான்கு குடும்பங்களும் இத்திட்டத்தை மன்னார் குடும்ப பணி பொதுநிலையினர் ஆணைக்குழுவோடு இணைந்து செயற்படுவதற்கென தலைமைத் தம்பதியினர் மற்றும் செயலாளர் போன்றோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## தோட்டவெளி வேதசாட்கிகளின் இராக்கினி ஆன்மீக மைய்த்தின் நிகழ்வுகள்

தோட்டவெளியில் அமைந்துள்ள வேதசாட்சிகளின் இராக்கினி ஆன்மீக மையத்தின் இயக்குனர் அருட்பணி. யூட் குரூஸ் அவர்களின் தலைமையில் அந்த மையத்தில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:

- மாதத்தின் 2ம், 4ம் சனிக் கிழமைகளில் காலை 9.30 - மாலை 3.00 மணி வரை முழு நாள் உபவாசத் தியானம்.
- ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் மாலை 4.30 - 7.00 மணிவரை நற்செய்திக் கூட்டமும் பரிந்துரையும்.
- ஒவ்வொரு முழு மதி (போயா) தினத்தின் முந்தின நாள் இரவு 9.30 - அதிகாலை 5.00 மணிவரை திருவிழிப்பும், செபமும், நற்செய்தி அறிவிப்பும்.
- ஒவ்வொரு நாளும் மாலை 3.00 - 5.00 மணிவரை மக்களின் செபக்கருத்துக்கான பரிந்துரைச் செபம்.
- மாதத்தில் வரும் 5ம் சனி பங்குனி 31, ஆனி 30, புரட்டாதி 29 போயா ஆகவே 15ம் திகதிகளில் மார்கழி 29 வருட இறுதி நாள் ஆகவே 15ம் திகதிகளில் கணவன் மனைவியருக்கான சிறப்புத் தியானம் காலை 9.30 - மாலை 3.00 மணி வரை தியான இல்லத்தில் இடம்பெறும். • மாதத்தின் முதல் வெள்ளி ஓலைத்தொடுவாய் கத்தர் ஆலயத்தில் மாலை 5.00 - 7.00 வரையும், மாதத்தின் 3ம் வெள்ளி வவுனியா இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5.00 - 7.00 மணி வரையும்,
- மாதத்தின் முதல் செவ்வாய் பெரியகட்டு அந்தோனியார் ஆலயம் மாலை 4.30 - 6.30 மணி வரையும், மாதத்தின் 3ம் செவ்வாய் கறுக்காக்குளம் தூய அந்தோனியார் ஆலயம் மாலை 5.00 - 700 மணிவரையும் சிறப்பு நற்செய்தி அறிவிப்பும் ஆராதனையும் இடம்பெறும்.

**உங்கள் கருத்துக்களை இயக்குனர், வேதசாட்சிகளின் இராக்கினி ஆன்மீக மையம், எருக்கலம்பிட்டி, மன்னார், என்ற முகவரிக்கு அனுப்பவும்.**

### உங்கள் கவனத்திற்கு

**உங்கள் பங்கில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் பற்றிய செய்திகளை எமக்கு அனுப்பிவையுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.**
- பதிப்பாசிரியர்

## முருங்கனில் ஊடகவியல் கற்கைநெறி

ஊடகவியல் அறிவை வழங்கும் நோக்கோடு முருங்கனில் ஊடகவியல் கற்கைநெறி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 17.01.2012 அன்று குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களால் காலை 9.30 மணியளவில் இக்கற்கைநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அருட்பணி. லக்ஸ்சன் டி சில்வா அவர்களின் முயற்சியில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த ஊடகவியலாளர் திரு. நிக்ஷன் அவர்களால் இக்கற்கைநெறி நடாத்தப்பட்டது.

சுமார் இருபத்தைந்து இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துள்ளனர். இக்கற்கைநெறியானது மாதத்திற்கு ஒரு தடவையாக ஆறு மாதம் நடைபெறும். இக்கற்கைநெறி முற்றிலும் இலவசமானது என்பது குறிப்பிடத்தக்கது.

*தகவல் : ஜஸ்மின் ஷறோன்.*

## மறைக்கல்வி மாணவர்கள் சிறப்பித்த தெற்கிலுப்பைக்குளம் திருவிழா

வவுனியா பங்கின் துணை ஆலயமான தெற்கிலுப்பைக்குளம் கிராமத்தின் பாதுகாவலரான புனித செபஸ்ரியார் திருவிழா கடந்த மாதம் 19.01.2012 - 22.01.2012 வரை சிறப்பாக நடந்தேறியது.

நற்கருணை நாள் அன்று திருவுளப்பணியாளர் சபையின் இலங்கைக்கான மாகாண முதல்வர் அருட்பணி. சகாயநாதன் (IVD) அடிகளாரினால் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

22.01.2012 அன்று காலை 7.30 மணிக்கு பங்குத் தந்தை பெப்பி சோசை அடிகளாரும், தியாக்கோன் அருள் குமரனும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாருடன் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

அன்பியம் ஊடாக மறைக்கல்வி மாணவர்கள் நவநாட்களைச் சிறப்பித்தமை இவ்விழாவின் சிறப்பு அம்சமாகும்.

## மன்னார் ஆயர் நோர்வே தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான நோர்வே தூதுவர் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களை கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து உரையாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கல்வி ஆண்டு சிறப்புக் கட்டுரை

# மறைக்கல்விப் பொழிவு

# எல்லார்க்கும் மறைக்கல்வியின் ஏழுபடிகள்..!

அருள்பணி. ஆ. செபஸ்தியான்,
தமிழக மறைக்கல்விச் செயலாளர்.

எல்லோர்க்கும் மறைக்கல்வி என்றால் என்ன? எப்படி இதனை செயல்படுத்துவது? மற்றும் எவ்வாறெல்லாம் இதனைப் பரவலாக்கலாம்? என்று இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

### கிறிஸ்துவ வாழ்வின் உயரிய நோக்கம்

கிறிஸ்துவ வாழ்வின் நோக்கம் நம் ஆண்டவர் இயேசுவின் நற்செய்திக்கு சான்றுபகர்வதே! அப்போதுதான் எல்லா தலைமுறையினரும் ஆண்டவரின் அன்பையும் ஆவியாரின் ஆற்றலையும் ஆண்டவர்வழி மீட்பையும் உணர்ந்து வாழ்ந்து சான்று பகர முடியும். இதுவே கிறிஸ்தவ நம்பிக்கை!

### இத்தகைய கிறிஸ்துவ நம்பிக்கையின் தொடக்கம் எது?

நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கடவுள் நம்பிக்கையின் விதையை ஊன்றியுள்ளார். இதனை வளர்ச்சிபெறச் செய்து முதிர்ச்சி அடையச் செய்வது திருமுழுக்குப்பெற்ற நம் ஒவ்வொருவரின் கடமையும் உரிமையுமாக உள்ளது (பொது மறைக்கல்வி வழிகாட்டி,173). இந்தக் கடமை எல்லார்க்கும் உண்டு. ஆகவேதான் எல்லார்க்கும் மறைக்கல்வி அவசியமாகிறது. திருச்சபையானது இந்த அழைப்பை இறைமக்கள் வாழ உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் என்ற இலக்கை எல்லாரும் "உண்மையிலும் அன்பிலும்" (எபே 4:15) வாழ்ந்து காட்டுவதின் வழியாக நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம்.

### எல்லார்க்கும் மறைக்கல்வியே இலக்கு

எல்லார்க்கும் மறைக்கல்வி என்ற இலக்கை, நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியை, நமது உயிரோட்டமுள்ள அன்பின் சமூகங்களில் குடும்பம் மற்றும் பங்கின் வழியாக அடையலாம். இன்னும் சிலர் கேட்கிறார்கள்: நம்பிக்கை வாழ்வை ஏன் பகிர்ந்துகொள்ள வேண்டும்? நான் மட்டும் என் நம்பிக்கை வாழ்வை வாழ்ந்தால் போதுமே! எனக்கு ஏன் அடுத்தவரைப் பற்றிய அக்கறை? இதற்கு நம் ஆண்டவர் இயேசுதான் பதில்: இயேசு தனியாக செயல்படுவதைத் தவிர்த்தார். திருத்தூதர்களை ஒன்று கூட்டினார். அவர்களோடு வாழ்ந்தார் அவர்களுக்குப் போதித்தார் அவர்களோடு செபித்தார் அவர்களை "இருவர் இருவராக அனுப்பினார்" (லூக்10:1-2).


இன்னும் சொல்லப்போனால் நமது முதல் அன்பின் நம்பிக்கைச் சமூகம் எது தெரியுமா? அதுதான் நமது குடும்பம்! இயேசு ஆண்டவருக்கும் அப்படியே! கடவுளின் அன்பையும் இயேசு ஆண்டவரின் அருளையும் முதலில் நம் குடும்பத்தில்தான் அனுபவிக்கின்றோம். மன்னிப்பையும் பிறரை அன்பு செய்வதையும் உதவிபுரிவதையும் முதலில் நாம் குடும்பத்தில்தான் கற்றுக்கொள்கிறோம். குடும்பம் நம் நம்பிக்கை வாழ்வின் வளர்ச்சியின் மையமாக உள்ளது.

அடுத்து பங்கு இறைமக்களின் நற்கருணை குழுமமாகவும், திருவழிபாட்டு வாழ்வின் இதயமாகவும் பங்கு இருக்கிறது. மேலும் பங்கு சிறார்கள், பெற்றோர்கள், மற்றும் பெரியோர்களின் மிகச்சிறந்த மறைக்கல்வித் தளமாக உள்ளது (கத்தோலிக்க மறைக்கல்வித் தொகுப்பேடு, 2226). எல்லோர்க்கும் மறைக்கல்வி என்பது நம்பிக்கைகொண்டோர் அனைவரும் தமது அன்பின் சமூகங்களை கட்டியெழுப்புவதிலும் உயிரோட்டம் உள்ளதாக அவற்றை மாற்றுவதிலும் ஈடுபடுவதையே குறிக்கிறது. இது நடைபெற உறுதியான முறையான மறைக்கல்வி என்ற நம்பிக்கை வாழ்வு பயிற்சி பங்கின் எல்லா நிலையினருக்கும் அவர் தம் வாழ்வின் தொடர் மனமாற்றத்திற்கு இட்டுச்செல்லக்கூடியதாய் தரப்படவேண்டும்.

### எல்லார்க்கும் மறைக்கல்வி = முதிர்நிலையினர் மறைக்கல்வி

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபை முதிர் நிலையினர் மறைக்கல்வியைக் கையாள வேண்டுமென வலியுறுத்துகிறது (பொதுநிலையினர் திருத்தூதுபணி, 4) எனினும் இன்று நமது பங்குகளில் அதிகமாக சிறார்களின் மறைக்கல்வியே (பள்ளி மற்றும் ஞாயிறு மறைக்கல்வி) நடைபெறுகின்றது. ஆனால் இன்று திருச்சபை மறைக்கல்வியை நம்பிக்கை வாழ்வுத் தொடர்பயிற்சியாக, இலகுவான நெகிழ்வுத்தன்மை கொண்டதாக (பொதுமறைக் கல்வி வழிகாட்டி, 4) மாற்ற அழைக்கிறது. இதுதான் எல்லோர்க்கும் மறைக்கல்வி! இது நமது நம்பிக்கை வாழ்வுப் பயணத்திற்கு தொடர்ச்சியையும், எல்லா நிலையினருக்கும், கொடுக்கப்படவேண்டும்.

*இதனை ஏழு படிகளில் செயலாக்கம் பெறச்செய்யலாம்.*




### முதல்படி மறைக்கல்வியின் செயல்கள்

எல்லார்க்கும் மறைக்கல்வியில் பொதுமறைக்கல்வி வழிகாட்டி பின்வரும் மறைக்கல்விச் செயல்களைப் பரிந்துரைக்கிறது.

1. உண்மையின் புரிதலை ஆழப்படுத்துவதே மறைக்கல்வி. இதைத்தான் மறைப்போதகம் என்கின்றோம். மறைப்போதகமே முதல் செயல்.
2. மறைக்கல்வியானது அர்த்தமுள்ள வழிபாட்டிற்கு இட்டுச்செல்லும் வழிபாட்டுக் கல்வியாகத் தரப்படவேண்டும்.
3. மறைக்கல்வியானது ஆண்டவர் இயேசுவிடம் திரும்பிச்செல்லும் மனமாற்றத்தின் வழிகளைத் தரும் அறநெறி பயிற்சியையும் தரவேண்டும்.
4. மறைக்கல்வி இறைவேண்டல் செய்யக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
5. மறைக்கல்வி சமூக அக்கறையை வளர்க்க வேண்டும்.
6. மறைக்கல்வி சிறு குழுமங்களை (அன்பியங்களை) கட்டி எழுப்ப வேண்டும்.
7. மறைக்கல்வி நமது பல்சமய சூழமைவில் வாழவும், சாட்சியம் பகிரவும் உதவவேண்டும்.
8. அனைத்திற்கு மேலாக மறைக்கல்வி இயேசுவின் வழியில் வாழ மனமாற்றத்தை தந்து வழி நடத்தவேண்டும்.

அடேங்கப்பா! மறைக்கல்வியில் இத்தனை செயற்பாடுகளா என்று நாம் வியக்கலாம். இதுதான் உண்மை. இதுதான் எல்லார்க்கும் மறைக்கல்வியின் நோக்கம்! பங்கு அளவில் இத்தனை மறைக்கல்விச் செயல்களை நிறைவேற்ற முடியுமா? இவற்றில் எதனை முன்னிறுத்துவது?

### இரண்டாம்படி : கிறிஸ்துவில் வாழும் வழியே மறைக்கல்வி

கிறிஸ்துவ வாழ்வின் அடிப்படையே மறைக்கல்வி. இது நமது நம்பிக்கை வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது. மறைக்கல்வி மிக முக்கியமாக எல்லாருக்கும் தேவையானது. எல்லா நிலையினருக்கும் எல்லா காலத்திற்கும் ஏற்றது. இது மிக அவசியமானது. காரணம் ஒவ்வொருநாளும் எல்லா கிறிஸ்தவரும் முழு நம்பிக்கையாளராக வளர பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

நமது பங்கு கிறிஸ்தவ வாழ்வின் மையம். ஞாயிறு திருப்பலிக்குக்கூடும் இறைமக்கள் கூட்டமே இதற்குச் சான்று. எனவே இந்தக் கொண்டாட்டத்தை வாழ்வாக்குவதே மிகச்சிறந்த மறைக்கல்வி ஆகும்.

### மூன்றாம்படி - மனமாற்றமே மறைக்கல்வியின் அடித்தளம்

பொது மறைக்கல்வி வழிகாட்டி (1997) மனமாற்றமே எல்லார்க்கும் மறைக்கல்வியின் அடித்தளம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நாம் தொடர்ந்து நமது இதயத்தை இயேசுவை நோக்கி திருப்புவதையே மனமாற்றம் என்கிறது. இதைத்தான் நாம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் (பொது மறைக்கல்வி வழிகாட்டி, 62).

நம் இதயத்தை இயேசுவை நோக்கித் திருப்பி அவரை உற்றுப் பார்த்தல் என்ற செயல் மறைக்கல்விக்கு முன்னால் நடைபெறவேண்டும்.

இவ்வாறு நமது மனமாற்றம் இந்த நம்பிக்கை வாழ்வுப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் அடித்தளம் இடுகிறது.

இன்று மறைக்கல்வி என்றாலே "உடனடிக் கல்வியாக" இருக்கிறது! உடனடியாகக் கற்றுக்கொடுக்க வேண்டும். உடனடியாகக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த உடனடி உலகத்தில் மனமாற்றத்திற்கு ஏது வழி? நல்ல கேள்வி?

இன்னும் சொல்லப்போனால் ஒருசில மறையுண்மைகளை கற்றுக்கொள்வதால் மறைக்கல்வி பெற்றுவிட்டோம் என்று பலரும் நினைக்கின்றோம். ஆனால் நாம் ஏற்றுக்கொள்ளும் மறையுண்மைகள் இயேசுவை அறிந்துகொள்ள மட்டுமே முடியும். ஆனால் இந்த மறைக்கல்வி ஆண்டில் அதற்கு மேலாக நமது இதயத்தை இயேசுவை நோக்கித் திருப்புவதும் நம்பிக்கை வாழ்வை வாழ்ந்து காட்டுவதுமே, நம்மை சாட்சிகளாக மாற்றுகிறது. என்பதை உணரலாமே! எல்லார்க்கும் மறைக்கல்வி ஒவ்வொரு நாளும்...... இயேசுவை அறிந்து கொள்ளவும் இயேசுவுடன் நடக்கவும் இயேசுவைப் போன்று வாழவும் உதவுகிறது. இது வாழ்வு முழுமைக்கும்உள்ள பயிற்சி, தொடர் நிகழ்ச்சி!

### நான்காம் படி: ஞாயிறு வழிபாட்டு இறைமக்களுடன் ஒன்றித்த மறைக்கல்வி

எல்லார்க்கும் மறைக்கல்வி என்பது திருவழிபாட்டிலும் அதன் அருள் அடையாளச் செயல்களுடனும் பின்னிப் பிணைந்துள்ளது (இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல், 23) என்கிறார் திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல்.

அதனால் உயிரோட்டமுள்ள மறைக்கல்வியை நாம் பங்கில் திருவழிபாட்டிற்கு வெளியே நினைத்துக்கூட பார்க்க முடியாது! அவ்வளவு முக்கியமானது.

பொது மறைக்கல்வி வழிகாட்டி திருமுழுக்குப் பெறத் தயாரிப்பவர்களான முதிர்நிலையினரை இதற்கு உதாரணமாகக் காட்டுகிறது. இவர்கள் ஞாயிறு வழிபாட்டு வாசகங்களைக் கேட்டு சிந்தித்து பகிர்ந்துகொள்ளும் போதுதான் உண்மையான மனமாற்றம் (மூன்றாவது படி) நடைபெறுகிறது. நான்காம் படி இயேசுவைப்பற்றி அதிகமாக புரிந்து கொள்ளவும் ஆர்வத்தை தூண்டுகிறது. இதைத்தான் "மறைக்கல்விக்கான ஆர்வம்" என்று அழைக்கிறோம்.

இந்த மறைக்கல்விக்கான ஆர்வம் யார்மேலும் திணிக்க முடியாது. காரணம் இ்து ஆவியானவரின் செயல்பாடாகும்.

### ஐந்தாம் படி: எல்லார்க்கும் மறைக்கல்வியின் அடித்தளம் குடும்ப மறைக்கல்வியே!

எல்லார்க்கும் மறைக்கல்வியின் நோக்கம் பங்கின் ஒவ்வொரு குடும்பத்தையும் நம்பிக்கை வாழ்வின் மையமாக மாற்றுவதே! ஏனென்றால்... நம்பிக்கை தினமும் வாழ்ந்து காட்டப்படவேண்டும்.

இது இறைமக்களின் உறுதியான நம்பிக்கை வாழ்வில் வெளிப்பட வேண்டும். அவர்களின் எதிர்நோக்கு மற்றும் கனவுகளிலும் அவர்களின் சமூகம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளிலும் அவர்களின் குடும்ப வாழ்விலும், உறவுகளிலும் இது பிரதிபலிக்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் நமது பங்குகளில் நம்பிக்கை வாழ்வு என்று சொன்னால் அது கிறிஸ்துவக் குடும்பங்களில் நம்பிக்கை வாழ்வு என்பதையே குறிக்கிறது. எனவே எல்லார்க்கும் மறைக்கல்வி என்பது குடும்பங்களைக் கட்டி எழுப்ப வேண்டும். நமது செயல்பாடுகள் குடும்பங்களையே மையப்படுத்த வேண்டும்.

### ஆறாம்படி: மறைக்கல்வியைப் பங்குதிருச்சபையாகப் பார்ப்போம் பள்ளிக்கூடமாக அல்ல!

இன்று நமது மறைக்கல்விச் செயல்கள் பள்ளியையே மையமாகக் கொண்டவையாக பெரிதும் உள்ளன. இது ஒரு சவால்; காரணம் இன்றைய பள்ளிகளின் நிலை நன்றாகத் தெரியும்...!

மறைக்கல்விக்கான நேரத்தைக் கொடுக்க மறுக்கும் நிர்வாகம், ஆர்வமில்லாத ஆசிரியர்கள், பிடிப்பில்லாத பிள்ளைகள் என்ற எதிர்மறையான சூழ்நிலை. எனவேதான் ஜான் ரோபர்டோ சொல்வார் "தற்கால வயது சார்ந்த குழந்தைகள் மற்றும் இளையோர்க்கான நம்பிக்கை வாழ்வில் பயிற்சி போதுமானதாக இல்லை. இது பங்கில் ஒரு நிலைதான்! மாறாக எல்லாவற்றையும் எல்லோரையும் உள்ளடக்கிய நம்பிக்கை வாழ்வுப் பயிற்சியை தரவேண்டும்.

"இது யாருடைய கடமை? என்ன செய்யப் போகிறோம்?

மறைக்கல்வி என்பது எப்போதும் திருச்சபை முழுமைக்குமான பொறுப்பான செயல்பாடாக இருக்கிறது (இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்).

### ஏழாம்படி: கடவுளின் அருளும் எல்லார்க்கும் மறைக்கல்வியும்

அருள் என்பது கடவுள் தம்மையே வெளிப்படுத்துவது ஆகும். உள்ளத்தின் ஆழத்தில் தம்மையே வெளிப்படுத்தி நாம் கடவுளின் பிள்ளைகள் என்ற அடையாளத்தை உணர வைக்கிறார். அதே கடவுள் திருச்சபையின் வழியாகவும் வெளிப்படுத்துகிறார். திருச்சபைத் தலைவர்கள், பணியாளர்கள் ஆசிரியர்கள் குணப்படுத்தும் வல்லமை கொண்டவர்கள், அருள்அடையாளங்கள், அருள்கருவிகள், மற்றும் வழிபாட்டுமுறைகள் வழியாக அவர்தம் மகிமையையும் மகத்துவத்தையும் அன்பான ஆற்றலையும் அனுபவமாகத் தருகிறார்.

கடவுளின் அருள் அன்பு சமூகங்கள் வழியாகவும் பெறப்பட்டு கொண்டாடப்படுவதால்தான் நாம் திருப்பலிக்காகவும் மறைக்கல்விக்காகவும் ஒன்றுகூடும் திருக்கூட்டமாக இருக்கிறோம். எல்லார்க்கும் மறைக்கல்வி கடவுளின் அருள் நம்மிடையே செயலாற்றுவதை சுட்டிக்காட்டி இன்னும் அதிகமாக இறைவார்த்தையைக் கேட்கவும் இறையாட்சியைப் பார்க்கவும் அதற்காக உழைக்கவும் உதவ வேண்டும்

இறுதியாக இந்த மறைக்கல்வி ஆண்டில் எல்லார்க்கும் மறைக்கல்வியை பங்குமேய்ப்பு அலுவலின் மிக முக்கியமானதாக கருதவேண்டும். ஏனெனில் இது கடவுள் சார்ந்த செயல்பாடு. கடவுளின் அன்பு பங்கு சமூகம் முழுமையும் பிரசன்னமாகிறது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

*நீதி, சமாதான, மனித அபிவிருத்திக்கான*
*கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் தவக்காலச் செய்தி*

# ஒப்புரவின் மூலம் ஒன்றிப்பு

### மேதகு ஹரல்ட் அந்தனி ஆண்டகை



இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீதி, சமாதான, மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் தலைவர் மேதகு ஹரல்ட் அன்ரனி ஆண்டகை அவர்கள் இவ்வருடத்திற்கான தவக்கால செய்தியை வெளியிட்டுள்ளார். இச்செய்தியின் கருப்பொருளாக "ஒப்புரவின் மூலம் ஒன்றிப்பு" என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ற வகையில் தெரிவுசெய்யப்பட்டுள்ள இத்தலைப்பு மக்கள் மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்தவல்லது என்பது திண்ணம். திருவழிபாட்டு ஆண்டில் தூய உள்ளத்துடன், தான் வாழும் வாழ்க்கைபற்றி ஆழமாக சிந்திக்கக்கூடிய ஒரு காலத்திலேயே நாம் வாழ்ந்துவருகின்றோம். பாஸ்கா என்பது 'கடத்தல்' ஆகும். தவக்காலம் என்பது கடத்தலுக்கான வழியை - ஆயத்தத்தை குறிக்கின்றது என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, உண்மையான மனஸ்தாபம் இன்றேல் ஒற்றுமை இல்லை. முகத்தில் புன்னகை தவழ்ந்தாலும் அப்புன்னகையில் மனமாற்றம் இல்லையாயின் அதுவொரு ஒற்றுமைக்கான எதிர்பார்ப்பாக இராது. உண்மையான ஒற்றுமையில் கடந்தகால கசப்பு நிகழ்வுகள் காணப்படாது. ஏனெனில் அவை மனமாற்றத்தினால் புதைக்கப்படுதல் வேண்டும்.

மனங்களை எப்போதுமே காயப்படுத்தும் அல்லது காயப்பட்ட மனங்களை மாற்றிக்கொள்வது எம்மால் இயலுமான காரியமன்று. அது மிகவும் கசப்பானதும் வேதனைமிக்கதுமான செயலாகும். ஆனால், அம்மனமாற்றத்தினால் நாம் பெறும் கொடையோ அளப்பரியது. உண்மையான மனமாற்றம் என்பது இதுவே. தனது சகோதரன் புரிந்த தவறை மன்னிப்பது மிகவும் இலகுவான செயல். அத்தவறை மறக்கவும் முடியும். என்றாலும் அதுவொரு கஷ்டமான விடயமாகவும் காணப்படுகிறது. உண்மையான கடத்தலுக்கு இவ்வனுபவம் எமது வாழ்வில் யதார்த்தமாகக் காணப்படுதல் வேண்டும். இச்செயற்பாடு இலகுவல்ல. என்றாலும் இதுவே உண்மையான ஒன்றிப்பின் ஆரம்பமாகும்.

வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், தனக்குள்ள கடமைகளைச் செவ்வனே செய்து அச்செயல் பிறருக்கு முன்னுதாரணமாக இருக்கும்வண்ணம் வாழ்வது மிக முக்கியமானதாகும். அதுவே உண்மையான ஒன்றிப்பின் ஆரம்பமாகும். எனவே இத்தூய காலத்தில் வழிபாடுகளில் மட்டுமே ஒன்றித்திருக்காது இறைவனில் ஆழமான உறவை ஏற்படுத்திக்கொண்டு, எம் உளமாற்றத்தின் மூலம் உண்மையான கடத்தலுக்கு எமது வாழ்வை நாம் அர்ப்பணிப்போம்.

## வளர்ச்சிப் பாதையில் கிளறேசியன் சபை

பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி காணிக்கை அன்னை திருவிழா அன்று இலங்கை கிளறேசியன் சமூகமானது ஜேர்மனி மாநிலத்தோடு ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கான நிர்வாகப் பொறுப்பு வழங்கப்பட்டு உயர்த்தப்பட்டது.

அன்றைய தினம் நடைபெற்ற திருப்பலியானது திருத்தந்தையின் பிரதிநிதி ஜோசப் ஸ்பிட்டறி ஆண்டகையின் தலைமையில் அருட்தந்தை மத்தேயு மட்டமட்டம் (கிளறேஷியன் சபையின் பயிற்சிப் பொறுப்பாளர்) அதிவணக்கத்திற்குரிய ஸ்டெபான் வோல்ஸ் (ஜேர்மனி மாநில தலைவர்) ஆகியோருடன் கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

அன்றைய திருப்பலியில் இலங்கை கிளறேசியன் தலைவராக அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் வாக்குறுதி எடுத்துக்கொண்டார். அத்துடன் முதல் ஆலோசகராக அருட்தந்தை பி. எல். றொகான் டொமினிக் அவர்களும், பொருளாளராக அருட்தந்தை சதீஸ் சவரிமுத்து அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவ்வருடம் இச்சபையானது தனது 20வது நிறைவுக் கொண்டாட்டத்தையும் கொண்டாடியது. கிளறேஷியன் சபையில் 38 அங்கத்தவர்களுடன் (24 குருக்கள், 3 தியாக்கோன்கள்) இலங்கையின் பல்வேறு மறைமாவட்டங்களில் பணியாற்றி வருகின்றார்கள்.

## எரிபொருள் விலை அதிகரிப்பின் எதிரொலி மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

### மானியம் வழங்க கர்தினால் அரசிடம் வேண்டுகோள்

கடந்த ஜனவரி 11ஆம் திகதி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டட எரிப்பொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து மீனவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

டீசல், மண்ணெண்ணை விலை அதிகரிப்பினால் மீனவர்கள் தொழில் செய்வதற்கு முடியாமல் இருக்கிறது. இதன்படி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு மானியம் உடனே கொடுக்கப்பட வேண்டும், எல்லா மீனவர்களுக்கும் சமமாக மிக எளிமையான விதிமுறைகளினூடாக இந்த மானியம் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஜெயபாலன் அ.ம.தி அடிகளாரின் பஜனைப் பாடல் இறுவெட்டு வெளியீடு

பாலசிங்கம் ஜெயபாலன் அ.ம.தி அடிகளாரின் 'மன்னியும்' என்ற பெயரிலான பஜனைப் பாடல் இறுவெட்டின் வெளியீட்டு விழா கடந்த டிசம்பர் 21ஆம் திகதி அன்று வேப்பங்குளம் திருச்சிலுவைக் கன்னியர் மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வரும் தமது குருத்துவ பொன்விழாவைக் கொண்டாடுபவருமான ஏ. சேவியர் குருஸ் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தனர்களாக வடமாகாண அமலமரித்தியாகிகளின் முதல்வர் போல் நட்சத்திரம் அடிகளாரும் முன்னாள் முதல்வர் செல்வரெட்ணம் அடிகளாரும் வவுனியா கல்வியியல் கல்லூரி முதல்வர் பேனாட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

பதிலுரை வழங்கிய ஜெயபாலன் அடிகளார் பல இறுவெட்டுக்கள் இன்று வெளிவந்தாலும் பஜனைப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டு மிக அரிதாகவே இருந்தமையால் தாம் இம்முயற்சியில் இறங்கியதாகத் தெரிவித்தார்.

## அன்னை தெரேசா நூற்றாண்டு கீதாஞ்சலி

### மட்டக்களப்பில் நூல் வெளியீட்டு விழா



இங்கிலாந்து பழந்தமிழ் கலை இணையத்தின் ஸ்தாபகரும், தலைவருமான கலைஞர், கவிஞர் ஞானமணியம் என்பவரால் எழுதப்பட்ட"அன்னை திரேசா நூற்றாண்டு கீதாஞ்சலி" (இலகு தமிழ் இசைப்பாடல்கள்) என்னும் நூலின் வெளியீட்டு விழா கடந்த 12 02.2012 அன்று மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு துணை ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அருட்பணியாளர் நவரெட்னம் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரீனா அவர்கள் நூல் நயப்புரையை வழங்கினார். இந்நூலாசிரியர் திரு. ஞானமணி அவர்கள் இந்து சமயத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அரசிற்கும் தமிழ் கூட்டமைப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை இந்தியா மத்தியஸ்தராக நின்று வழிநடத்த வேண்டும்

### *இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஸ்ணா அவர்களிடம் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள்*




இலங்கை அரசானது தமிழ் சிறுபான்மையினருக்கு பொருத்தமான அரசியல் தீர்வொன்றை அடைவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இது ஒரு வழி என இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு வரவேற்கிறது. ஆனால் இலங்கை அரசானது பேச்சுக்களின்வழி மாகாண சபைகள் இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதில் எள்ளளவும் விட்டுக்கொடுக்கவில்லை. 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தின் பின்னரும் பெரும்பான்மையைக் கொண்ட இலங்கை அரசு மத்தியில் இருந்து தமது அதிகாரங்களை வழங்கத் தயாராக இல்லை.

எனவே இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் மூலம் இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றிற்கு வழிசெய்யும்படி இந்திய அரசை வினயமாக வேண்டுகிறோம். இல்லாவிடில் இப்பேச்சுக்கள் நீண்டு கொண்டே போவதோடு இலங்கை அரசானது புதிய வழிகளைத்தேடி அரசியல் பிரச்சினைக்கு தீர்வினைக்காணும் எண்ணத்தை பின்தள்ளிக்கொண்டே போகும். எனவே இந்திய அரசானது புவியியல் நோக்கங்களையும் தாண்டி உண்மையாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண உழைக்க வேண்டும். இலங்கை அரசானது இந்திய அரசு பேச்சுக்களின்போது மத்தியஸ்தம் வகிப்பதை எதிர்க்கப்போவதில்லை. இந்திய சமாதான உடன்படிக்கைவழி முன்பு இந்திய அரசு இதுபோன்ற மத்தியஸ்தப் பணியை ஆற்றியபோதும் தமிழ்த் தலைவர்கள் இந்திய சமாதான ஒப்பந்தத்தின் தன்மைகளை உணராமல் தமக்குள் கெட்டித்தனமாக ஒன்றிணைந்து செயற்படாமல் தூக்கி எறிந்துவிட்டனர்.

எனவே இந்திய வெளிவிவகார அமைச்சானது இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் எமது வேண்டுகோளை பரிசீலித்து எமது உதவிக்கு வரும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். போரினால் தாக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்கள்மேல் தாங்கள் காட்டும் மனிதாபிமான கரிசனைக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

*யாழ் ஆயர் மேதகு*
*தோமஸ் சவுந்தரநாயகம்.*

## கௌரவ பட்டத் தேர்வில் சித்திபெற்ற மறையாசிரியர் கவனத்திற்கு

கௌரவ பட்டத் தேர்வில் சித்திபெற்றபின் உங்களின் நற்சான்றில் பொறிப்பதற்காக படம் கேட்டு நாம் உங்களுக்கு அனுப்பும் கடிதத்தில் 2"X2" அளவிலான கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் இரண்டு அனுப்புமாறு குறிப்பிட்டுள்ளோம்.

முத்திரை அளவிலான சிறிய படம் அனுப்புவதையும், வர்ணப் படம் அனுப்புவதையும் கட்டாயமாக தவிர்க்கவும். நற்சான்று பத்திரத்தில் வர்ணப் படங்களைப் பொறிப்பதால் சிறிது காலத்தில் அவை பழுப்பு நிறமாகிவிடும்.

நற்சான்று பத்திரம் ஒருமுறை மட்டுமே தரப்படும். மீண்டும் அந்நற்சான்று பத்திரம் வழங்கப்பட மாட்டாது. அவசியம் ஏற்படின் கௌரவ பட்டத் தேர்வில் சித்திபெற்றதற்கான கடிதம் மட்டுமே தரப்படும். ஆகவே இவற்றைக் கவனத்திற்கொண்டு நற்சான்று பத்திரத்திற்காக புகைப்படம் அனுப்பும்போது 2"X2" அளவிலான கறுப்பு வெள்ளை படம் மட்டுமே அனுப்புமாறு அறிவுறுத்துகிறோம்.

*அருட்சகோதரி ரஞ்சி போல்துரை (தமிழ் பிரிவு பொறுப்பாளர்), தேசிய மறைக்கல்வி நிலையம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிறப்பிதழ்

## சிகரங்களை அடைய சில சிரமங்களை எதிர்கொள்வோம்

# சிலுவைப் பாதையும் மலைப் பொழிவும்

கி. அருளப்பு,
தன்னார்வ இறைவார்த்தைப்பணியாளர்,
விடத்தல்தீவு.



கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திலே அன்னையாம் திருச்சபை இவ்வாண்டை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதை நாம் யாவரும் அறிவோம்.

திருச்சபையானது திருவழிபாட்டை ஐந்து கூறுகளாகப் பிரித்து இறைமக்களை நெறிப்படுத்திவருகின்றது. அவையாவன திருவருகைக்காலம், கிறீஸ்து பிறப்புக்காலம், தவக்காலம், பாஸ்காகாலம், பொதுக்காலம் என்பனவாகும்.

இவை ஐந்தும் வருடாவருடம் வந்து போகின்றது. நம் வாழ்நாள் முழுவதும் எமக்கு திருவருகைக் காலம்தான். இயேசுவின் வருகையை எதிர்பார்த்து காத்திருப்பதே நம் கிறீஸ்தவ வாழ்வு. இக்காலங்களில் மிகமுக்கியமானது தவக்காலம். இதை மனமாற்றத்தின் காலம், அருளின் காலம், வசந்த காலம் என பல பெயர்கள் கொண்டு அழைத்து வருகின்றோம். இருந்தும் இக்காலம் நம் ஒவ்வொருவருக்கும் நம்மை நாமே சுய ஆய்வு செய்யும் காலமென்பதே மிகப் பொருத்தமானது. இக்காலம் செபதப தானதர்மங்கள் செய்து இறைவனோடு ஒப்புரவாகும் காலமாகும்.

ஒருவன் அகத்திலே இறை நாட்டம் கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் தன்னை சுய ஆய்வில் ஈடுபடுத்தும்போதுதான் இது சாத்தியமாகின்றது.

மனம் வருந்துவது வேறு மனம் திருந்துவது வேறு. மனம் வருந்துவோர் எல்லாம் மனம் திருந்துவதில்லை. மனம் திருந்துவோர் எல்லாம் மனம் வருந்துவதில்லை.

இரண்டுக்கும் இடையில் ஓர் எதிர்ப்போராட்டம். அது இறைவனுக்கு நம்மை நாம் விட்டுக்கொடுப்பதே? இவை யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவைகளுள் அடங்கும்.

கல்வாரி மலைக்கு பல சிறப்புக்கள் உண்டு. இரண்டு உலகங்களும் சந்தித்து சங்கமமாகும் இடம் கல்வாரிமலை. சாவின் முடிவும் வாழ்வின் தொடக்கமும் கல்வாரி மலை. பாவத்தின் முடிவும் புண்ணியத்தின் தொடக்கமும் இந்தக் கல்வாரி மலைதான். மனித பாவத்தின் கொடூரமும் இறை அன்பின் ஆழமும் சந்திக்கும் இடம் இது. மனித பலவீனமும் இறைவனின் பலமும் சந்தித்து சவால் ஏற்கும் இடம் இது. நரகத்தை மோச்சத்திற்கு பண்டமாற்றம் செய்யும் இடம் இந்தக் கல்வாரி.

இம்மலையை எதற்காக நம் சிந்தனைக்கு எடுத்துள்ளோம் என்றால் ஆண்டவர் யேசுவின் ஆறுதலான மன்னிப்பின் வார்த்தைகளைக் கேட்டு மன்னிப்பையும் மறுவாழ்வையும் நமதாக்கிக்கொள்ளவே.

கல்வாரி மலையில் நமக்கு ஏறத்தெரியும். யேசுவின் சிலுவைப் பாதை வழியாக நாம் அந்த மலையில் ஏறுகிறோம். அந்தப் பதினான்கு நிலைகளையும் தியானிக்கின்ற கிறீஸ்தவர்களுக்கு மலைப்பொழிவு மலை ஏறத்தெரியுமா? என்று கேட்டால் இல்லை என்றுதான் பதில் வரும். மலைப்பொழிவு மலை ஏற எட்டுப் படிகள் உண்டு. அதாவது எட்டு நிகழ்ச்சிகள் உண்டு. அந்த எட்டு நிகழ்ச்சிகளும் மனிதனுடைய வாழ்விலே அனுபவமாக நடைபெற வேண்டிய நிகழ்வு.

மலைப்பொழிவுக்கும் சிலுவைப் பாதைக்கும் சில வேறுபாடுகள் உண்டு. சிலுவைப் பாதையில் சிலுவை சுமந்தது யேசு. மலைப்பொழிவில் அந்தப்பேறு பெற்றவரை நாம் சுமக்கவேண்டும்.

சிகரங்களை அடைய வேண்டுமென்றால் பல சிரமங்களை எதிர்கொள்ளத்தான் வேண்டும். மண்ணில் சிலுவை தாங்காதவன் விண்ணில் மகிமையின் முடிதாங்குவதில்லை. இதுவே இயேசுவினுடைய மலைப்பொழிவின் விழுமியங்கள்.

"அன்று தம் சீடர்க்கெல்லாம்
அறிவுரை கூற எண்ணி
குன்றின்மேல் ஏறிநின்று
கொடைகரம் விரித்து நீட்டி!
ஒன்று இரண்டு என்று
நெஞ்சில் உள்ளதை
எண்ணி வைத்து!
மன்றினைத்
தொடக்கிவைத்தார் மாரிபோல்
யேசு நாதர்!"
"எளிய மனத்தோர்
பேறுபெற்றோர் என்று
எடுத்ததும் அவர் சொன்னார்"
(யேசு காவியம்)

இதுவே அந்த எட்டு பேரின்ப வார்த்தைகளில் முதல் வார்த்தை.

யேசுவின் போதனைகளின் பார்வையில் முதல் பெரிய பாவம் பிறருக்கு தீர்ப்பிடுதல். (தொடக்க நூல் 3:12-13) இல் நாம் இதைப் பார்க்கலாம்.

"எவரைப்பற்றியும் எந்த
நேரத்திலும்
குற்றம்பேசி
குறைசொல்லாதீர்!
அப்படிச் சொன்னால்
அடுத்த நாள் உமக்கும்
சட்டம் அதுவே,
தாக்குதல் திரும்பும்;
கண்டிக்க நினைத்தால்
கண்டிக்கப்படுவீர்;
மன்னித்துவிட்டால்
மன்னிக்கப்படுவீர்;
கொடுங்கள் அதுபோல்
கொடுக்கப் பெறுவீர்;
அளக்கும் அளவே
அளக்கப்படும்;
உமது கண்ணில்
உத்தரம் கிடக்க
சகோதரன் கண்ணில்
துரும்பைப் பார்ப்பதா!
சொந்தக் கண்
துடைப்பின் முன்னே
அந்தக் கண்ணை அப்புறம்
பார்க்கலாம்.
(யேசு காவியம்)
(மத்தேயு 7 : 1-5)

ஆண்டவர் இயேசு சீடர்களுக்கு சொன்ன அறிவுரைகள் ஒவ்வொன்றுக்கும் நாம் உருக்கொடுக்க வேண்டும்.

"ஊருக்குத் தீமைகள் செய்து
உன் உள்ளம் மகிழ்வது
பாவம்;
யாருக்கும் தீமையில்லாமல்
நீ அழிந்து விடுவது லாபம்;
கண்ணொன்று தீங்கு
செய்தாலே
அந்தக் கண்ணைப்
பிடுங்க வேண்டும்;
திண்ணிய கை
அதைச் செய்தால்
வெட்டித் தீயில்
எரித்திட வேண்டும்;
அங்கம் முழுவதும் சென்று
தினம் அந்த
நரகத்தில் வெந்து
பங்கப்படுவதை விட்டு
கெட்ட பாகத்தை
யாவது வெட்டு.
தத்துவம் மிக்கது வாக்கு
பொய்ச் சத்தியம்
செய்வதை நீக்கு;
எத்தனை தானுண்டு நாக்கு
இன்னும் ஒளிந்த
வேதனைப் போக்கு;
ஆம் என்று
சொல்லட்டும் ஒன்று
அன்றேல்
இல்லையென்றாலும் நன்று;
தீமைகள் விலகட்டும்
இன்று
அதைத் தேடுங்கள்
நல்வழி நின்று!
உன்தலை மீதிலும்
ஆணை இட்டு
உன்னைப் பெரிது
செய்யாதே;
மின்னிடும் ரோம
நிறத்தை மாற்றும்
சக்தியுமே உனக்கில்லை;
இரத்தத்துக்கு
இரத்தமென்று பகை
நாடுதல் தத்துவம் அன்று!
உத்தமர் செய்வது ஒன்று
அதை ஓங்கி நான்
கூறுவேன் இன்று;
உன்னொரு கன்னத்தில்
இட்டால் நீ
ஓங்கி அடித்து விடாதே;
இன்னொரு கன்னத்தைக்
காட்டு அது என்றொன்றும்
ஞானத்தின் பாட்டு"
(இயேசு காவியம்)

இவ்வார்த்தைகளைக் கேட்டு நம் சிந்தையிலே பதித்து சிந்தனை எழுப்பி செயல்பட இத்தவக்காலத்தை நாம் பயன்படுத்துவோம்.

நாம் ஒவ்வொருவரும் சுய ஆய்வு செய்து ஆண்டவர் யேசுவோடு ஒப்புரவாகுவதே மனிதம் போற்றும் மறைக்கல்வி.

"என்னடியைப் பின்தொடர
நீ என்ன செய்ய
வேண்டும்.
உன் அடிகள் அத்தனையும்
ஒழித்துவிடவேண்டும்.
உன் உடமை
அத்தனையும் நீக்கிவிட
வேண்டும்.
என் உடமை ஆனபின்பு
வேறுடமை என்ன?"
என்கின்றார் யேசு.
அத்தனை பேரையும் நேசி
இதில் ஆண்டவரைக்
கொஞ்சம் யோசி
முத்துக் கிரணத்தை வீசி
தந்தார் அத்தனை
பேருக்கும் ஆசி
அன்பு செய்தார்க்கு
அன்பு என்றால்
ஆனந்தம் அதிலென்ன
உண்டு!
அன்பற்ற பேருக்கு
அன்பு செய்தால்
அதுவன்றே மானிடப்பண்பு"
(மத்தேயு 5:33-40)
வரையுள்ள வார்த்தைகள். ■

# இயற்கையின் மனிதன் இயேசு

அருட்சகோதரி. மேரி றுவீனா
திருக்குடும்ப கன்னியர் இல்லம், மன்னார்.



இறையாட்சி என்பதை இயேசு மூன்று வழிகளில் உள்வாங்கியிருக்கின்றார்.

1. இயற்கை வழியாக
2. வரலாறு வழியாக
3. உடன்படிக்கை வழியாக

யோவான் 7:16 இல் "எனது போதனை என்னுடையதல்ல, என்னை அனுப்பினவருடையது" என்று கூறித் தந்தையைக் காண்பிக்கின்றார். மத் 5:45 இறைவனுடைய நீதி எல்லோர்மீதும் இருக்கிறதென்பதையும் மத் 6:25-34, 10:29-30ல் இறைவனுடைய பராமரிப்பையும் எடுத்துக்காட்டுகிறார்.

மத் 12:33ல் மரமும் கனியும் என்ற பகுதியை இயற்கையோடு தொட்டுக்காட்டுகிறார். இயேசு இயற்கையோடு ஒன்றித்திருக்கும் மனிதனாக விவிலியத்தில் பல இடங்களில் காணப்படுகின்றார். தி.பா 148- உலகிலுள்ள எல்லாமே இயற்கை என்று சங்கீத ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். தி.பா 19:1-6ல் கூறியபடி இயற்கை என்பது ஊமையல்ல பேசிக்கொண்டிருக்கிறது. இரவு பேசுகிறது, பகலும் பேசுகிறது, நற்செய்தியை இயற்கை பரப்புகிறது.

இயற்கையோடு எம்முடைய நற்செய்திப்பணி ஒன்றித்திருக்கிறதா என்ற கேள்வி எழுகின்றது. விமர்சிக்கும் தன்மையோடு நாம் தியானிக்க வேண்டும். இயற்கை எமக்குக் காட்டுபவை எவை என்பதைச் சிறிது உற்றுநோக்குவோம்.

அவை ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பு, ஒன்றுக்கொன்று கொடுக்கும் பதில், ஒன்றையொன்று ஏற்கும் தன்மை, ஒன்றையொன்று ஏற்றுக்கொள்வதால் வாழ்வு கொடுப்பது, இருக்கின்ற இடத்திலே செழிப்புடன் அர்ப்பணிப்போடு வாழ்வது, மற்றவரைச் செழிப்புடன் வாழச்செய்கின்றது. சில மரங்கள் நெருக்கமான கிளைகள் விட்டுச் செழிப்புடன் வாழ்கின்றது. நாம் இருக்குமிடத்தில் எங்களுக்குள் நெருக்கமான உறவு இருக்கிறதா? ஒருவரை ஒருவர் ஏற்று, தாங்கி, செழிப்புடன் வாழ்கின்றோமா? மற்றவரையும் செழிப்புடன் வாழச் செய்கின்றோமா? இயற்கையோடு ஒன்றித்து இயற்கையின் தன்மைகளை உணர்ந்து வாழ்கின்றோமா?

இந்த இயற்கை என்றுமே நமக்கு வாழ்வு உண்டு என்று காட்டுகின்றது. முதிர்ந்த இலைகள் சொரிய மீண்டும் துளிர் விட்டுச் செழிப்புடன் வாழ ஆரம்பிக்கின்றது. ஆனால் நாம் எம்முடைய வாழ்வைப் பார்க்கும்போது சிறிய கஷ்டங்கள், துன்பங்கள் வரும்போது சோர்ந்து, துவண்டு வாழ்வே முடிந்துவிட்டது, இனிமேல் வாழமுடியுமா என்று சலிப்படைந்து போகிறோம். எனவே வாழ்வைத் தெரிய வேண்டும்.

தொ.நூ 6:5-8, 13, 22, 8:6-12, 15, 18 நோவாவுக்கு அருள்பார்வை கிடைக்கிறது, வாழ்வு அழிக்கப்படவில்லை, வாழ்வு உண்டு என்று புறா கொண்டுவந்த ஒலிவ இலை காட்டுகின்றது. ஊசலாடிக்கொண்டிருக்கிற உயிராற்றல் ஒலிவயிலை. இந்த உயிராற்றல் என்னிலிருக்கிறதா? இந்த உயிராற்றலை நான் மற்றவர்களுக்கு கொடுக்கிறேனா? கொடுக்கமுடியுமா?

தொ. நூல் 9:10 மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் எனது உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன் என்று நோவாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை Cosmic Covenant என்று அழைக்கின்றோம். தொ.நூ 17:1-14, 26:23-24, 28:11-13 இறைவன் ஆபிரகாமை நோக்கி அஞ்சாதே நான் உன்னோடு இருப்பேன் உனக்கு ஆசி வழங்குவேன் என்று கூறி நிலம், இனம், நாடு அனைத்தையும் வழங்கி அவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை நாம் Earth Oriented Covenant என்று அழைக்கின்றோம்.

வி.ப 24:3-8 இறைவன் மோயீசனூடாக இஸ்ராயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கை. இது வரலாற்று உடன்படிக்கை. மக்கள் உருவாக்கும் தேசிய உடன்படிக்கை National Covenant. தி.பா 8:3-4ல் கூறியபடி இயற்கை இத்தகைய ஆற்றலோடு இருக்கின்றது. உலகின் கடையெல்லைவரை நற்செய்தியைப் பரப்புகின்றது. நாம் நற்செய்தியின் தாக்கத்தை இயற்கையில் கடவுளைச் சூழ்ந்துள்ள உண்மைத்தன்மைக்குள் இருக்கின்றோமா? திருச்சபையில் நாம் எங்கே நிற்கின்றோம்? இறையாட்சி என்பது பாதிக்கப்பட்ட, அழிக்கப்பட்ட, இயற்கையைப் புதுப்பித்தல், உயிரூட்டம் அளித்தல் என்பதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# கத்தோலிக்க திருச்சபைக்கு 22 புதிய கர்தினால்கள் நியமனம்

கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் 22 பேரை கர்தினால்கள் நிலைக்கு உயர்த்தினார். இக்கர்தினால்களுள் 2 பேர் ஆசியர்கள், 7 பேர் இத்தாலியர் உட்பட 16 பேர் ஐரோப்பியர். இந்த 22 பேரையும் சேர்த்து தற்போது கத்தோலிக்க திருச்சபையில் உள்ள கர்தினால்களின் எண்ணிக்கை 213 பேர் ஆகும்.



இவர்களில் திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் 80 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 125. எண்பது வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 88.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தனது பாப்பிறைப் பணிக்காலத்தில் நான்காவது தடவையாக புதிய கர்தினால்களை அறிவித்துள்ளார். இவர் இதுவரை கர்தினால்களாக உயர்த்தியவர்களின் எண்ணிக்கை 84. தற்போது 74 நாடுகளைச் சார்ந்தவர்கள் கர்தினால்களாக உள்ளனர். ஐரோப்பாவில் 119, வட அமெரிக்காவில் 21 (அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா), இலத்தீன் அமெரிக்கா 32, ஆபிரிக்கா 17, ஆசியா 20, மற்றும் ஓசியானியா 4.

கர்தினால்கள் கத்தோலிக்க திருச்சபையில் இளவரசர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

## ஒரே பாலினத் திருமணங்கள் சமய சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்

### அமெரிக்கச் சமய தலைவர்கள் கருத்து

அமரிக்க ஐக்கிய நாட்டில் திருமணம் என்பதற்கு மறுவிளக்கம் கொடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை, “சமய சுதந்திரத்திற்குப் பரவலாகக் கடும் விளைவுகளை” ஏற்படுத்தும் என்று அந்நாட்டின் பல சமயத்தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கத்தோலிக்க ஆயர்கள் உட்பட 35க்கும் மேற்பட்ட சமயத் தலைவர்கள் இணைந்து அனைத்து அமெரிக்கர்களுக்கும் எழுதியுள்ள திறந்த கடிதத்தில் இவ்வாறு எச்சரித்துள்ளனர். இயற்கையான திருமணம் குறித்த விளக்கத்தில் ஒரேபாலினத் திருமணமும் இணைக்கப்பட்டால் அதைப் புதிய திருமண உறவாக ஏற்றுக்கொள்ள அரசுகள் வலியுறுத்தப்படும் நிலையில், அப்புதிய விளக்கத்தை பல சமூகங்கள் மனச்சான்றின்படி ஏற்றுக்கொள்ளப்பட முடியாத முரண்பாடு தோன்றும் என சமயத் தலைவர்கள் கூறினர்.

திருமணமும் சமய சுதந்திரமும் அடிப்படையான நன்மைக்கூறுகள் எனக் குறிப்பிட்டுள்ள அத்தலைவர்கள், இவை வாழ்ந்தாலும் ஒன்றுசேரும், வீழ்ந்தாலும் ஒன்றுசேரும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திருமணத்திற்கு சமூகரீதியாகக் கொடுக்கப்படும் விளக்கத்தை மாற்றுவது அந்தத் திருமண பந்தத்தை அடிப்படையாகக்கொண்ட நூற்றுக்கணக்கான ஏன் ஆயிரக்கணக்கான சட்டங்களில் மாற்றம் ஏற்படும் என்று அக்கடிதம் கூறுகின்றது.

## ஈராக் நாட்டு கிர்குக் நகரில் பேராயர் இல்லத்தின்மீது தாக்குதல்

ஈராக் நாட்டு கிர்குக் நகரில் அமைந்துள்ள கல்தேய ரீதிப் பேராயர் லூயிஸ் சாகோ அவர்களின் இல்லம் ஜனவரி 8ஆம் திகதி தாக்கப்பட்டது.

பக்தாதிலிருந்து வந்ததாகக் கருதப்படும் மூன்று தீவிரவாதிகள் பிற்பகல் 1.00 மணி அளவில் மேற்கொண்ட இத்தாக்குதலில், பேராயரும், ஆயர் இல்லத்தில் இருந்தவர்களும் எந்த பாதிப்புக்களுக்கும் உள்ளாகவில்லை. தாக்குதலை மேற்கொண்ட மூவரில் இருவர் கொல்லப்பட்டனர். மூன்றாவது ஆள் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வத்திக்கான் செய்திகள் வலைத்தளத்தை 10,000 பேருக்குமேல் பார்வையிடுகின்றனர்

திருப்பீடம் உருவாக்கியுள்ள செய்திகள் வலைத்தளத்தை ஒவ்வொரு நாளும் 10,000 பேருக்குமேல் பார்வையிடுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது என்று வத்திக்கான் அதிகாரி ஒருவர் கூறினார்.

திருப்பீடத்தின் சமூகத்தொடர்பு அவையின் தலைவரான பேராயர் கிளாவுடியோ மரியா செல்லி (Claudio Maria Celi) CNA கத்தோலிக்கச் செய்தி நிறுவனத்திற்கு அண்மையில் அளித்த பேட்டியொன்றில், வத்திக்கான் செய்தி வலைத்தளம் ஆரம்பித்து ஒருசில மாதங்களே ஆகியிருந்தாலும், அதன் பார்வையாளர்களின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்திருப்பது திருப்தியைத் தருகிறது என்று கூறினார்.

2011ம் ஆண்டு கிறிஸ்மஸ் நாளன்று 16,000 பேர் இந்த வலைத்தளத்தைப் பார்வையிட்டனர் என்பதைக் கூறிய பேராயர் செல்லி, இவர்களில் 52 விழுக்காட்டினர் முதன்முறையாக பார்வையிடுபவர்கள் என்ற தகவலையும் வெளியிட்டார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் www.news.va என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வத்திக்கான் செய்தி வலைத்தளம், ஆங்கிலம், இஸ்பானியம், இத்தாலியம் ஆகிய மொழிகளில் தற்போது இயங்கி வருகின்றது. பிரெஞ்ச் மொழியிலும் போர்த்துகீசிய மொழியிலும் இந்த வலைத்தளம் இயங்க உள்ளது.

நற்செய்திப் பணிகளில் புதிய முறைகளைக் கையாளுவதை ஊக்கப்படுத்தும் திருத்தந்தை, துவங்கவிருக்கும் விசுவாச ஆண்டில் புதிய சமூகத்தொடர்புசாதனங்களின் பயன்பாட்டை மேலும் ஊக்கப்படுத்துகிறார் என்று பேராயர் செல்லி எடுத்துரைத்தார்.

## இணையத்தளத்தில் கத்தோலிக்கர்களின் இருப்பு தேவையானது

### திருப்பீட சமூகத்தொடர்பு அவையின் தலைவர்

இணையத்தளத்தில் கத்தோலிக்கர்களின் இருப்பு, தேவையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என திருப்பீட சமூகத்தொடர்பு அவையின் தலைவர் பேராயர் கிளவ்டியோ செல்லி கூறினார். சுவிட்சர்லாந்தின் மெர்ஸி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராயர் செல்லி, 2009ம் ஆண்டில் 44 கோடி கத்தோலிக்கர்கள் இணையத்தளத்தைப் பயன்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.



இன்றைய நவீன சமூகம் தகவல்களின் காலத்திலிருந்து, உரையாடலின் காலத்திற்கு கடந்து வந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுப் பேசிய பேராயர் செல்லி, திருத்தந்தையர்கள் 6ம் போல் இரண்டாம் ஜான் போல் மற்றும் 16ம் பெனடிக்ட், தகவல் தொடர்புத்துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்பு, கத்தோலிக்க விசுவாசத்தை எடுத்துரைக்க நம் ஒவ்வொருவருக்கும் உதவுவதாக உள்ளது எனவும் கூறினார்.

## வத்திக்கான் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டவர்கள் 50 இலட்சத்திற்கும் அதிகம்

கடந்த ஆண்டில் (2011) வத்திக்கான் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை வரலாற்றில் இதுவரை இடம்பெறாத அளவுக்கு அதிகமாக இருந்ததாக, திருப்பீட சார்பு தினத்தாள் றொசவற்ற றொமானோ (L'Osservatore Romano) அறிவித்தது.

2011ம் ஆண்டில் 50 இலட்சத்திற்கு அதிகமானோர் வத்திக்கான் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டுள்ளனர் என்று அத்தினத்தாள் கூறியது. எனினும் பிரான்சின் பாரிசிலுள்ள லொவறா (Louvre) அருங்காட்சியகத்தை ஆண்டுதோறும் சுமார் 85 இலட்சம் பேர் பார்வையிடுகின்றனர் என்றும் அத்தினத்தாள் கூறியது.

வத்திக்கான் அருங்காட்கியகத்திற்குச் சென்ற மக்களின் எண்ணிக்கை போன்றே இலண்டன் பிரித்தானிய அருங்காட்சியகம், St. Petersburgலுள்ள Hermitage, மத்ரித்திலுள்ள Prado ஆகியவற்றிற்குச் சென்றவர்களின் எண்ணிக்கையும் உள்ளது என்றும் அத்தினத்தாள் கூறியது.

## கச்சதீவு திருவிழாவிற்கு பக்தர்களை இலவசமாக அழைத்துச் செல்லவேண்டும்

### இராமேஸ்வரம் வேர்காடு பங்குத்தந்தை வேண்டுகோள்

02 மார்ச் 2012 அன்று முதல் 4 வரை இடம்பெறவுள்ள கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கு கொள்ளும்படி அரச அதிபரின் அழைப்பு விடுக்கப்பட்டதை அடுத்து மேற்படி விழாவில் கலந்துகொள்ள விரும்பும் தமிழக பக்தர்களை தமிழக அரசு இலவசமாக அழைத்துச்செல்ல வேண்டுமென இராமேஸ்வரம் வேர்காடு பங்குத்தந்தை மைக்கல்ராஜ் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

02 மார்ச் 2012 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் கச்சதீவு அந்தோனியார் திருவிழா 4ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலைத் திருப்பலியுடன் நிறைவடையும். இவ்விழாவில் இராமேஸ்வரம் பாம்பன் மண்டபம் மற்றும் தமிழகத்தின் கரையோர பல பங்குகளிலிருந்து பக்தர்கள் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்று நாட்கள் மேற்படி திருவிழா நடைபெற இருந்தாலும் 3ம் திகதியே தமிழக பக்தர்கள் இங்குவர அனுமதிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இராமேஸ்வரம் வேர்க்காடு பங்குத்தந்தை மைக்கல் ராஜ் அடிகளார் தமிழக மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்துள்ள மனுவில் பக்தர்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீர் வசதிகளை இலங்கை அரசு கவனிக்க உள்ள நிலையில் கச்சதீவிற்கு பயணமாகும் தமிழகப் பக்தர்களின் போக்குவரத்து செலவை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கச்சதீவு செல்லும் பக்தர்களை சோதனை செய்ய வேண்டிய தேவை இருப்பதால் காலவிரயத்தைத் தவிர்க்க இந்திய கரையோர கடற்படை சோதனை செய்து அவர்களை கப்பலில் ஏற்றிச் செல்ல வேண்டும் எனவும் மைக்கல்ராஜ் அடிகளார் மேற்படி மனுவில் தெரிவித்துள்ளார்.

## மனித வாழ்வு. குடும்பம். பாலினம் குறித்த எண்ணங்களில் கிறிஸ்தவ சபைகளிடையே ஒத்த கருத்துக்கள் வேண்டும்


### திருத்தந்தை வலியுறுத்தல்

பின்லாந்து நாட்டில் கிறிஸ்தவ பாரம்பரியங்களுக்கு இடையே உள்ள ஒன்றிப்பின் வளர்ச்சி மேலும் தொடரவேண்டும் எனத் தான் ஆவல் கொள்வதாக அந்நாட்டிலிருந்து வந்திருந்த கிறிஸ்தவ ஒன்றிப்புப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

கடந்த ஜனவரி மாதம் கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரம் கடைபிடிக்கப்பட்ட வேளையில், பின்லாந்து நாட்டு கிறிஸ்தவ ஒன்றிப்புப் பிரதிநிதிகளை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை கத்தோலிக்கர், லூத்தரன், கிறிஸ்தவர் மற்றும் அனைத்து கிறிஸ்தவ சபையினருக்கும் இடையே நிலவும் ஆழமான நட்புணர்வு, கிறிஸ்தவர்களிடையே பிரிவுகளைக் களைவதற்கு சரியான பாதையைக் காட்டுவதாக என்ற தன் ஆவலை வெளியிட்டார்.

அறநெறி சார்ந்த கேள்விகள், குறிப்பாக மனித இயல்பு மற்றும் மாண்பைப் புரிந்துகொள்வதில் அண்மைக் காலங்களில் எழும் வேறுபாடுகளே கிறிஸ்தவர்களிடையே பிரிவினைகளை உருவாக்கும் காரணங்களாக உள்ளன என்று கூறிய திருத்தந்தை மனித வாழ்வு, குடும்பம், பாலினம் குறித்த எண்ணங்கள் ஆகியவற்றில் ஒத்த கருத்துக்களைக் கொண்டிருக்கவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

## புதன் மறைபோதகத்தில் கலந்துகொண்ட கியூபா நாட்டு முதலை



ஜனவரி 11ஆம் திகதி புதனன்று நடைபெற்ற திருத்தந்தையின் மறைபோதகத்தில் கியூபா நாட்டில் அழிந்துவரும் இனம் என்று கருதப்படும் ஒரு முதலையும் கலந்துகொண்டது.

உரோம் நகரில் உள்ள ‘Bioparco’ என்ற மிருகக் காட்சிச்சாலை தன் நூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வாண்டின் துவக்கத்தில் திருத்தந்தையின் ஆசீரைப்பெற வந்திருந்த இம்மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் தங்களுடன் இந்த முதலையையும் எடுத்து வந்திருந்தனர்.

இந்த மிருகக்காட்சிச்சாலையில் பாதுகாக்கப்படும் 1200 மிருகங்களின் ஒரு பிரதிநிதியாக இந்த கியூபா நாட்டு முதலை இருந்ததென்றும், திருத்தந்தை கியூபா நாட்டுக்கு மார்ச் மாதம் செல்லும் வேளையில் இந்த முதலையும் அந்நாட்டிற்கு அனுப்பப்படும் என்றும் மிருகக்காட்சிச்சாலை அதிகாரி Paolo Giuntarelli கூறினார்.

கியூபாவின் அழிந்துவரும் மிருக இனங்களின் வரிசையில் உள்ள இந்த முதலை இனம், கடந்த சில ஆண்டுகளில் 80 விழுக்காடு அழிந்துவிட்டதென்று ஒரு செய்திக்குறிப்பு கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர்

### தொடர் 05.

இந்தியாவின் பண்டிதநேரு பிரதமரானபின் அமெரிக்கா சென்றிருந்தார். 'நியு யோர்க் ரைம்ஸ்' (New York Times) பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கையில் கவனமாகப் பதிலளிக்கும்படி அறிவுறுத்தி இருந்தார்கள். எல்லாப் பத்திரிகையாளர்களும் கேள்விகள் கேட்டு முடிந்தபின் 'நியு யோர்க் ரைம்ஸ்' (New York Times) பத்திரிகையின் லிப்மேன், "இந்தியப் பிரதமருக்கு அமரிக்க இரவு விடுதிக்குச் செல்லும் எண்ணம் உண்டா?" எனக் கேட்டதற்கு பண்டிதநேரு, "New Yorkகில் இரவு விடுதிகூட இருக்கிறதா?" என கேள்வி கேட்டவரிடமே திருப்பிக் கேட்கிறார். மறுநாள் பத்திரிகையின் தலைப்புச் செய்தி பின்வருமாறு இருந்ததாம்: " 'New York'கில் இரவு விடுதி இருக்கிறதா?' - இந்தியப் பிரதமர் ஆவல்!"

### உடனடித் தேவை அரசியல் தீர்வே

பிருத்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வோட்டன், ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரப் பணிப்பாளர் மக்ஸ் வேல்கீகெல், இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் கிறிஸ் நொறிஸ், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் ஆகியோர் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களை 05.01.2012 காலையில் சந்தித்துள்ளனர். இச்சந்திப்பில், "தமிழ் மக்களின் உடனடித் தேவை அரசியல் தீர்வே – பிரிட்டிஸ் தூதுவரிடம் யாழ். ஆயர் வலியுறுத்து" எனத் தினக்குரல் பத்திரிகை 06.01.2012 அன்று தலைப்புச் செய்தி தீட்டியிருந்தது. மேலும், "தமிழ் மக்களுக்கு தற்போது உடனடியாகத் தேவைப்படுவது நிரந்தர அரசியற் தீர்வே என நேற்றுக்காலை தன்னைச் சந்தித்துப் பேசிய பிரிட்டிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினரிடம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசியல்வாதிகளுடன் அரசு பேச்சுக்களை நடத்தி தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வொன்றை துரிதகதியில் முன்வைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார்..." என இச்செய்தி தொடர்கிறது.

உதயன் பத்திரிகை இதே சந்திப்பை விபரிக்கையில், "தீர்வுக்கு அரசு பின்னடிப்பு தமிழர் மத்தியில் அதிருப்தி – பிரிட்டிஸ் எம்.பியிடம் யாழ். ஆயர் எடுத்துரைப்பு" என தலைப்புச் செய்தியாக 06.01.2012 அன்று வெளியிட்டிருந்தது. வீரகேசரிப் பத்திரிகை, "இலங்கையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - யாழ். ஆயர்" என 06.01.2012இல் தலையங்கம் இட்டிருந்தது.

"பிரிட்டனிலுள்ள தமிழர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் - யாழ். ஆயர் வலியுறுத்தல்" என்ற தலைப்பிட்டு, "புலம்பெயர்ந்த தமிழர்களை திருப்பி அனுப்புவதை பிருத்தானியா மீள்பரிசீலனை செய்ய வேண்டும்" எனவும், "இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளுடன் அரசு இதயசுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்" எனவும், "தமிழ்மக்கள் தமது அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய தீர்வைத்தான் எதிர்பார்க்கிறார்கள். கடந்தகால யுத்தத்தில் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களின் மனதில் அமைதியை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு யுத்தத்தில் ஈடுபட்டவர்களிடம் இருக்கிறது" எனச் சுட்டிக் காட்டியதாகவும், அதேவேளை யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் போதுமானதாக இல்லை. மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டியது அவசியம். கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் நீண்ட தூரத்திற்கு தமது அன்றாட தேவைகளை நிறைவேற்ற நடந்து திரிகின்றனர். குறிப்பாக வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கு பல கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டியுள்ளது. அத்தோடு வீதிகளும் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து காணப்படுகின்றன. யுத்தகாலத்தில் இருந்ததைவிடப் பறவாயில்லை என்றபோதிலும் புனரமைப்பு செய்யவேண்டிய நிலையிலேயே வீதிகள் உள்ளன. யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகள் மக்களுக்கு திருப்தி அளிப்பதாக இல்லை. மாற்றங்கள் ஏற்பட்டு மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்குரிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆயர் கோடிட்டுக் காட்டியுள்ளதாக வலம்புரி பத்திரிகை 06.01.2012 அன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### ஆயர்களின் சந்திப்புக்கள் அவ்வளவு முக்கியமானவை:

எல்லா பத்திரிகைகளுமே யாழ். ஆயரின் மேற்குறித்த சந்திப்பை தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருந்தன. இச்சந்திப்புக்கு ஊடகங்கள் இவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றன என்றால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எவ்வளவு ஆர்வத்தோடு நம் ஆயர் அவர்களின் அவதானிப்புக்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பது புரியும். உண்மையில் இச்சந்திப்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் பல தரத்தினராலும் - அரசு, அரசசார்பற்ற உள்நாட்டு, சர்வதேச மட்டங்களில் கூர்ந்து கவனிக்கப்படும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத விடயமாகும். அந்த வகையில் இச்சந்திப்பில் யாழ். ஆயர் வெளிப்படுத்திய கருத்துக்கள் இச்சந்தர்ப்பத்தில் மிக முக்கியத்துவமும் பெறுமதியும் வாய்ந்தவை ஆகும்.

மேலும், அரசின் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் 03ஆம் நாள் கார்த்திகை 2010இல் திருமலை - மட்டக்களப்பு ஆயர் கின்சிலி சுவாம்பிள்ளை அவர்கள் கொடுத்த மனித உரிமைகளின் இன்றைய நிலை, காணாமல் போனோர் பற்றி கண்டறியப்பட வேண்டிய உண்மைகள், தடுத்து வைக்கப்பட்டவர்களின் விடுதலை போன்ற உள்ளடக்கத்தைக் கொண்ட வாக்குமூலங்கள் இன்றும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றன. 2012ஆம் ஆண்டு சத்திய சாய் சேவா சமித்தியின் புதுவருட பஜன் வழிபாட்டில் பங்குகொண்டு, "பேச்சுவார்த்தையில் நேர்மையோடும், நாணயத்தோடும், அர்ப்பணத்தோடும் ஈடுபட வேண்டும்" எனவும் வேண்டியுள்ளார்.

### கற்றும் அறிந்தோமா?...!...

அரசின் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதில் இருந்து மனித உரிமை அமைப்புக்களும் நாடுகளும் அவ்வறிக்கையைப் பற்றிய கேள்விக்கணைகளைத் தொடுத்தவண்ணம் இருக்கின்றன. குறிப்பாக, "போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்த நல்லிணக்க ஆணைக்குழு தவறிவிட்டது" என மனித உரிமை அமைப்புக்கள் கடுமையாக விமர்சிக்கின்றன. மேலும், "போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்" என சர்வதேச நெருக்கடிக்கான குழு வலியுறுத்தியுள்ளது.

இன்னும், "...இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யப்பட்டு இக்குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது" என வலம்புரிப் பத்திரிகை 19.12.2011இல் செய்தி வெளியிட்டுள்ளது. இத்தகவல்களை ஏனைய பல ஊடகங்கள் தொடர்ந்து வெளியிட்ட வண்ணமுள்ளன. மேலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் போர்க்குற்றங்கள் தொடர்பான பரிந்துரைகள் ஏமாற்றமளிக்கின்றன என கனடாவும் பிரித்தானியாவும் அண்மையில் வெளியிட்ட கருத்தும் கவனிக்கத்தக்கது.

### நல்லிணக்கத்துக்கு முன் நல்மனம் வேண்டும்:

ஆயினும், "நல்லிணக்க ஆணைக்குழு மக்களின் பிரச்சினையை சீராக ஆராய்ந்துள்ளது – கர்தினால் ரஞ்சித் ஆண்டகை" எனத் தலைப்பிட்டு, "ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளரது இலங்கை தொடர்பிலான அறிக்கையைவிட ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, பொதுமக்கள் பிரச்சனை குறித்து சீராக ஆராய்ந்துள்ளது." மேலும், "யுத்தச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து இந்த அறிக்கை சிறப்பாக ஆராய்ந்துள்ளது. இந்த முயற்சி இலங்கையின் சொந்த முயற்சி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்" என 24.12.2011இல் வலம்புரிப் பத்திரிகையின் செய்திக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. தொடர்ந்து, "இது மாத்திரமே தீர்வு என எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் அனைத்து பிரச்சினைகளையும் சர்வதேச சமூகத்திடம் முறையிடும்போது சமாதான முயற்சிகளை அது சீர்குலைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்" எனவும் குறிப்பிட்டுள்ளது. இக்கருத்துக்களை 22.12.2011 அன்று ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றிருக்கிற கிறிஸ்மஸ் நிகழ்வில் கருதினால் தெரிவித்திருக்கிறார். இதுதான் அரச தலைவர்களுக்கு மேதகு கருதினால் அவர்களால் வழங்கப்பட்ட 2011ஆம் ஆண்டுக்கான கிறிஸ்மஸ் நற்செய்தி!

"வெளியில போய்வரக் கூடியதாக இருக்கு...", "கொழும்புக்கு நல்ல பஸ்கள் ஓடுது...", "எல்லாச் சாமான்களும் கிடைக்கிது...", "புது றோட்டுக்கள் எல்லாம் போடுறாங்க...", "வேற உங்களுக்கு என்ன பிரச்சினை?..." என்று தமிழ் மக்களாகிய எங்களைப் பார்த்து இன்றும் கேட்கின்ற 'பரிசுத்தமான மனிதர்கள்' இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஒரு மக்கள் இனத்தின் வாழ்வு வெளியே போய்வருவதோடும், தின்னுவதோடும், றோட்டோடும் முடிந்துவிடுகிறது அவர்கள் பார்வையில்!...

பசுமாட்டுக் கூட்டங்களும் பட்டியிலிருந்து வெளியே போய்வருகின்றனவே! அவையும், சமான்கள் வாங்கி நம்மைப்போல் சமைத்துத் தின்னாமல் போனாலும், தாங்களாகவே தீனியைத் தேடிக்கொள்கின்றனவே! மேலும், றோட்டுக்களை யாரும் அவைகளுக்குப் அமைத்துக் கொடுக்காமல் தாமாகவே அவை தமக்கு அமைத்துக் கொள்கின்றனவே! தீர்க்கமாகத் தியானித்தால்: பசுமாட்டுக்கூட்டம் பட்டிக்குள் வாழ்கின்றன, நாங்கள் படை நடுவில் வளர்க்கப்படுகிறோம்!

தற்போது தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையைப்பற்றி 'யாழத்தொனி' புரட்டாதி – மார்கழி இதழில் யாழ். அமலமரித் தியாகிகளின் முதல்வர் குறிப்பிட்டதுபோல மலையைக் கிண்டி எலியொன்றைப் பிடித்த கதையாய் இருக்கிறது.

### ஆயனை நம்பியிருக்கும் ஆடுகள்:

இந்நிலையில், வலம்புரி ஆசிரியர், "...தமிழ்ப் பகுதியில் இருக்கக்கூடிய மேதகு ஆயர் பெருமக்களேனும் தமிழ் அரசியல் தலைமைகளை ஒற்றுமைப்படுத்தி அவர்களை வழிப்படுத்தி தமிழினத்தை ஒரே பாதையில் பயணிக்கச் செய்து உரிமையை வென்றெடுக்கும் வழிகளைத் தீட்டவேண்டும். இத்திட்டத்தை ஆயர்கள் சிலர் போற்றுதற்குரிய வகையில் செய்கிறார்களாயினும் விலகு நிலையில் இருப்போரும் உள்வரவேண்டும் என இறைவனின் பெயரால் இப்புனித நாளில் அழைக்கின்றோம், வருக" என கிறிஸ்து பிறப்பு நாளில் தமது பத்திரிகை ஆசிரியர் கருத்தாக கூறிநிற்கிறார்.

மன்னா பத்திரிகை ஆசிரியர் மார்கழி இதழில் வடக்கு-கிழக்கு தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களின் ஒருமித்த குரல், ஆட்சியாளர்கள் மட்டத்திலும் சர்வதேச சமூத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டி இருக்கிறார். கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு எத்தனை எத்தனை பிரமுகர்கள், தூதுவர்கள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் இதுவரையில் சென்றுவிட்டார்கள்! அம்மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்ற நீண்ட பல கிலோமீற்றர்கள் நடந்து திரிவதை ஓர் ஆயனின் கண்கள் மட்டும் அவதானித்திருக்கின்றன! அதனால்த்தான், இந்த ஏழைமக்கள் கடவுளின் பிரதிநிதிகளான ஆயர்களின்மீது இன்னும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

## புனித பொலிக்கார்ப்

### ஆயர், மறைசாட்சி – (கி.பி. 156)



**மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்**

**பெப்ரவரி**

இப்புனிதர் "அப்போஸ்தலிக்க தந்தையர்கள்" என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற குழுவைச் சார்ந்தவர். நற்செய்தியாளர் புனித யோவானின் சீடர். பொலிக்கார்ப்பிடம் மறைக்கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள் புனித இரனேயுசும், பாப்பியாசும் ஆவர். அந்தியோக்கியா நகர் ஆயர் புனித இஞ்ஞாசியார் கொலைக் களத்திற்குச் சங்கிலிபோட்டு இழுத்துச் செல்லப்பட்ட போது, ஸ்மிர்னா நகரில் பொலிக்கார்ப் அவரைச் சந்தித்து, அவர் கட்டப்பட்டிருந்த சங்கிலியை வணக்கத்துடன் முத்தமிட்டார். "அந்தியோக்கியா நகர் திருச்சபையைக் கவனித்துக் கொள்ளும்" என்று இவரை உருக்கமாகக் கேட்டுக்கொண்டார் இஞ்ஞாசியார்.

கொடுங்கோலன் மார்க்கஸ் ஆரிலியுஸ் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் பெரும் வேதகலாபனை தோன்றியது. பலரும் துணிச்சலுடன் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள். பொலிக்கார்ப்பை விசுவாசிகள் ஒளிந்து கொள்ளும்படி கேட்டனர். அவ்வாறு மறைந்த நேரம் ஒருவன் அவரைக் காட்டிக் கொடுத்தான். அவரைக் கைதியாக்க வந்த கும்பலைப் பார்த்து, சற்றுநேரம் செபித்துவிட்டுவர இசைவு கேட்டார். அவர்களுக்கு இரவு உணவளித்தார்.

பின்னர் ஆர்ப்பரிப்புடன் கிளம்பினார். "கிறிஸ்துவை மறுதலித்தால் உனக்கு விடுதலை" என்று முழங்கினான் மன்னன். "86 ஆண்டுகளாக அவருக்கு ஊழியம் புரிந்துவருகிறேன். அவர் எனக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கவில்லை. அத்தகையவரை நான் பழித்துரைப்பேனோ? நான் ஒரு கிறிஸ்தவன்" என்று அச்சமின்றி பதில் உரைத்தார். இவ்வாறு விடை அளித்தபோது அவரது முகம் தெய்வீக ஒளியுடன் காணப்பட்டது. "இவன் சுட்டெரிக்கப்பட வேண்டும்" என்று ஆணை பிறக்கவே, எதிர்ப்பாளர்கள் வெறியுடன் அங்குமிங்கும் ஓடி விறகுக் கட்டைகளைக் கொண்டுவந்து சேர்த்தனர். "நான் அஞ்சி அழுது ஓட மாட்டேன். எனவே என்னைக் கட்டவேண்டாம். எனக்கு உறுதியூட்டும் தெய்வம் நான் அசைவுறாதிருக்க வரமருள்வார்" என்றார். எனவே கைகளை மட்டும் முதுகுப்புறம் கட்டினார்கள். நெருப்பு மூட்டப்பட்டது. ஆனால் அவ்வேளையில் ஒரு புதுமையும் நிகழ்ந்தது. விறகுக் கட்டைகள் விரைவாகப் பற்றி எரிந்தாலும் நான்கு சுவர்கள் எழும்பி அவரைப் பாதுகாப்பதுபோல் தோன்றியது! தசை வெந்தால் ஏற்படும் துர்நாற்றத்திற்குப் பதில், நறுமணப்புகை வந்து கொண்டிருந்தது. இதனால் ஆத்திரமடைந்த கொடுங்கோலன் அவரை வெளிக்கொணர்ந்து, ஈட்டியால் குத்திக் கொல்லக் கட்டளையிட்டான். அப்போது அவர்மீது ஒரு புறா பறந்து வந்தது. நெருப்பை அணைக்கப் போதுமான இரத்தம் மேலிருந்து புறப்பட்டு வந்தது! வெறித்தனம் நீங்காத சூழலில், அவரது உடலை அரக்கன் எரித்துச் சாம்பலாக்கினான். இந்நிகழ்ச்சி கி.பி.155இல் இதே நாளில், பிற்பகல் இரண்டு மணிக்கு நடந்ததாக வரலாறு கூறுகிறது.

*சிந்தனைக்கு*

"நமது மனிதத் தன்மையிலே பங்குபெற்றாலும், கிறிஸ்துவின் சாயலாக மிகவும் நிறைவுற உருமாற்றம் அடைகின்றவர்களின் வாழ்வில், தம் பிரசன்னத்தையும் திருமுகத்தையும் இறைவன் தெளிவாக மிளிரச் செய்கின்றார்" (சங்க ஏடுகள். திருச்சபை எண். 50) ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். ஏ. மிராண்டா அவர்களின் 'உள்மன யாத்திரை' நூல் வெளியீட்டு விழா

பேசாலையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் கலாபூசணம் எஸ். ஏ. மிராண்டா அவர்களின் 'உள்மன யாத்திரை' என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமாகிய அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். ஆசிரிய ஆலோசகர் திருமதி றெஜிமா அவர்கள் நூல் நயப்புரை வழங்கினார்.

மிராண்டா ஆசிரியர் அவர்கள் 2002ஆம் ஆண்டு 'மாமத் தளபதி' என்ற பெயரில் புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து நூலையும், 2006ஆம் ஆண்டு 'பேசாலைச் சமூகத்தின்


திரு. எஸ். ஏ. மிராண்டா

பண்பாட்டு வேர்கள்' என்ற சமூக வரலாற்று நூலையும் வெளிக்கொணர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாகித்திய விருது நாயகன் எஸ். ஏ. உதயனின் இன்னுமொரு நாவல் 'சொடுதா'

பேசாலையைச் சேர்ந்த எஸ். ஏ. உதயன் அவர்கள் தனது நான்காவது நாவலாக 'சொடுதா' என்ற பெயரில் இன்னுமொரு நாவலை வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நாவல் வெளியீட்டு விழா கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நூல் கலையருவி எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் வெளியீடாக வந்துள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமாகிய அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். பிரதம அதிதியாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம். ஷியான் அவர்கள் கலந்துகொண்டார்.

எஸ். ஏ. உதயன் அவர்கள் தனது கலை இலக்கிய முயற்சிகளுக்காக பலவித விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். 1998இல் இளைஞர் விவகார அமைச்சு நடாத்திய நாடு தழுவிய நாடகப்போட்டியில் இவர் சிறந்த நாடக நெறியாளருக்கான 'ஆனந்த கீர்த்திகா' விருதைப் பெற்றார்.

லோமியா நாவலுக்காக 2009ஆம் ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பவள சுந்தராம்பாள் இலக்கிய விருதையும், இலங்கை இலக்கியப் பேரவை விருதையும், வடமாகாண சிறந்த நூலுக்கான விருதையும் பெற்றுக்கொண்டார்.

தெம்மாடுகள் என்ற நாவலுக்காக 2010ஆம் ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருதையும், வடமாகாண சிறந்த நூல் விருதையும், மன்னார் தமிழ்ச்சங்கத்தின் இலக்கியப்பாராட்டு விருதையும் பெற்றுக்கொண்டார். வாசாப்பு நாவலுக்காக 2010ஆம் ஆண்டு வளர்கலை



மன்றத்தின் எழுத்தாளர் கௌரவிப்பையும், 2011 இல் வடமாகாண சிறந்த நூல் விருதையும், அரச இலக்கிய விழாவில் சாகித்திய விருதையும் பெற்றுக்கொண்டார். இதைவிட பல பரிசில்களும், சான்றிதழ்களும் இவருக்கு வழங்கப்பட்டன. உதயனின் இலக்கியப் பயணம் தொடர வாழ்த்துகின்றோம்.




# வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை!


*"மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே"* வண. அ. சேவியர் குரூஸ் அடிகளார் குருவாக அருள்பொழிவு செய்யப்பட்டு இறைபணி தொடர்ந்து, அரைநூற்றாண்டை அடைந்து பொன்விழாவை பொலிவோடு கொண்டாடுகின்றார்.

திருவுளச்சபை சார்பாக அவருக்கு எமது வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் குருத்துவ வாழ்வில் அரைநூற்றாண்டை நிறைவுசெய்கின்றார் என்றால் இறை உறவிலும், பிறர் உறவிலும் நிறைவாக வாழ்ந்திருக்கிறார் என்பதுதான் உண்மை. எளிமையான வாழ்வு, தெளிவான பாதை, இரக்க குணம், செபவாழ்வு இவையெல்லாம் அவர் அரை நூற்றாண்டை அடைய உதவியது. இவரைப்பற்றி அதிகம் எழுதலாம். ஆனால் அவரோடு நட்போடு பழகியதில் எனக்கு பிடித்தவைகளில் ஒன்றை மட்டும் வரலாற்றில் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

ஒரு புலவரும், சாக்கியமுனிவரும் பேசிக்கொண்டது.

*"நீங்கள் மகாத்மாவா?*
*இல்லை*
*நீங்கள் ஞானியா?*
*இல்லை*
*நீங்கள் அவதாரமா?*
*இல்லை*
*பின் நீங்கள் யார்?*
*கடவுளா? இல்லை*
*மனிதனாய் வாழும் மனிதன்"* இதுதான் நான் கண்ட வண. சேவியர் குரூஸ் அடிகளார்.

மக்கள் அவரை அன்புசெய்கிறார்கள் எனில், அவரும் மக்களை அன்புசெய்தார் என்றுதான் அர்த்தம். ஏழைகளையும், எளியவர்களையும், அகதிகளையும் சிறையில் உள்ளவர்களையும், நோயுற்றவர்களையும், தனிமையில் உள்ளவர்களையும் தேடிச்செல்லுகின்ற இரக்ககுணமுடையவர். எப்போதும் எல்லோராலும் அணுகக்கூடியவர். மனிதரை மதிப்பது, இறைவனை



துதிப்பது என்பதற்கு இலக்கணமானவர். இறைவார்த்தையில் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைத்தார்.

இவரது பணி சிறக்க, உடல் நலம் தொடர்ந்து ஒத்துழைக்க எனது மன்றாட்டுக்கள். அருட்தந்தை அவர்களே, உங்களை மன்னார் மறைமாவட்ட வரலாறு என்றுமே மறக்காது. வாழ்க உங்கள் பணி, தொடர்க இறை வழி.

*அருட்பணி.சகாயநாதன்(தி.ச),*
*திருவுளச் சபை, கண்டி.*

# மும்மத சகோதரர்களும் இணைந்து நடாத்திய செட்டிகுளப் பங்கின் ஒளிவிழா நிகழ்வுகள்

செட்டிகுளப்பங்கின் ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த மார்கழித் திங்கள் 28ம் நாள் மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு. அலைக்ஸாண்டர் (பெனோ) அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக அன்புபுரம் நாமகள் வித்தியாலய அதிபர் திரு. எஸ். தர்மரெட்ணம் அவர்களும், சிறப்பு விருந்தினராக இலுப்பைக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. ஆரோக்கியம் அடிகளாரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இவ் ஒளிவிழாவின் சிறப்பு என்னவென்றால் இந்து, இஸ்லாம் மதத்தைச் சார்ந்த சகோதரர்களும் கத்தோலிக்கருடன் இணைந்து கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை வெளிக்கொணரும் சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றியமையாகும். இது கிறிஸ்து கொண்டுவந்த சமாதானத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் செட்டிகுளப் பங்கின் சகல ஆலயங்களிலிருந்தும் சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை கலை நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

இந்நிகழ்வின்போது 2011ம் ஆண்டில் மறைக்கல்விப் பரீட்சையில் 75ற்கு மேல் புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் பாராட்டப்பட்டதுடன் இவர்களுக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் பங்குத்தந்தை வழங்கினார். அத்துடன் மறையாசிரியர்கள், ஆலயப்பணியாளர்களையும் பாராட்டி அவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

**திருமதி எம். எ. மோகன் (அதிபர்)**
**வ/முதலியார்குளம் றோ.க.த.க. பாடசாலை.**

# மன்னார் பேராலய கிறிஸ்மஸ் நிகழ்வுகள்








மன்னார் பேராலயத்தில் இவ்வாண்டு கிறிஸ்மஸ் நிகழ்வுகள் அர்த்தமுள்ளவகையிலும், சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் நடைபெற்றன. டிசம்பர் 26ம் திகதி முதல் 30ம் திகதி வரை கிறிஸ்மஸ் கரோல், ஒளிவிழா என்றவாறு பங்கு முழுவதும் ஆரவாரமும், மகிழ்ச்சியும் காணப்பட்டது. கரோலைச் சிறப்பித்தவர்கள் பீடப்பணியாளர்கள், பாடகர் குழாம் மற்றும் இளைஞர் ஒன்றியத்தினர்.

துணை ஆலயங்களிலும் பங்கின் பிரதான சந்திகளிலும் ஒவ்வொரு இடத்திலும் இருபது நிமிடங்கள் என்றாவது பாடல் இசைக்கப்பட ஐந்து, ஆறு கிறிஸ்மஸ் தாத்தாக்கள் குதூகலிக்க ஊர்மக்களும் இணைந்து ஆட, சிறார்கள் ஆவலோடு எதிர்நோக்கிய இனிப்புப் பண்டங்களை கிறிஸ்மஸ் பாப்பாக்கள் மழையாக பொழிய, அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பாலகன் இயேசு அவரது பெற்றோருடன் வலம் வந்த காட்சியானது தமது கண்களையே நம்ப முடியாமல் இருந்தது என பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

29ம் திகதி மாலை 6.30 மணிக்கு பேராலயத்தின் போப் ஜோண் போல் அரங்கில் இடம்பெற்ற நிகழ்வுகள் யாவும் சிறப்பாக அமைந்திருந்தன. சிறார்கள், இளையோர், வளர்ந்தோர், முதியோரென அனைத்துத் தரப்பினரும் கிறிஸ்துகொண்டுவந்த நற்செய்தியினை நாடகங்கள், நாட்டியங்கள், வில்லுப்பாட்டுக்கள், பாடல்கள் மூலம் எடுத்தியம்பினர். எமது பங்கின் மேடை நிகழ்வுகளுக்கு வயதெல்லை இல்லை என்றாற்போல் அமைந்திருந்தது அன்றைய ஒளிவிழா நிகழ்வுகள்.

மறுதினம் மற்றுமோர் நிகழ்வு! மன்னார் வைத்தியசாலையில் நோயாளர்களைக் கௌரவித்து கரோல் பாடி அவர்களை மகிழ்விக்க எடுத்த முடிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள். இங்கேயும் கிறிஸ்மஸ் தாத்தாக்களின் அட்டகாசம் ஏராளம். பீடப்பணியாளர் குழாம் பாடல்கள் இசைக்க கிறிஸ்மஸ் தாத்தாக்கள் நோயாளர்களது கட்டில்கள் அருகே சென்று வாழ்வுதய நிறுவனம் உவந்தளித்த அன்பளிப்புக்களை வழங்கி நோயாளர்களை மகிழ்வித்தனர். நோயாளர்கள் பலரது கூற்றுப்படி இந்த நிகழ்ச்சியின் மூலம் நோயின் தாக்கம் பெருமளவில் தங்களுக்குக் குறைந்ததாக அவர்கள் சான்றுபகர்ந்தனர். இறைவன் பல வடிவத்தில் பலர் ஊடாக அவரை நம்புவோரை தொடுகின்றார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.






தகவல்: திரு. ஞானப்பிரகாசம் அருட்பணிப் பேரவை செயலர், தூய செபஸ்தியார் பேராலயம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### யோ. புரட்சியின் கவிதைகள்

#### கடன்காரர்....

அம்மாவெனும் அவதாரமே...
ஆண்டாண்டு காலமுன்னை
அரவணைத்தே பார்த்தாலும்
பிரசவ நொடி நீ பட்ட
ரணப்பொழுதுக்கு ஈடாகுமா?

கைநிறைய காசுழைத்து -
உன்
கையிலே தந்தாலும்
என்னைப் பெறுகையிலே
நீ சிந்திய
இரத்தத் துளிகளுக்கு
இணையாகுமா?
நடமாடும் தெய்வம் நீ
நடமாட முடியாது
முடமான பின்பு உன்
மலம் அள்ளிப்போட்டு
தினம்சேவை செய்தாலும்
கர்ப்பத்தில் நானுதைத்த
கணங்களை நீ தாங்கிய
கஸ்ரத்திற்கு சமமாகுமா?

கைநிறைய
காசு இருந்தென்ன...
காசினியில்
முதற் பணக்காரனென்ற
சிறப்பிருந்தென்ன..
அன்னையவள் முன்னே
அனைவரும் கடன்காரர்.



#### வெளிச்சம்

குப்பி விளக்கு
ஒளிர்கையிலே
குடிசை வெளிச்சமாகும்.

கோல தீபம்
எரிகையிலே
கோயில் வெளிச்சமாகும்.

ஆதவனவன்
எரிகையிலே
அவனியே வெளிச்சமாகும்.

மனச்சாட்சி
கொஞ்சம் ஒளிர்ந்தால்
மனமது வெளிச்சமாகும்.

#### பள்ளி வயதின் புள்ளி ஆசைகள்

சிங்கார தேனீபோல
கூடுகட்ட ஆசையிருக்கு.
சிட்டுப்போல வானிலே
சிறகசைக்க ஆசையிருக்கு.
குயில்போல நானும் தினம்
கூவித்திரிய ஆசையிருக்கு.
கூட்டமான மீன்கள்போல
நீந்தித்திரிய ஆசையிருக்கு.

வான்மிதக்கும் வட்டநிலவை
தொட்டுப் பார்க்க ஆசையிருக்கு.
வானவில் நிறத்தில் கொஞ்சம்
எடுத்துக்கொள்ள ஆசையிருக்கு.
கார்முகில் தனிலேறி
பயணம்செய்ய ஆசையிருக்கு.
காட்டாறு தன்னோடு
பேசிப்பார்க்க ஆசையிருக்கு.

எத்தனை ஆசைகள்
இந்தப் பள்ளி வயதிலே
அத்தனை ஆசையும்
அற்புதமாய் நிறைவாகுது
எந்தன் கற்பனையிலே.

### சுயநலத்தின் தாண்டவம்....

மனிதம் மடிந்து சுயநலம்
தாண்டவம் ஆடும்
காலமிது.
நான் வாழ்ந்தால்
போதும் என்ற
மனம் கொண்டோர்
வாழும் பூமி இது.
அதனால்தான் என்னவோ
இயற்கையின் அழிவுகள்,
போரின் கொடூரம்...
இருந்தும் மனிதம் கொண்ட
மனிதர்கள் சிலர்
இருப்பதால்தான்
இன்னும் பூமியில் மழை.

போரின் கெடுபிடியில்
தன்னைக் காப்பாற்ற
பிறரை காட்டிக்கொடுத்தான்.
வறுமையின் பிடியில்
மாற்றான் வீட்டில் கன்னம்
வைத்தான்.
இலவசக் கல்வி என்ற
காலம் மாறி
காசுக்கு கல்வி என்ற நிலை.
இது ஏன்?
விளங்கவில்லை எனக்கு.

ஆன்மீகம் குறைந்து
சுயநலம் வளர்கிறது.
பில்லி, சூனியம் மலிந்து
பிறர்குடியை கெடுக்கின்றது.

சுயநலமே உன்னை
நேசிப்பவரை நீயும்
நேசிப்பாயோ? உன்னை
வெறுப்பவரை நீயும்
வெறுப்பாயோ?

மற்றவருக்காக
உயிரை கொடுப்பதைவிட
மேலான அன்பு யாரிடமும்
இல்லை என்றார் யேசு.
மற்றவரின் உயிரை
எடுப்பதில் குறியாய்
இருக்கிறது மனிதம் இன்று.

சுயநலத்தை களைவோம்
புது உலகம் படைப்போம்.

*சேவியர் லபோறா*
*மேரி குருஸ், பேசாலை.*

### கொஞ்சம் —— சிரிங்க



**கணவன்** : ஏன் மரக்கறிக் கடையில அம்புயுலன்ஸ் நிக்கிது?
**மனைவி** : அது வேறொன்னும் இல்ல, மரக்கறி விலையைக்கேட்டு நிறையபேர் மயங்கிட்டாங்களாம் அதுதான்!

.........................

**அப்பா** : டேய் செடிகளுக்கு தண்ணீர் ஊத்துடா.
**மகன்** : மழை பெய்துகொண்டு இருக்குதப்பா
**அப்பா** : அதற்கென்ன குடையைப் பிடித்துக்கொண்டு ஊத்து.
**மகன்** : அப்பா, உங்கட மண்டைல களிமண் நிறையவே இருக்குதுனு எனக்கு இண்டைக்குத்தான் தெரியும்.

*அ. விஜய்ந் கூஞ்சு, கோயில் வீதி, தாழ்வுபாடு,*

**கணேஸ்** : ரவி நீ ஏன் மீன் சாப்பிடுகிறது இல்லை?
**ரவி** : முள்ளுக் குத்தும் அதனால்தான்.
**கணேஸ்** : அப்ப செருப்பு போட்டுக்கொண்டு சாப்பிடலாம் தானே!

*எல். ரதின் சாலட் (றேனு), கொன்னையன் குடியிருப்பு.*

**அப்பா** : மகனே நம்மவிட வயசில பெரியவங்ககிட்ட மரியாதையாக நடந்துக்கனும் சரியா.
**மகன்** : ஏம்பா அம்மாவுக்கு உங்களவிட வயது கூடவா அப்பா?

.........................

**மனைவி** : ஏங்க நான் இறந்தபின் எனக்காக என்ன கட்டுவீங்க?
**கணவன்** : உனக்காக உன் தங்கைக்கு தாலி கட்டுவேன்.

.........................

**டாக்டர்** : உங்களுக்கு வந்திருக்கிறது என்ன வியாதின்னு தெரியல.
**பேஷண்ட்** : அப்படின்னா நீங்களே அதுக்கு நல்லதா ஒரு பெயர் வச்சிடுங்க டாக்டர்!

*சா. ஆன் யன்சினி, புனித சூசையப்பர் ஆலயம்,*
*யா/ புனித தெரேசாள் மகளீர் கல்லூரி,*
*அச்சுவேலி, யாழ்ப்பாணம்.*

## சிறுகதை

*எ. அகிலா,*
*எமில்நகர், மன்னார்.*

### உறவின்றி தனிமையிலே......

டாங்.. டாங்... கோவில் மணி ஓசை கேட்டு திடுக்கிட்டு கண்விழித்து கடிகாரத்தைப் பார்த்தான் திவாஸ்கரன். மணி 5.30ஐ தாண்டிவிட்டது. "அலுவலகம் போகணும், வீட்டு வேலை எல்லாம் செய்யணும்" என்று எண்ணியவாறே எழுந்து கட்டிலில் உட்கார்ந்தான்.

இன்றைய திகதி என்ன என்று கலண்டரைப் பார்த்தான். 26ம் திகதி டிசம்பர் மாதம்! அதைப் பார்த்ததும் அவன் கண்கள் குளமாகின. கடந்த 7 வருடங்களுக்குமுன் இன்றைய நாள் எவ்வாறு இருந்தது என எண்ணினான். நான் ஏன் வாழ வேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்? யாருக்காக சம்பாதிக்க வேண்டும்? என தனக்குத்தானே பல கேள்விகளை கேட்டுக் கொண்டான். அவன் கடந்தகால சந்தோசமான வாழ்வு மீண்டும் வராதா? என்ற ஏக்கத்தோடு பழைய நினைவுகளோடு சங்கமமாகினான்.

திவாசின் குடும்பம் ஓர் ஏழைக்குடும்பம். அவனுடைய அன்பிற்கு இணையான அம்மா, அப்பா, பாசமலர்களான தம்பி, தங்கை என்றவாறு அழகான ஒரு குடும்பம். இவர்களின் குடும்பத்தில் பொருளாதாரப் பிரச்சினை இருந்தது. ஆனால் வேறொன்றும் குறைவில்லை. ஆலயப்பணி, பொதுப்பணி என்றால் சொல்லவே தேவையில்லை. மிகவும் சந்தோசமாக வாழ்ந்தனர்.

தன் மனைவியையும், அன்புப் பிள்ளைகளையும் கஸ்டப்படுத்தாமல் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும் என்ற அக்கறையில் கடுமையாக கூலி வேலை செய்து உழைத்தார் திவாஸ்சின் அப்பா கணேஸ். ஆனால் அவர் தன் உடலைக் கவனிக்காமையினால் இடையிடையே நோய்வாய்ப்பட்டார். இதனால் திவாசின் தாய் சுசிலாவும் கூலி வேலை செய்ய ஆரம்பித்தாள். 3 பிள்ளைகளை படிக்கவைப்பது என்பது கஸ்டம்தான். குடும்ப நிலையை உணர்ந்த திவாஸ் தானும் வேலைக்குச் செல்ல பெற்றோரின் அனுமதி கேட்டான். அவர்கள் மறுத்து விட்டனர். எத்தகைய கஸ்டப்பட்டாலும் தங்கள் கஸ்டத்தை பிள்ளைகள் படக்கூடாது என கணேஸ் திட்டவட்டமாகக் கூறினார். திவாசின் திறமைக்கு ஏற்ப அவனை படிக்கவைக்க வேண்டும் என்று பெற்றோர் ஆசைகொண்டிருந்தனர். திவாசும் தன் பெற்றோரின் எதிர்பார்ப்பு ஏமாறாதவாறு உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் படித்தான். படிப்பில் கெட்டிக்காரனாகத் திகழ்ந்தான். எதிலும் முதலிடம் பெறுவான். இதைப் பார்த்து அவனின் குடும்பம் பூரித்தது.

நாட்கள் ஓடின. கணேஸ் படுக்கையிலேயே கிடந்தார். திவாஸ் உயர்தரம் படித்துக்கொண்டிருந்தான். சுசிலாதான் கூலி வேலை செய்து குடும்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "திவா நீ நல்லாப் படிச்சு பெரிய ஆளா வரணும் அப்பாட கஸ்ரத்தை நீ போக்கணும்" என்று சுசிலா அடிக்கடி கூறுவாள். அப்போது தாயாருக்கு ஆறுதல் கூறுவதுபோல "அம்மா ஏன் கவலைப்படுகிறீங்க. என்ர படிப்பு முடிய இன்னும் கொஞ்சக் காலந்தானே கிடக்கு. அதுக்குப்பிறகு நமக்கென்ன கஸ்டம்? நானே குடும்பத்த பார்ப்பேன்" என்று கூறுவான். இதைக் கேட்டதும் திவாசின் தந்தைக்கு மாத்திரை போடாமலே நோய் குணமாகியதுபோல இருக்கும். சுசிலா தன்னைப்போல பிள்ளைகளையும் இறைபக்தியிலே வளர்த்தாள். திவாசின் உயர்தரப் பரீட்சை நெருங்கியது. ஊக்கத்தோடு படித்து பரீட்சை எழுதினான். சில நாட்களில் முடிவுகள் வெளியாகின திவாசும் அவன் குடும்பமும் எதிர்பார்த்ததுபோல நல்ல முடிவுகள் கிடைத்தன. பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. ஆனால் அவன் குடும்ப சூழல் தடுத்து நிறுத்திவிட்டது. பாவம் திவாஸ் எத்தனை கஸ்ர துன்பங்கள் மத்தியில் படித்தான். அன்று அவனுக்கு உதவ யாருமே முன்வரவில்லை. மனதைத் திடப்படுத்திக்கொண்டு தன் திறமைக்கு நல்ல வேலை கிடைக்கும் என தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டான்.

பல நாட்களாக வேலைக்கு அலை மோதித்திரிந்து ஒரு வேலையில் சேர்ந்தான். அது அவன் தகுதிக்கு ஏற்ற வேலை இல்லை. இருப்பினும் சமாளித்தான்.

அன்று வேலைக்கான இன்ரவியூ. திவாஸ் போவதற்காக புறப்பட்டான். "அம்மா நான் இன்ரவியூக்கு போறன். அடுத்தபடியா நான் வேலைக்குப்போறதுதான்" எனக் கூறியபடி தன் பெற்றோரின் காலில் விழுந்து வணங்கிவிட்டு புறப்பட்டான். "அப்பா கவலைப்படாதீங்க இனி நீங்க எந்த கூலிப்பாடும் படக்கூடாது நானே உங்களையும் அம்மாவையும் தம்பி தங்கச்சியையும் பார்ப்பேன். எந்தக் கவலையும் கூடாது" என ஆறுதல்மொழி கூறிவிட்டு புறப்படத் தயாரானான்.

காலை 7.30 மணி பேருந்து வரும் சத்தம் கேட்டது. "நான் போயிற்று வாறேன்" எனக் கூறியபடி குதுகலத்தோடு ஓடிச் சென்றான் திவாஸ். அவனின் சந்தோசத்தைப் பார்த்து அவனுடைய பெற்றோரின் மனம் ஆறுதல் அடைந்தது.

மாலை 6.00 மணியாகியது. இன்ரவியூ நல்லபடியாக முடிந்தது. புதுவருடத்திலிருந்து வேலைக்கு வரலாம் என்று பதில் கூறினார்கள். அந்த சந்தோசத்தோடு பல கற்பனைகளுடன் வீடு நோக்கி விரைந்தான். வந்தவன் கண்ணுக்கு யாருமே தென்படவில்லை! திகைத்துப்போனான். தூரத்தில் ஒரே அழுகுரல்தான் கேட்டது. ஓடிச்சென்று விசாரித்தான். சற்று நேரத்திற்கு முன் வந்த சுனாமி பேரலை அனைவரையும் அள்ளிச் சென்றுவிட்டது என்று கூறினார்கள். ஓலமிட்டு அழுதான், புலம்பினான், குதூகலத்தோடு வந்தவன் கூனிக் குறுகினான். தனிமையாக்கப்பட்டான், தத்தளித்தான், தவித்தான் ஒன்றுமே புரியவில்லை! அவனுடைய அண்டை வீட்டார் ஒருசிலர் தப்பினார்கள். அவர்கள் திவாசிற்கு ஆறுதல் கூறி தேற்றினார்கள்.

இன்று திவாஸ் கைநிறைய சம்பாதிக்கின்றான். அவன் பெரிய கம்பெனி முதலாளியாய் இருக்கின்றான். ஆனால் என்ன பலன்? அதை பயன்படுத்த உறவின்றி தனிமையிலே தவிக்கின்றான்.■

## மன்னா விளம்பரப் பலகை

- அன்பின் ஆழம் எவ்வளவு என்பதை பிரிவின்போதுதான் உணர முடியும்.
- முயற்சியில் தோல்வியடைவது தவறு அல்ல. அடைய விரும்பும் இலட்சியம் உயர்ந்ததாக இல்லாமல் இருப்பதுதான் தவறு.
- சுத்தமான மனச்சாட்சியைப்போல் நன்கு உறங்குவதற்கு உதவக்கூடிய சுகமான தலையணை எதுவும் கிடையாது.
- மனிதன் நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்கிறான். ஆனால் கடைசியில் நிலம் மனிதனைச் சொந்தமாக்கிக்கொள்கிறது.

*கி. டெலா றோஸ், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி,*

தொடருகின்ற முயற்சிகள் தோல்வியில் முடங்குவதில்லை.
வாழப்படும் வாழ்க்கையில் வளர்வதே வெற்றியாகும்.
மன்னித்து மகிழ்வுறுவதே மனித வாழ்வின் மகத்துவம்
(படித்து சுவைத்தது)

*யே. நிலோஜினி,*
*பொன்தீவுகண்டல்.*

"உன் மனதில் எந்தப் போராட்டம் உன்னை வாட்டினாலும் நீ அதை எதிர்கொண்டு இலட்சியத்தை நோக்கி நட"

*க. றகுநாதன், இலுப்பைக்கடவை, மன்னார்.*

"பணிவு துணிவு உள்ளவன் வாழ்வில் தோல்விகளை சந்திப்பதில்லை."

*யே. அன்ரன்லேனாட் (றொசாளன்),*
*பிடாரிகுளம், முருங்கன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 12

— ஆங்கில மூலம் —

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## மயூறினுடைய பெருந்தன்மை

மயூறின் அவளுடைய பங்கைச் சேர்ந்த சுறுசுறுப்பான யுவதிகளின் கூட்டத்திலே ஒரு கவர்ச்சியான பெண். அவர்களுடைய ஏதாவது ஒரு உல்லாச நிகழ்ச்சிக்கு அவள்தான் உயிர்நாடி. அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் சுற்றுலா, உல்லாச நிகழ்ச்சி ஆகியவற்றிற்கு அவள் இல்லை என்றால் சுவாரசியமும் இல்லை, உற்சாகமும் இல்லை. அவளுடைய நேர்மையான குணத்தினாலும், குதுகலத்தினாலும் அனைவராலும் கவரப்பட்டு உயர்ந்த மதிப்புப் பெற்றிருந்தாள். அவள் சரளமாக பழகுவதனால் அவளுடன் பேசும் யாவரும் அவளை சினேகிதியாக்கிக்கொள்வார்கள். அநேக சிநேகிதிகள் தங்களின் இரகசியங்கள், பிரச்சினைகள், ஆழ்ந்த எண்ணங்கள் ஆகியவற்றை அவளை நம்பி அவளுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

சந்தேகமின்றி அவர்களுடைய கூட்டத்திலே ஆழ்ந்த செல்வாக்குப் பெற்றிருந்தாள். அங்கத்தவர்கள் அவளுடன் சரளமாகப் பழகுவதில் ஆனந்தம்கொண்டிருந்தனர்.

ஒருநாள் அவர்கள் சென்ற சுற்றுலா அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. ஆனால் அந்தக் கூட்டத்துக்கு பொறுப்பாயிருந்த வண. பிதா ரல்ஸ்டன் மயூறியின் நடவடிக்கைகளை சற்று அவதானித்தார். அவள் வழமையைவிட அமைதியாக சற்று விலகி ஆர்வமற்று இருந்தாள். அவர் சற்றுத் திடுக்கிட்டார். காரணம் மயூறி வழமைபோல் இல்லை. அவளுக்கு ஏதோ நடந்துள்ளது! ஆனால் அவர் எந்தவித குறிப்புக்களும் கூறாது காட்டிக்கொள்ளாதிருந்துவிட்டார். காரணம் அவளுக்கு என்ன நடந்திருக்க வேண்டுமென்று இலேசாகக்கூட அவருக்கு தெரியவில்லை.

சுற்றுலா முடிந்து திரும்பியதும் ஒருநாள் அந்திவேளையில் பிதா ரல்ஸ்டன் அவளை ஒரு பக்கமாக அழைத்து என்ன பிரச்சினை என்று விசாரித்தார். வழமையாக அவள் நேரடியாக பதில் கூறிவிடுவாள். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் அவள் சொன்னாள், "அம்மா எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். நான் வீட்டுக்குப் போக வேண்டும்" என்று. எப்படியும் தான் பிதா ரல்ஸ்டனை மறுநாள் காலை 9.00 மணிக்கு சந்திப்பதாக உறுதி கூறிவிட்டு அவள் சென்றாள். அவள் கூறியதை அவர் முற்றாக நம்பி இருந்தார்.

அவள் உறுதி கூறியதுபோல் மறுநாள் காலை 9.00 மணிக்கு பிதா ரல்ஸ்டனை அவள் வந்து சந்தித்தாள். வழமையான வாழ்த்துப் பரிமாறல்களின்பின் அவளை கதிரையில் இருக்குமாறு சைகை செய்தார். "என்ன பிரச்சினை மயூறின்? நான் உனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?" என்று கேட்டார். அவள் கீழே குனிந்து அழுதுகொண்டு கூறினாள், "எனக்குச் சொல்ல வெட்கமாக இருக்கிறது பாதர், ஆனாலும் என் நெஞ்சில் இருந்து அதை வெளியேற்றியே ஆகவேண்டும். ஒருநாள் என்னுடைய பெற்றோர் வெளியே சென்றுவிட்டனர். நான் குளித்துவிட்டு என்னுடைய அறைக்குள் தனியாக இருந்தேன். திடீரெனப் பார்க்கும்பொழுது எனது மாமா என் முன்னால் நின்றுகொண்டிருந்தார். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டு என்னைக் கட்டி அணைக்க வந்தார். நான் வெறுப்புடன் ஒரு பக்கமாக ஒதுங்க முயற்சித்தேன். ஆனாலும் அவர் என்னை தன் அருகில் வலுவாக இழுத்து இறுக்கமாக அணைத்துக்கொண்டார். இதற்கு முன்பு ஒருபொழுதும் இப்படி நடக்கவில்லை. நான் செயலற்றுநின்றேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என் பலத்தையெல்லாம் கூட்டி அவரைக் கீழே தள்ளி வீழ்த்திவிட்டு ஓடிச்சென்று எனது பெற்றோர் வரும் வரையில் தோட்டத்தில் அழுதுகொண்டிருந்தேன். உண்மையில் நான் மிகத் துக்கமாகவும் குழப்பமாகவும் இருக்கிறேன். நான் எனது மாமாவுடன் இனிமேல் பேசமாட்டேன். நான் அவரை வெறுக்கிறேன்.... அவர் சாகவேண்டும்....." மயூறின் கட்டுப்பாட்டை மீறி அழத்தொடங்கிவிட்டாள். அவள் அமைதி அடைந்ததும் குருவானவர் அவளிடம் அமைதியாகக் கேட்டார், "மயூறின் இதை எப்பொழுதாவது உனது பெற்றோருக்கு கூறினாயா? "இல்லை பாதர். நான் பயங்கர தடுமாற்றமும் கலவரமும் அடைந்துள்ளேன். அவர்களுக்கு எப்படி சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினாள்.

பிதா ரல்ஸ்டன் அவளுக்கு ஒரு தோடம்பழச்சாற்றை குடிக்கக் கொடுத்தார். "மயூறின்" அவர் தொடர்ந்தார், "இதைப்பற்றி நீ உன் பெற்றோருக்கு கூறாமல் விட்டது புத்திசாலித்தனம்.




அப்படி இல்லை என்றால் அவர்களுக்கிடையிலான உறவு பாதிக்கப்பட்டிருக்கும். தயவுசெய்து நான் சொல்வதை கவனமாக அவதானி. நீயும் நானும் உட்பட தவறுகள் எல்லோராலும் செய்யப்படுகின்றன. ஆனால் அத்துடன் உலகம் முடிந்துவிட்டது என்று அர்த்தமில்லை. மனிதனின் முட்டாள்தனம் எந்நேரமும் நம்மைப் பற்றிக்கொள்ளும். நமது வாழ்க்கையில் பாதுகாப்பற்ற வேளைகள் நிறைய உண்டு. ஆனால் நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும். நான் உனக்கு சில யோசனைகள் கூறுகின்றேன். நீ உனது நேரத்தை எடுத்து அதன்படி நட. தயவு செய்து உனது நாளாந்த பூசைப்பலிகளையும், செபங்களையும், உனது மாமாவின் மனமாற்றத்திற்காக ஒப்புக்கொடு. அவரைத் தொட்டுக் குணமாக்கும்படி நல்ல தேவனை அடிக்கடி வேண்டிக்கொள். சந்தர்ப்பங்கிடைக்கும்பொழுது நம்பிக்கையுடன் உனது மாமாவுடன் பேசு, "ஏன் அப்படி நடந்துகொண்டீர்கள்" என்று தாழ்மையுடன் கேள், என்ன இருந்தாலும் நீ அவருடைய மருமகள்தானே! அவர் ஒரு நியாயமான விளக்கத்தை தர முடியும்."

உண்மையில் என்ன நடந்ததென்பதை மயூறின் தன் சொந்த வாக்கியங்களால் பின்வருமாறு கூறுகிறாள். "நாளும் பொழுதும் அவருக்காக வேண்டினேன். இரக்கத்தையும் கருணையையும் கடவுளிடம் இரந்து வேண்டினேன். எனது மாமாவைத் தொட்டுக் குணமாக்கும்படி வேண்டினேன். ஒருநாள் எனது பெற்றோர் வெளியே சென்றபின் எனது மாமாவின் அறைக்குள் செல்வதற்குரிய தைரியத்தை வரவழைத்துக்கொண்டேன். அவர் ஏதோ எழுதுவதில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தார். நான் அவரின் அறைக்குள் சென்றதும் அவர் எழுதுவதை நிறுத்திவிட்டு பணிவாக எழுந்து நின்றார். நான் என்னையே எண்ணி நாணிக்கொண்டேன். "இவ்வளவு நாட்களாக நான் உங்களுடன் பேசாததை இட்டுக் கவலைப்படுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள் மாமா" என்று கூறினேன். அவர் தனது நடுங்கும் கரங்களை அன்புடன் என் தலைமேல் வைத்துக் கூறினார். "நான் உண்மையாகக் கவலைப்படுகிறேன் மயூறின். எனது மிருகத்தனமான நடத்தைக்கு நான்தான் உன்னிடம் மன்னிப்புக் கோரவேண்டும். மயூறின் தயவுசெய்து என்னை மன்னித்துவிடு நான் இனிமேல் ஒருபொழுதும் உன்னைத் தொடமாட்டேன்"

அவருடைய வார்த்தையில் உள்ள உண்மை வெளிப்படையாகத் தெரிந்தது. காரணம் அவர் தனது தலையைத் தாழ்த்திக்கொண்டு கண்ணீர் வடித்ததைக் கண்டேன். என்னாலும் எனது கண்ணீரை அடக்க முடியவில்லை. நான் முன்பு ஒருபோதும் வாரி அணைக்காதவாறு எனது கைகளால் அவரை வாரி அணைத்துக்கொண்டேன். நாங்கள் இருவரும் அழுதோம். 'நான் உங்களை நேசிக்கிறேன் மாமா நான் உங்களை எப்பொழுதும் நேசிப்பேன்.' என்று நான் கூறினேன். "I Love You Uncle, I Shall always Love You."

**இன்றைய சிந்தனை :**

ஒவ்வொரு உண்மையான பெண்களின் இதயத்திலும் தெய்வீக ஜீவாலை ஒன்று வீசுகின்றது, அது பகல் பொழுதின் செழுமையான வெளிச்சத்திலே படுத்து உறங்குகின்றது. ஆனால் இடுக்கண் உண்டாகும் இருட்டுவேளையில் பொங்கி சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. ■

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி– 102

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

திருப்பாடல்களில் ஏறக்குறைய அரைப்பங்கு பாடல்கள் தாவீதரசனின் பாடல்கள் ஆகும். தவீதரசனைப்பற்றி நமக்கு நிறையவே தெரியும். ஈசாயின் எட்டாவது மகனான தாவீது வயல் வெளிகளில் ஆடு மேய்த்து வந்தான். அவனிடம் இருந்தவை ஒரு சிறு டப்பா யாழும் ஒரு கவணும் சில கூழாங்கற்களும்தான். புல்வெளிகளில் ஆடு மேய்த்த வேளையில் தனது யாழை மீட்டி இயற்கையை இரசித்து இறைவனைப் புகழ்ந்து பாடித் திரிந்தான். தனது மந்தையைக் காட்டு விலங்குகளிடமிருந்து காப்பதற்கு அவன் கையிலிருந்த கவணும் கூழாங்கற்களும் உதவின. அவனொரு விடலைப் பருவத்து இளைஞன். கடவுளின் கரம் அவனோடு இருந்தது.

இஸ்ராயேல் குலத்தை தலைமைதாங்கி வழிநடாத்த இறைவன் தாவீதைத் தெரிந்துகொண்டார். அவர் சாமுவேல் மூலமாக தாவீதை எப்படி அருட்பொழிவு செய்தார் என்பதை 1 சாமுவேல் 16ம் அதிகாரத்தைப் படித்துப்பார்த்தால் நமக்குத் தெள்ளெனத் தெரிந்துவிடும்.

பெலிஸ்தியர் இஸ்ராயேல் மக்களுக்கெதிராகப் போர் தொடுத்தனர். பெலிஸ்தியர் யூதாவிலுள்ள எபெசுதம்மில் பாசறை அமைத்தனர். சவுல் மன்னனின் இஸ்ராயேல் படையினர் ஏலா என்ற பள்ளத்தாக்கில் பாசறை அமைத்தனர்.

காத்து நகரைச் சேர்ந்த கோலியாத்து என்பவன் பெலிஸ்தியர் படையணியில் இருந்தான். அவன் ஒரு மாமிச மலை இஸ்ராயேலருக்கு எதிராக முழக்கமிட்டுத் திரிந்த அவனை தாவீது வெறுங் கூழாங்கற்களை வைத்து எப்படிக் கொன்றான் என்பது நமக்குத் தெரியும் (24:3-4). அந்தத் தாவீதின் பாடல்கள்தான் 70

இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 19ம் திருப்பாடலிலிருந்து 25ம் திருப்பாடல் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

**பொருத்தமற்ற வாக்கியத்தின்கீழ் கீறிடுக.**

1. ஆண்டவரின் திருச்சட்டம் எப்படிப்பட்டது?
1.1 நிறைவானது 1.2 புத்துயிர் அளிப்பது
1.3 கடுமையானது 1.4 நம்பத்தக்கது

2. கடவுளின் செயல்கள் எப்படியானவை?
2.1 நம்மைத் தண்டிப்பவை 2.2 நம்மைப் பாதுகாப்பவை
2.3 நமக்கு உதவி அனுப்புபவை 2.4 நமக்கு துணை செய்பவை

3. அரசருக்கு ஆண்டவர் செய்தது என்ன?
3.1 அவர் விரும்பாததை அரசருக்குத் தந்தார்.
3.2 அவர் விரும்பியதை அரசருக்குத் தந்தார்
3.3 நலமிகு கொடைகள் ஏந்தி அவரை எதிர்கொண்டார்.
3.4 அவர் தலையில் பசும் பொன்முடி சூட்டினார்.

4. கடவுள் எப்படிப்பட்டவராய் இருக்கின்றார்?
4.1 தூயவராய் இருக்கின்றார்
4.2 புகழ்ச்சிக்கு உரியவராய் இருக்கின்றார்
4.3 தீமைகளை நாடுபவராய் இருக்கின்றார்.
4.4 நம்பிக்கைக்கு உரியவராய் இருக்கின்றார்.

5. 22ம் திருப்பாடலில் கிறீஸ்துவின் பாடுகளுக்கு பொருத்தமாக அமையும் திருவசனங்கள் இவை.
5.1 என்னைச் சாவின் புழுதியில் போட்டுவிட்டீர்
5.2 என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்.
5.3 என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள்
5.4 என் சிரசில் முள்முடி சூட்டினார்கள்.

6. ஆண்டவருக்கு அஞ்சுவோர் ஏன் அவரைப் புகழ வேண்டும் ஏனெனில்
6.1 ஆண்டவர் எளியோரின் சிறுமையை அற்பமாக எண்ணவில்லை
6.2 தனது முகத்தை அவர்களுக்கு மறைக்கவில்லை
6.3 துன்புறுவோரின் துயர்துடைக்க முன்வரவில்லை
6.4 அவர்கள் மன்றாடுகையில் அவர்களுக்குச் செவிசாய்த்தார்.

7. ஆண்டவர் எனது ஆயர் அதனால் அவர் எனக்குச் செய்தது என்ன?
7.1 பசும்புல் வெளியில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
7.2 அமைதியான நீர் நிலைகளுக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்.
7.3 எனக்குப் புத்துயிர் அளிக்கின்றார்.
7.4 என்னை என் எதிரிகளின் கைகளில் ஒப்படைக்கின்றார்.

8. ஆண்டவரது மலையில் ஏறத்தக்கவர் யார்?
8.1 தூய்மையற்ற உள்ளத்தோடு ஆண்டவரை அணுகுபவர்
8.2 கறைபடாத கைகளும் மாசற்ற மனமும் உடையவர்
8.3 பொய்த் தெய்வங்களை நோக்கிக் கரங்களை உயர்த்தாதவர்
8.4 வஞ்சக நெஞ்சத்தோடு ஆணையிட்டுக் கூறாதவர்.

9. ஆண்டவருக்கு அஞ்சி நடப்போருக்குக் கிடைக்கும் நன்மைத் தனங்கள் என்ன?
9.1 அவர் நலமுடன் வாழ்வார்
9.2 தாம் தெரிந்துகொள்ளும் வழியைக் கற்பிப்பார்.
9.3 அவரது தீச்செயல்களை ஆண்டவர் கண்டுகொள்ளமாட்டார்.
9.4 ஆண்டவரின் நட்புறவு அவர்களுக்குச் சொந்தமாகும்.

10. தாவீதரசன் தான் குற்றமற்றவன் என்பதை எப்படிச் சொல்கின்றார்?
10.1 நான் பொய்யரின் நடுவில் அமர்வதில்லை
10.2 வஞ்சகரோடு சேர்வதில்லை
10.3 தீயோரின் மன்றத்தை நான் வெறுக்கின்றேன்
10.4 மாசற்றவனாய் என் கைகளைக் கழுவுகின்றேன்.

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 100இற்கான கேள்விகளுக்கு 32 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

*பி. மதுஷாளினி, மடுக்கோயில், மடு.*

## போட்டி 100 இற்கான சரியான விடைகள்

1. இகழ்வாரின் குழுவில் அமர்பவர் (1:1-2)
2. தம் செயல் அனைத்திலும் வெற்றிபெறாதிருப்பார். (1:3)
3. அவர்களுக்கு உற்சாகமூட்டுகின்றார். (2:4-5)
4. உங்கள் ஆட்சிபற்றி பெருமைகொள்ளுங்கள். (2:10-11)
5. தன் மகன் அப்பலோவிடமிருந்து தப்பியோடியபோது (3ம் பாடல்)
6. தீமைகளுக்குத் துணைபோகும் கடவுளாக (4ம் பாடல்)
7. நன்றிப் பாடல் பாடுவோருக்கு இடமில்லை (5ம் பாடல்)
8. ஆண்டவரே என்னைவிட்டு அகன்று போய்விடும் (6ம் பாடல்)
9. நான் நீதியோடு அரசாண்டிருந்தால். (7ம் பாடல்)
10. மனிதனைத் தன் மனம்போன போக்கில் வாழவிட்டார்.

## பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. எஸ். மெலானி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
2. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
3. அ. அமுதினி சில்வா, கற்கிடந்த குளம், முருங்கன்.
4. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை.
5. எம். நாதன், எமில்நகர், மன்னார்.
6. Sr. வேஜினியா, திருச்சிலுவை கன்னியர் மடம், தெரணியகல.
7. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
8. யே. ஜெஸ்மின், பள்ளக்கமம், முருங்கன்.
9. அ. அருள்மேரி, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.
10. யே. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.115

## 2 சாமுவேல் 1 – 15 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ★ | 05 | 01 | | 03 | 07 | | | 14 | 11 |
| 17 | ★ | | 02 | | | 06 | | | |
| | | ★ | | 08 | | 09 | 12 | | |
| | | | ★ | | 10 | | | | |
| 19 | | 22 | | ★ | | 15 | | | |
| | 20 | | | 18 | ★ | | | 31 | |
| | 24 | 25 | 21 | ★ | | | | | 13 |
| | | | ★ | 30 | | | | 16 | |
| | 26 | ★ | | | | | | | 29 |
| 23 | ★ | 28 | | | | 27 | | | |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அப்சலோம் தனக்கென ............... தேரையும் குதிரைகளையும் தனக்கு முன்பாக ஓட ஐம்பது ஆட்களையும் அமர்த்திக் கொண்டான்.
2. அபியத்தார் மகன் அகிமெலக்கும் ............... க்களாகவும் செராயா செயலராகவும் பணியாற்றினார்.
5. ............... எங்கிருந்து வருகிறாய்?
7. சவுலின் மகள் மீக்காலுக்குச் ............ வரை குழந்தைப்பேறு கிட்டவில்லை.
8. நீரும் உம் விருப்பப் .............. ஆட்சிபுரியலாம்.
10. என் கண் ............... னே அவள் உணவு தயாரிக்கட்டும்.
19. இஸ்பொசேத்தின் தலையை எபிரோனில் இருந்த தாவீதிடம் கொண்டு ............... கள்.
27. அவர்கள் ............... செல்வர். 28. .......... எதிர்த்துச் செல்லவேண்டாம். 30. என்மீது நின்று என்னைக் ...............
9. நீ துக்கம் கொண்டாடுபவளைப்போல் ..................
13. தாவீது அனைத்து ................ மீதும் ஆட்சி புரிந்து நீதியும் நேர்மையும் விளங்கச் செய்தார்.
15. ஆண்டவர் என் எதிரிகளை ............... கண் முன்னே தகர்த்தெறிந்தார்.
16. ஏழையிடம் ஓர் ஆட்டுக்குட்டி தவிர வேறு ஒன்றுமே .............
18. ................. முன்பாக நடனமாடிக்கொண்டிருந்தார்.
27. அவன் கீழே .............. கால் முடமானான்.
29. அபியத்தார் மகன் அகிமெலக்கும் குருக்களாகவும் செராயா செயலராகவும் ...............
31. யூத குலத்தார் தங்கள் அரசனாக என்னைத் திருப் .......... செய்துள்ளனர்.

### மேலிருந்து கீழ்

1. பேழையை ............. புதிய வண்டியில் வைத்துக்கொண்டு வந்தார்கள்.
3. அப்னேர் ........ ஆள்களோடு தாவீதைக் காண எபிரோன் வந்தான்.
10. உம் கண் ................ கருணை பெற்றுவிட்டேன்.
11. தாவீது ஆண்டவர் ............. குதித்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டு அவரைத் தன் உள்ளத்தில் வெறுத்தாள்.
12. உடனே ............... தரையினின்று எழுந்தார்.
13. அவர்களின் ............... புதல்வர்களும் அதாவது சாதோக்கின் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானும் இருக்கின்றனர்.
14. யோனத்தானுக்கு மெபிபொ ................ என்ற மகன் ஒருவன் இருந்தான்.
17. தாவீதிற்குப் பெற்றெடுத்த குழந்தையை ................ தாக்க அது நோயுற்று சாகக்கிடந்தது.
24. உம் அடியவள் எண்ணப்படி .................. தலைவராம் அரசரின் வார்த்தை எனக்கு அமைதி தரும்.
25. அவரிடம் நீ இவ்வாறு .................. வேண்டும்.

### கீழிருந்து மேல்

2. அரசமாளிகையிலிருந்து நீ கேட்கின்ற அனைத்தையும் ............ சாதேக்கிடமும் அபியத்தாரிடமும் எடுத்துச் செல்.
10. உன் மகனின் ஒரு ............... கூடத் தரையில் விழாது.
12. மேளம் ............. ஆகியவற்றோடும் ஆண்டவருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு வந்தனர்.
13. ஒருவன் பெயர் பானா. மற்றவன் பெயர் .................
15. ................ முகத்தில் விழிக்காதே என்று மறுமொழி கூறினார்.
16. சவுலின் மகன் ............... நிலைகுலைந்தான்.
20. கிழிந்த ஆடைகளோடு புழுதிபடிந்த தலையோடும் ஒருவன் ..........
21. அப்போது ஒரு ............... குளித்துக்கொண்டிருந்ததை தாவீது மாடியிலிருந்து கண்டார்.
23. போர் முனையில் வீரர் எங்ஙனம் வீழ்ந்து .................
26. "............... உன்னிடம் கேட்பது எதற்கும் மறைக்காமல் பதில் சொல்!"
22. மாபேசு கிலயாதின் ஆட்கள் ............... சவுலை அடக்கம் செய்தார்கள் என்று அவர்கள் தாவீதிடம் கூறினர்.

### வலமிருந்து இடம்

2. அங்குக் ....... சாதோக்கும் அபியத்தாரும் உன்னோடு இருக்கின்றனர்.
6. எனக்காகக் ............... மரங்களால் ஒரு கோவில் கட்டாததேன்?
8. ஆண்டவரின் எதிரிகள் அவரை இழிவாக எண்ணும் ............... நீ இவ்வாறு செய்தால் ___ சொன்னார்.


## செபமாலைக் கன்னியராக இறைவன் உன்னை அழைக்கின்றார்

எம் இனிய இள நங்கையர்களே!
நற்கருணை நாதர் பாதம் அமர்ந்திருந்து
இதயம் தேடும் இறைவனை சுவைத்து
சீரழியும் எமது சமுதாயத்திற்காய் செப தபம் செய்து
இறைவனிடம் பரிந்துரைக்கும் வீரமுள்ள
சாட்சிய வாழ்வு வாழ
எம் மண்ணில் மைந்தர் தவத்திரு தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைக்கன்னியர் சபை உங்களை அழைக்கின்றது.

தகமை : க.பொ.த உயர் தரம், க.பொ.த சாதாரண தரம்

### *தொடர்புகொள்ளவேண்டிய முகவரி*

*செபமாலைக் கன்னியர் ஆச்சிரமம்*
*அமலிவனம், அச்சுவேலி*
*T.P : 0213217207*

*செபமாலைக் கன்னியர் ஆச்சிரமம்,*
*பட்டிம், மன்னார்,*
*T.P : 0232222721*

*செபமாலைக்கன்னியர்,*
*தோமா ஆச்சிரமம்,*
*பாண்டியன்தாழ்வு*
*T.P : 0212223388*

*செபமாலைக்கன்னியர்,*
*சென்.அன்ரனி ஆச்சிரமம்*
*முல்லைத்தீவு வீதி*
*பரந்தன்.*


## எல்லார்க்கும் மறைக்கல்வியின் .....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிலையில் கடவுளின் மீட்புச் செயலின் பங்கேற்பாளர்களாக இறைமக்கள் தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ்ந்துகாட்ட இந்த எல்லார்க்கும் மறைக்கல்வியின் ஏழு படிகள் உதவும் என நம்புவோம்.

இது மிக அவசியமானது. காரணம் எல்லாக் கிறிஸ்தவரும் முழு நம்பிக்கையாளராக வளர பயிற்றுவிக்கப்படுகிறோம். எனவேதான் தொடக்க முதல் இது இறைமக்கள் சமூகத்தின் மையமாக உள்ளது.

அருட்பணி. பாப் ஹேற்டர் என்பவர் பின்வருமாறு சொல்கிறார்.." நமது மறைக்கல்விச் செயல்பாடுகள் பழமையானவையாகவும், உற்சாகம் குன்றினதாகவும் இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நமது பங்குகள் எந்த அளவுக்கு செயல்படவேண்டுமோ அப்படிச் செயல்படவில்லை என்று பொருள்" இதுதான் நமது இன்றைய நிலை!

## அதிர்வுகள் ....

10ஆம் பக்கத் தொடர்ச்சி

### ஒருமித்து ஒத்திசைவாக ஓங்கி ஒலிக்கவேண்டும்:

எழுபத்தைந்து பேர் அடங்கிய சிவில் சமூக அமைப்பு ஒரு நல்ல ஆக்கபூர்வமான முயற்சி. இவர்கள், விழிப்போடும் விவேகத்தோடும் தொடர்ந்து இடைவிடாமல் இயங்கிக்கொண்டு இருக்கவேண்டியவர்கள். எல்லாக் குரல்களும் இனி ஓங்கி ஒலித்துக் கொண்டு இருப்பது மட்டும் போதாது, ஒருமித்து ஒத்திசைவாக ஓங்கி ஒலிக்கவேண்டும் என்பதுதான் எங்களின் - மக்களின் இந்நாட்களின் மன்றாட்டு.

உண்மையில், எம் உரிமைகளுக்கான குரல் இக்காலத்தில்த்தான் இன்னும் வீரியமாக விஸ்வரூபம் எடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு மட்டும் ஒன்றைத் தருகிறேன்: "தமிழர்களுக்கு அக சுயநிர்ணய உரிமையுண்டு. அதனடிப்படையில் தமது பரம்பரைப் பிரதேசங்களில் வாழ்கின்ற தமது மக்களை ஆள்வதற்கும், தமது மக்களை முன்னேற்றுவதற்கும் இயற்கையான உரிமையுண்டு. இது இலங்கையின் அரசியலமைப்பில் மாற்றப்பட முடியாமலும், அழிக்கப்படாமலும் இருக்கவேண்டும்" என மன்னார் ஆயர் உரத்து உரைத்து இருக்கிறார். இனியென்ன ஒருமித்து ஒத்திசைவாக ஓங்கி ஒலிக்கவேண்டியதுதானே.

### சத்தமில்லாத யுத்தம்!

இன்று, சத்தமில்லாத யுத்தம் ஒன்று பல முனைகளில் உச்ச வீச்சில் - போர்க்கால 'செல்' வீச்சைவிட மோசமாக - நடைபெற்றுக்கொண்டிருக்கிறது! இச்சத்தமில்லாத யுத்தத்தில் உடனடியான உயிர்ச்சேதங்கள் இல்லைத்தான். ஆனால், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, நிலம், உரிமை, சர்வதேச உறவு என எம் வாழ்வோடு தொடர்புடைய அம்சங்கள் அனைத்தும் பெரும் சிதைவுக்கு - பறிப்புக்கு - அழிவுக்கு உள்ளாகி வருகின்றன. இச்சவால்களைச் சந்திக்க, எதிர்கொள்ள, முறியடிக்க ஆடுகளாகிய எங்களுக்கு ஆயன்களே! தொடர்ந்து வழிகாட்டுங்கள்.

**(தொடர்ந்து அ...தி...ரு...ம்...)**


### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 113ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
அ. கில்டா,
கட்டையடம்பன், மடுறோட்.



**இரண்டாம் பரிசு:**
Sr. வேஜினியா,
திருச்சிலுவைகன்னியர் இல்லம், தெரணியகல.

**மூன்றாம் பரிசு:**
என். அஜந்தன்,
புனித சூசையப்பர் குருமடம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 60 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 55 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 113ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. பா. யசோதரராஜ், இத்திக்கண்டல், அடம்பன்.
2. அ. கரோலினி, 41, புனித மரியாள் வீதி, திருகோணமலை.
3. மே. பிறோ கிறிஸ்ரோபர், 18, கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
4. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
5. எஸ். டிசியா குலாஸ், புனித பவுல் வீதி, தாழ்வுபாடு.
6. ஜெ. சுமணா பிகிறாடோ, இல 201/17, பள்ளிமுனை மேற்கு.
7. பா. துஷ்யந்தி, இத்திக்கண்டல், அடம்பன்.
8. வை. அன்ரனி டிலைக்ஷன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
9. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலய வீதி, தோட்டவெளி.
10. இ. மகிந்தன், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, மன்னார்.
11. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
12. ம. யஸ்ரீன் பிரபாகர், பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
13. வை. அன்சி பெர்ணான்டோ, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
14. எ. மேரி, வேதசாட்சி கோவில், தோட்டவெளி.
15. ப. நிறோமி, அடம்பன்.
16. எ. சகாய றாஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
17. அ. அருள்மேரி, இல : 162, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.
18. பா. சுலியானம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
19. என். ஜஸ்மின், முதலியார் குளம், செட்டிகுளம்.
20. திருமதி. றெஜினா ஸ்ரனிஸ்லொஸ், 104, பெற்றா, மன்னார்.
21. எஸ். மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
22. யோ. எலிசபேத்தம்மா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
23. பா. ஜொசின்ரன், இத்திக்கண்டல், அடம்பன்.
24. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
25. ஜெ. றேபனா, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, மன்னார்.
26. எ. மேரிடெல்மா, வெல்கம் லேன், பாலையூற்று, திருகோணமலை.
27. எஸ். ஆனந்டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
28. நோ. ஆன் யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
29. யூ. மரியப்பிள்ளை, இத்திக்கண்டல், அடம்பன், மன்னார்.
30. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
31. இ. அகர்சன்வாஸ், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
32. சி. நோயல் கிறிஸ்ரிறோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
33. எஸ். டிரோசன் குலாஸ், பவுல் வீதி, தாழ்வுபாடு.
34. அ. டினேஸ் லியோன், அரிப்பு.
35. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
36. ச. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
37. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
38. ப. மேரி ஜீவிதா துரம், பறப்பாங்கண்டல், சிறுக்குளம்.
39. வை. டெஸ்மன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
40. எம் திரேசா, எமில் நகர், மன்னார்.
41. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
42. பி. நாதன் மெல்சி டயஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
43. எஸ். பிரான்சிஸ் ரமா, தலைமன்னார். கிராமம்.
44. ப. ஜெனார்த்தன், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
45. சுமன் டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
46. எஸ். நிஷாளினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
47. எம். ஜெயதாஸ், புதுக்கமம், உயிலங்குளம்.
48. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
49. திருமதி. ஜெ. திலிபா, புதுக்கமம், உயிலங்குளம்.
50. குணமணி சேவியர், திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.

## இல.113 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பு[1] | ல் | க[37] | ணா | தூ[11] | சா[4] | க் | கு[19] | ன் | நா[6] |
| கை | நூ[17] | டி | தெ[36] | ய | றை | ✱ | ச் | அ[16] | ன் |
| ல | ✱ | ன | ரு | ணி | ம[23] | லை | சி[21] | ட் | சா[20] |
| அ[18] | து | ல | ல் | கொ[22] | க[32] | பா[34] | ஓ[13] | ய் | வு |
| செ[35] | வி[15] | ல் | க[38] | ✱ | வ | அ[14] | ர | ச | ன் |
| ய் | லை | வ்[5] | ள | மை | ச | மு[10] | டி | சூ[31] | ✱ |
| ஆ[27] | டை | அ[26] | ப[8] | டு | ம் | தோ | சோ[25] | ளி | ஒ[24] |
| ✱ | ட் | தி | னி | ன | கொ[9] | லை | கு | ✱ | ள் |
| று | ஏ[28] | ல் | யி | வா[33] | ✱ | ல் | கோ[30] | தி[7] | ரு |
| மா[2] | றி | ற் | வெ[29] | ம் | ட | இ[12] | தோ | ந் | அ[3] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.114ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



### கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை 4,500/=
கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 08 1926



உதிர்வு 06 02 2007

துறவு 06.09.1947

### அமரர் அருட்தந்தை சல்வடோர் சாமிநாதன் சோசை


*"நான் உமது பேரன்பில் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். நீர் அளிக்கும் விடுதலையால் என் இதயம் களிகூரும்" (சங் 13:5)*

எளியவர்க்கு நற்செய்தி அறிவித்திட
எளிமை வாழ்வை இன்பமுடன் ஏற்று
ஆண்டுகள் அறுபது ஆண்டவன் அடியானாய்
அர்ப்பணிப்புடன் செய்த அருட்பணிக்காய்
பரிசாக விண்ணக வாழ்வு தனையே
வழங்கிட வேண்டுகின்றோம் - எம் இறைவா!

*தகவல் : குடும்பத்தினர், வங்காலை, மன்னார்.*

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 08 1960



உதிர்வு 28 02 2007

### திரு . கிறிஸ்தியான் ராஜகோன்

(கோட்டக்கல்வி அதிகாரி, மடு)

*"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோமர் 14:8)*

இறைபதம் இணைந்து ஐந்தாண்டுகள் உருண்டோடியும்
எம் இதய ஓலங்கள் ஓயவில்லை அப்பா.
மழலை மொழி கேளா மாக்கள் உம்மை
மாயமாய் மறைத்தனரோ
உம் அன்பின்றி இவ்வுலகில் எரிநெருப்பில் வேகுகின்றோம்.
உம் ஆன்ம சாந்திக்காய் உயிர்ப்பளிக்கும் இறைவனிடம்
மூவிரு வழிகளால் கண்ணீர்த்துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.
உம்மைந்தர் எம்மவர்க்காய் இறைவனிடம் வேண்டுமப்பா
*என்றும் உம் நினைவுகளோடு*
*அன்பு மனைவி, அருமை மைந்தர்கள்.*

## 2 1/2 ஆண்டு நினைவஞ்சலி — 2ம் ஆண்டு நினைவஞ்சலி





**ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை** — **திறினிற்றி அன்ரன் கமலநேசன்**

**கொன்வென்ற் வீதி, மன்னார்.**

| | |
|---|---|
| மலர்வு 27.08.1945 | மலர்வு 29.04.1952 |
| உதிர்வு 06.08.2009 | உதிர்வு 08.02.2010 |

**" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான"**(யோவா 11:25)


இவர்களின் பிரிவால் துயருறும்.

| | |
|---|---|
| மகள் அருணி,பெறாமக்கள், சகோதரி, சகோதரன், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்,மைத்துனிகள், | பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரி, சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், மைத்துனிகள், |

மற்றும் உற்றார் உறவினர்,நண்பர்கள். (லண்டன், பிரான்ஸ்)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 02 1971



உதிர்வு 01 03 2011

### திரு . துரைசிங்கம் கிறிஸ்ரி செபமாலை (சொர்ணம்)

கள்ளியடிப்பிட்டி, நறுவிலிக்குளம்

*"சீவியத்தில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் உம்மை மறவோம்"*

அன்போடும் ஆதரவோடும் அள்ளித்தந்து அரவணைத்தீர்கள். எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு ஆறுதல் தேடி சென்றுவிட்டீர்களே அப்பா! வருடம் ஒன்று ஓடிவிட்டது. அநாதைகளாகி ஆறுதல் இன்றி பரிதவிக்கின்றோம் அப்பா. எங்களை பரிதவிக்கவிட்டுவிட்டு எங்கு அப்பா சென்றீர்கள்? உங்கள் ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில் அமைதியுடன் இளைப்பாற வேண்டி மன்றாடிநிற்கும்.

*அன்பு மனைவி, பிள்ளைகள்.*

## மன்னார் மண்ணின் மகன்....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு. கிளனி அவர்கள் இரண்டு வயதில் நாட்டுப் பிரச்சினையின் காரணமாக தனது பெற்றோருடன் பிறந்த நாட்டை விட்டு இடம்பெயர்ந்து அயர்லாந்து நாட்டுக்குச் சென்றார். அங்கு தனது சிறுபராயக் கல்வியை முடித்துக்கொண்டு லண்டன் மாநகர் வந்து உயர்கல்வியை முடித்து பல்கலைக்கழகம் சென்று முதுமாணிப்பட்டம் பெற்று கணக்காளராக ஒரு வருடம் லண்டன் வங்கியில் பணியாற்றினார்.

இளவயதிலிருந்தே விமான ஓட்டுனராக வரவேண்டுமென்ற ஒரே ஆசையில் தனது வங்கி வேலையை நிறுத்திவிட்டு விமான ஓட்டுனர் பயிற்சியை முன்னெடுத்து பிரித்தானியாவிலும், நியூசிலாந்திலும் பயின்று சித்தியடைந்தார். பயிற்சி முடிவடைந்த ஒரு மாதத்தில் ரெயான் எயார் (Ryan Air Company) என்ற விமான நிறுவனத்தில் விமான ஓட்டுனராக தெரிவுசெய்யப்பட்டு இவ்வாண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து ஐரோப்பாக் கண்டத்திற்கும், மத்திய நாடுகளுக்குமாக பறந்து வருகின்றார்.

இவரை அன்புப் பெற்றோர், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள் நானாட்டான் பங்கு மக்கள் யாவரும் வாழ்த்தி நிற்கிறார்கள்.

தகவல்: லண்டனிலிருந்து இவரது அன்புப் பெரியப்பா அருட்திரு. சேவியர் குமாரசிங்கம் ஞசைநாயகம்.

## தமிழ் கட்சிகளின் ஒற்றுமையானது .......

5ஆம் பக்கத் தொடர்ச்சி

அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களோடு காலத்திற்கு காலம் உரையாடி இருந்ததாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆழ்ந்த யோசனையின் பின்னர் பகிரங்க வெளிப்படுத்தல் ஒன்றைச் செய்ய தீர்மானித்ததாகவும் தமிழ் சிவில் சமூகத்தின் சார்பில் எழுதியுள்ள கடிதத்தில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

எந்த ஒரு அரசியல் உள்நோக்கு இல்லை என்பது சிவில் சமூகத்தின் அறிக்கை தேர்தலை முன்வைத்து முன்வைக்கப்பட்ட ஒன்று அல்ல என்பதில் இருந்து தெளிவாவதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே அரசாங்கத்துடன் பேசுவதற்கான மக்கள் ஆணையை தம்மகத்தே கொண்டவர்கள் என்பதால் தாம் பெற்ற ஆணையின்பால் அவர்கள் செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. இதனை சொல்வது எவ்வாறு ஒற்றுமைக்கு குந்தகமாக அமையும் என்பதனை தம்மால் விளங்கிக்கொள்ளமுடியவில்லை என தமிழ் சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒற்றுமை என்ற வெற்றுக்கோஷத்தில் எந்தப் பலனும் இல்லை எனவும் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமை தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்துவதாக அமைய வேண்டும் எனவும் தமிழ் சிவில் சமூகம் வலியுறுத்தியுள்ளது.

எந்த மக்களுக்காக அரசியல் செய்யப்படுகின்றதோ அந்த மக்களுடன் தொடர்ச்சியாக அரசியல் உரையாடல் ஒன்றை செய்யும்போதே அரசியல் உண்மையானதாகவும் மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தம்மோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச முன்வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டுள்ள தமிழ் சிவில் சமூகம், அந்தச் சந்திப்பு விரைவில் இடம்பெறும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## காசாக்கப்படும் கல்வி .. 2ஆம் பக். தொடர்

கல்வி என்பது வியாபாரப் பொருளாக மாறிவிட்டது. இது நீதியா என்பதை ஆசிரியர் சமூகம் உணர்ந்து பார்க்க வேண்டும். அதே நேரம் இதை நடத்துபவர்களும் சிந்திக்க வேண்டும். இன்னும் ஒரு பத்து வருடங்களின் பின்னர் ரியூசன் சென்ரர்களில்தான் மாணவர்களைக் காண முடியும். பாடசாலைகளில் நம்பிக்கை இழந்து போகின்றபடியால் பாடசாலைகள் மூடப்படும் அபாயமும் உண்டு. அத்தோடு பணம் கொடுத்து ரியூசனுக்கு போகமுடியாத மாணவர்கள் பாடசாலைகளில் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையைதான் தொடர்ந்து காணமுடிகிறது.

பெற்றோர்களும், சமூகத் தலைவர்களும், புத்தி ஜீவிகளும் தூங்குவதுபோல தோன்றுகின்றது. விழிப்படைய வேண்டிய நேரம் இது. இந்த சமூகத்தைக் காப்பாற்றுவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

**மதங்கள் உணர்த்தும் வழி**
**மனங்களை உயர்த்தும் வழி**

## ஒரு குழந்தை தாயின் வயிற்றில் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கருக்கலைப்பைச் சட்டமாக்குவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியையும் தாங்கள் புறக்கணிப்பதாக ஆயர்களின் அறிக்கை மேலும் கூறுகின்றது. இலங்கையில் கருக்கலைப்பு சட்டப்படி அங்கீகரிக்கப்படவில்லை. எனினும் அண்மைக்கால ஆண்டுகளில் இலங்கையில் கருக்கலைப்பு அதிகரித்திருப்பதாக இலங்கை நலவாழ்வு அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட குடும்பநல அமைப்பு தெரிவிக்கின்றது. 2008ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 700 வீதம் இடம்பெற்ற கருக்கலைப்புக்கள் 2011ஆம் ஆண்டு ஆயிரமாக உயர்ந்ததாகவும், தலைநகர் கொழும்பில் மட்டும் சுமார் 500 கருக்கலைப்புக்கள் வீதம் இடம்பெறுவதாகவும் சொல்லப்படுகின்றது.

## தேசிய விருதுபெற்ற ....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

வெற்றியாளர்களுக்கான சான்றிதழும் பணப்பரிசும் அமைச்சர் கௌரவ வாசுதேவ நாணயக்கார அவர்களினால் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது வழங்கப்பட்டன.

மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் ஆசிரியருமான திரு. எஸ். ஏ. ராஜன் குரூஸ் London Bradford University இன் பட்டப் பின் டிப்ளோமா பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் டெய்லி நியூஸ் போன்ற ஆங்கில பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை எழுதிவருகின்றார். தற்போது மன்னார் வலயக் கல்விப் பணிமனையால் ஆங்கில வளநிலைய மேற்பார்வையாளராக இணைக்கப்பட்டுள்ள இவரை வாழ்த்துவதில் 'மன்னா' மகிழ்ச்சியடைகிறது.

கத்தோலிக்க திருச்சபையின் பணிகளால் ஈர்க்கப்பட்டு

## திருமறையைத் தழுவிய இந்தியக் காவல்துறை உயர் அதிகாரி

கத்தோலிக்க திருச்சபை ஆற்றிவரும் உயர்ந்த பணிகளால் ஈர்க்கப்பட்டதால்தான் கத்தோலிக்கத் திருமறையை தான் தழுவியதாக இந்தியக் காவல்த்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

கத்தோலிக்க அருட்பணியாளர்களும், அருட் சகோதரிகளும் செய்துவரும் பல்வேறு பணிகள், முக்கியமாக எயிட்ஸ் (HIV) நோயால் பாதிக்கப்பட்டோர் நடுவில் அவர்கள் செய்துவரும் பணிகள், யாரும் செல்ல முடியாத கிராமங்களில் ஏழைக் குழந்தைகளுக்கு ஆற்றும் கல்விப்பணிகள் ஆகியவை தன்னைப் பெரிதும் ஈர்த்ததென்று காவல்த் துறையின் இணை இயக்குனர் அருணா பகாகுணா (Aruna Bahaguna) கூறினார். தான் ஒரு கத்தோலிக்கராக மாறியபின், உலகை நோக்குவதிலும், தனது பணிகளைச் செய்வதிலும் புதிய கண்ணோட்டம் தனக்கு உருவாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

குற்றவாளிகளை இரக்கக் கண்ணோட்டத்துடன் தன்னால் பார்க்க முடிவதாகவும், அவர்களது நிலையில் தன்னை இருத்தி பார்ப்பதால் அவர்கள் திருந்தி வாழும் வழிமுறைகளில் அதிக கவனம் செலுத்த முடிகிறது என்றும் அந்த காவல்த்துறை உயர் அதிகாரி மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் முயற்சியில் 'மன்னா' வெளியீடாக வந்துள்ளன

# இரண்டு சிலுவைப் பாதை நூல்கள்

## அன்பின் அதிர்வுகள்

(வளர்ந்தோர் சிலுவைப் பாதை)

## சிலுவையின் பாதையில் சின்னக் காலடிகள்

(சிறுவர் சிலுவைப் பாதை)

அருளின் காலமாகிய இத்தவக்காலத்தில் சிலுவைப்பாதைப் பக்திமுயற்சியை சிறப்பாக மேற்கொண்டு ஆண்டவர் இயேசுவினுடைய பாடுகளின் பாதையில் பயணிக்க உங்களுக்கு துணையாக வெளிவருகின்றது இச்சிலுவைப் பாதை நூல்கள். மன்னா பத்திரிகை விநியோகஸ்தர்களிடமிருந்தும், கத்தோலிக்க விற்பனைக்கூடங்களிலும் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

## வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்

கிறிஸ்தவ தவக்கால மரபுவழி துன்பியல் பாடல்களும் வியாகுல பிரசங்கமும் முதன்முறையாக ஓரே இறுவெட்டில் (MP3ஆக) ஆ.ம.தி வெளியீடாக வெளிவந்திருக்கிறது. கிறிஸ்தவ பாரம்பரியத்தில் காணப்படும் தாழிசை, விருத்தம், ஒப்பாரி, புலம்பல், துக்கராகம், பிராத்தனை போன்ற காலத்தால் அழியாத இராகங்களில் அமைந்த இப்பாடல்கள் தவக்காலத்தில் இறைமக்கள் செப, தப, தியானங்களில் ஈடுபட உதவியாக இருக்கின்றன. புதிய இசையுடனும் பிறபாட்டுடனும் வெளிவருவது இதன் சிறப்பமசமாகும். மேலும் தவக்காலத்தில் பொதுவாக வீடுகளில், ஆலயங்களில் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் வியாகுல பிரசங்கமும் இதனோடு இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பாடல்களையும் பிரசங்கத்தையும் ஈழத்தின் பிரபல கலைஞர்களான 'கூத்திசைக் காவலன்' செபமாலை (குழந்தை) அவர்களும், கலாபூசணம் செ.மாசிலாமணி (பிலேந்திரன்) அவர்களும் பாடியுள்ளார்கள். இவ்விறுவெட்டிற்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்களும், அருள்கலாநிதி எஸ். எம். செல்வரெட்ணம் (கரவையூர் செல்வம்) அவர்களும் முறையே வாழ்த்துரை, ஆசியுரை, அணிந்துரை அளித்திருக்கிறார்கள். இப்பாடல்களுக்கும் பிரசங்கத்திற்கும் முன்னுரைகளை தமிழ்நேசன் அடிகளும், ஜெயந்தன் (அமதி) அடிகளும் வழங்கியிருக்கிறார்கள். இவ்விறுவெட்டுக்களை யாழ். வளனகத்திலும், யாழ் ஆச்சிரமத்திலும், மன்னார் வளனகத்திலும், கொழும்பு சுகுமார் ஸ்ரோஸ் போன்ற இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 09 † 08 † 1928

உதிர்வு 08 † 03 † 2011

### மனுவல் மிக்கேல் பெரேரா (தம்பு)

### பள்ளிமுனை

பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் சிகரமாய்
எம்மை நெறிப்படுத்திய
எம் தந்தையே!
கண்ணீர் மல்கி கலங்கி
இருகரம் கூப்பி
உமது ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள் நினைவு



மலர்வு 01 † 02 † 1954

உதிர்வு 25 † 01 † 2012

### அமரர் லோறன்ஸ் ஞானசேகரம்

### பெற்றா. மன்னார்.

"ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப்பெறுவர்"

எங்கள் அன்பான அப்பா,
நீங்கள் இறையடி சென்று 31 நாட்கள் கடந்துவிட்டன. ஆனால் எம் இதயத்தில் உங்கள் பிரிவின் வடு அணு அளவுகூட குறையவில்லை. இதுவரை காலமும் நீங்கள் செய்த நன்மைகள் சொல்லி மாழாது. நாம் பூரித்து இருக்கையில் நீங்கள் திடீர் என்று எம்மைவிட்டு இறைபதமடைந்தீர்களே! உங்கள் பிரிவால் துடிதுடித்து செய்வதறியாது பரிதவித்து நிற்கின்றோம்.

மனைவி, மகள், உறவினர்.

# திருமண யூபிலி

## இணைபிரியா இல்லறவாழ்வில் 25 வருட நிறைவு



### திரு. திருமதி. யோகரட்ணம் ஞானம்மா

அலைகடலோரமதில் அழகுறவே அமைந்திருக்கும்
தலைமன்னார் எனும் பதியில்
கோவில் கொண்டெழுந்தருளி
அனுதினமும் அருள்பாலிக்கும்
புனித லோறன்சியார் காவலிலே வசிக்கின்ற
தம்பதியர் யோகரெட்ணம் ஞானம்மா என்பவர்கள்
இல்லறவாழ்வில் இணைந்து இருபத்தைந்தாண்டுகளை
இறைவன் கிருபையினால் நிறைவுசெய்வதையிட்டு
உறவுகள் யாம் ஒன்றிணைந்து வாழ்த்துகின்றோம்.
உற்றமும் சுற்றமும் எந்நாளும் உமைவாழ்த்த
ஒற்றுமையாய் எப்போதும் நல்வாழ்வு நீர் வாழ
வாழ்த்தி நிற்கும்.

அன்பு அம்மா றோசலின் பாசமிகு மகள் டிலினி,
பேறா மக்கள் சுகந்தன், சுயோ, பிறீஸ்
Fr. கிளறன்ஸ் (இத்தாலி) Fr. பெனோ,
நோர்வேயில் வசிக்கும் அன்புத்தங்கை சந்திரா சாள்ஸ் குடும்பம், சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார், மச்சிமார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 19 † 10 † 1956

உதிர்வு 16 † 02 † 2011

### யேசுதாசன் மேரி றோஸ்


### உமனகரி

என் தாயே நீயேன் மரணித்தாய்
அன்புக்கு வித்தாய் பண்புக்கு முத்தாய்
பாசத்துக்கு சொத்தாய் பரிவுக்கு கொத்தாய்
மேரி எனும் இறைமகன் தாயாய்
நாமம் பூண்ட என் தாயே
என்றும் நீ எனது இதையத்தாய்
ஏழேழு பிறவியிலும் நீ என் தாயே
உன் மகன் நான்!
தந்தையுள் நீங்காத நினைவில் நிலைத்து நிற்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்: அன்புக் கணவர் யேசுதாசன்
பாசமிகு தவப் புதல்வன் யே. பிரசாந்

தகவல் : யே. ஒகஸ்தீன் பிரசாந் உமனகரி,நானாட்டான்.

## 6ம் ஆண்டு நினைவு



| திருமதி. இந்திரா அல்பிறட் | திரு. அல்பிறட் விஜயரட்ணம் |
|---|---|
| மலர்வு : 26.05.1950 | மலர்வு : 10.07.1943 |
| உதிர்வு : 01.02.2006 | உதிர்வு : 02.01.2006 |

பாலைக்குழி, அடம்பன், மன்னார்.

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி பண்பாய், நேசமாய், பாசமாய் அரவணைத்து உயர்வாழ்வு தந்த அம்மா, அப்பாவே உங்கள் ஆன்மா சாந்திபெற உளமாற வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# பிறந்த நாள்

## 100 வது பிறந்த நாள் வாழ்த்து






01.02.2012

### திருமதி அக்னேஸ் றூத் தம்பிநாயகம்

திருமதி அக்னேஸ் றூத் தம்பிநாயகம் அவர்கள் 01.02.2012 அன்று தனது 100வது பிறந்தநாளை பம்பலப்பிட்டியில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.
இவர் காலஞ்சென்ற றூடேன் பிலிப்புப்பிள்ளை கிறிஸ்ரி தம்பிநாயகம் (முன்னாள் மாநகர கொமிசினர் மட்டக்களப்பு) அவர்களின் மனைவியும்,
காலஞ்சென்றவர்களான றூடேன் ஜோசப் பிலிப்புப் பிள்ளை, சிற்றி சிறில் பிலிப்புப்பிள்ளை, பயஸ் பிலிப்புப்பிள்ளை, வணபிதா டைனிசியஸ் பிலிப்புப்பிள்ளை, ஜேம்ஸ் பிலிப்புப்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார். இவரை பல்லாண்டு காலம் வாழ பிள்ளைகள், உற்றார், உறவினர் வாழ்த்துகின்றனர்.

தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, மருமகன், லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கறிற்றாஸ் – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.